ஊழியத்தின் பாதையிலே

(என் 17 ஆண்டுகால ஊழியத்தில் நான் கண்ட, எதிர்கொண்ட பல அனுபவங்கள் எவ்விதத்திலாவது உங்களுக்கு பிரயோஜனம் உள்ளதாக இருக்கின்றதா என பாருங்களேன்)

ஆசிரியர்

சுவி. டாக்டர் எஸ். தாயப்பன்

Faith

"உங்க ஊழியம், நான் ஏன் கலங்கணும்?
அழைச்சது நீங்க நடத்திச் செல்லீங்க."

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஊழியத்தின் பாதையிலே...

(என் 17 ஆண்டு கால ஊழியத்தில் நான் கண்ட,
எதிர்கொண்ட பல அனுபவங்கள் எவ்விதத்திலாவது
உங்களுக்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கிறதா
எனப் பாருங்களேன்!)

ஆசிரியர்
கவி. டாக்டர் **S.தாயப்பன்**

"கடந்து வந்த பாதைகளை திரும்பிப் பார்க்கிறேன்;
கண்ணீரோடு கர்த்தாவே நன்றி சொல்கிறேன்..."

நன்கொடை ரூ.10/-

ஊழியத்தின் பாதையிலே... - மே. 2018 - 2,000

பதிப்பாசிரியரின் பிற நூல்கள்

		On Circulation	Rs.
1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும் (தமிழில்) (கன்னடம், மலையாளம், தெலுங்கு, இந்தி, ஒரிசா)	8,00,000	10/-
2.	My Cry & Joyful Life (English)	75,000	10/-
3.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	3,20,000	10/-
4.	பாவத்தின் சம்பளம் நரகம் (தமிழ், கன்னடம், ஆங்கிலம்)	1,60,000	10/-
5.	இயேசு கிறிஸ்து உங்களோடு பேசுகிறார்	50,000	10/-
6.	என் ஊழியக்காரனே!?	20,000	10/-
7.	இந்தியாவுக்கு இயேசு தேவை, ஏன்?	40,000	10/-
8.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே!	40,000	10/-
9.	நீங்களே எனக்கு சாட்சிகள்	20,000	10/-
10.	உண்மையான கடவுள் யார்?	25,000	10/-
11.	அற்புத சுகமளிக்கும் வைதீஸ்வரர் இயேசு	20,000	10/-
12.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?	15,000	10/-
13.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு (பாகம் 1, 2)	15,000	10/-
14.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் (பாகம் 1, 2, 3)	20,000	10/-
15.	தானியேலின் தீர்க்கதரிசனம்	3,000	10/-
16.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு (தமிழ், கன்னடம்)	10,000	10/-
17.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி - கிறிஸ்டோபர்	15,000	10/-
18.	இந்தியா ஒரு கிறிஸ்தவ நாடு - சுந்தர் ஏசுவடியான்	10,000	10/-
19.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 1)	5,000	10/-
20.	பாவப்பரிகாரியின் பங்கமில்லா அங்கங்கள் (பாகம் 2)	5,000	10/-
21.	பரலோகம் செல்ல எளிதான வழி	5,000	10/-
22.	அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்	10,000	10/-
23.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து (பாகம் 1, 2)	10,000	10/-
24.	விவிலியமும் விஞ்ஞானமும்	10,000	10/-
25.	இந்துக்களின் கேள்வியும் பதிலும் (பாகம் 1, 2)	10,000	10/-
26.	ஜெகோவா விட்னஸின் உபதேசமும் பைபிளின் பதிலும் கேள்வியும் (பாகம் 1, 2, 3)	5,000	10/-
27.	ஜெகோவா சாட்சிக்கு சத்தியத்தை அறிவிப்பது எப்படி (பாகம் 1,2)	5,000	10/-
28.	சிலை வணக்கம் சின்னாபின்னப்படுத்தியதே (தமிழ், ஆங்.)	5,000	10/-
29.	கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு (தமிழ், ஆங்கிலம்)	5,000	10/-
30.	தெய்வீக சுகம் உண்டா?- எபி சுந்தர்ராஜ	10,000	10/-
31.	கிறிஸ்துவின் இரண்டாம் வருகை - சிஸ்டர் மரியா	10,000	10/-
32.	தமசோமா ஜோதிர்கமய (ஒரு பிராமணரின் சாட்சி)	5,000	10/-
33.	வேதமா? விஞ்ஞானமா? - Rev. பால்ராஜ்துரை	5,000	10/-
34.	மனிதனே நீ யார்? - Rev. பால்ராஜ்துரை	5,000	10/-
35.	சீரழிய சினிமா பாருங்கள் - Rev. பால்ராஜ்துரை	5,000	10/-
36.	தெய்வத்தை தேடுவோம் வாருங்கள் - Rev. பால்ராஜ்துரை	5,000	10/-
37.	இந்து மதம், இந்திய மதமா? - உறையூர் வளவன்	5,000	10/-
38.	ஆரோக்கிய வாழவுக்கு ஒரு தெய்வீக அழைப்பு	5,000	10/-
39.	கிறிஸ்தவர்களின் பொதுவான 100 சந்தேகங்களுக்குப் பதில்	5,000	10/-
40.	கலக்கலான கைப்பிரதிகள் - டாக்டர் உறையூர் வளவன்	5,000	10/-
41.	பரலோகம் செல்ல 500 ஸ்தோத்திர பலிகள் - சிஸ்டர் மரியா	3,000	10/-
42.	என் கண்கள் கண்டவை - டாக்டர் கிளிப்போர்டு குமார்	3,000	10/-
43.	உங்கள் செவிகள் கேட்க - டாக்டர் கிளிப்போர்டு குமார்	3,000	10/-
43.	மதமாற்றம் ஒரு பார்வை - M. டேவிட் டேனியல்	3,000	10/-
44.	இயேசுவே மெய்யான தேவன் - நசீலா பீவி (தமிழ், ஆங்கிலம்)	3,000	10/-
45.	சவாலை சமாளிப்பது எப்படி? - செலின் சாமுவேல் பால்ராஜ்	3,000	10/-
46.	ஒரே வழி இயேசுவின் உன்னதப் படைப்புகள் - Rev.ஜேக்கப் மனோகரன்	3,000	10/-
47.	சொர்க்கம் சொந்தமாகும் - டாக்டர் ஆனந்த் ஜோஷி		10/-
48.	யார் இந்த மனிதர் இயேசு?		10/-
49.	இராம ஜென்ம பூமி - டாக்டர் உறையூர் வளவன் (தமிழ்,ஆங்.)	5,000	5/-
50.	மதமாற்றமல்ல, மனமாற்றமே தேவை - R. ஸ்டான்லி	5,000	5/-

51.	மனமாற்றத்தை பெருக்குவது எப்படி? - R. ஸ்டான்லி	5,000	5/-
52.	வாழ்க்கையைவளப்படுத்தும் வார்த்தைகள்	5,000	5/-
53.	நாலு வேதங்களின் நாயகர் இயேசு	5,000	5/-
54.	ஓர் அவசர அறைகூவல்	5,000	5/-
55.	கல்வாரி ஜெபக் குழுவும் இராணுவ சகோதரர்களும் (தமிழ், கன்னடம்)	5,000	5/-
56.	திரித்துவம் - பாஸ்டர் சாலமோன் ராஜா	5,000	5/-
57.	இஸ்லாமியர்களின் கேள்விகளுக்குப் பதில் - சாலமோன் ராஜா	5,000	5/-
58.	இந்திய ஊழிய உயர்வுக்கு ஒரு புதிய பார்வை	5,000	5/-
59.	ஆனந்த புதுவாழ்வு கண்டேன்	35,000	5/-
60.	திரும்பிப் பார்க்கிறேன் - டாக்டர் புஷ்பராஜ்	3,000	5/-
61.	ஒரு சரஸ்வதியின் கதை - டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
62.	திருமறை தரிசனங்கள் - டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
63.	திருமறை துணுக்குகள் - டாக்டர் உறையூர் வளவன்	3,000	5/-
64.	கள்ள உபதேசம் உருவாகக் காரணம் - திருப்பூர் சாலமோன்	3,000	5/-
65.	இந்தியாவில் சாதனை படைத்த யூதர்கள்	3,000	5/-
66.	இஸ்ரேல் பாலஸ்தீன பிரச்சனைகள்	3,000	5/-
67.	இஸ்ரேல் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட தேசம்	3,000	5/-
68.	பாவம் பலவிதம் - Rev. ராபர்ட் டேனியல்	3,000	5/-
69.	யெகோவா தேவன் - Rev. ராபர்ட் டேனியல்	3,000	5/-
70.	இப்படி செய்தால் நீங்கள் பாக்கியவான்கள் - Rev. ராபர்ட் டேனியல்	3,000	5/-
71.	666 பயோசிப் எச்சரிக்கை! - சிஸ்டர் மரியா	6,000	5/-
72.	இல்லவே இல்லாத இந்து மதம் - பீட்டர் அலெக்சாண்டர்	3,000	5/-
73.	கர்வாப்சி - பீட்டர் அலெக்சாண்டர் (தமிழ், ஆங்கிலம்)	3,000	5/-
74.	மந்தை பெருக மகத்தான மாற்றங்கள்	5,000	5/-
75.	உயிர் கொடுத்து உயர்த்தும் உன்னத தேவன்		5/-
76.	மதமாற்ற தடைச்சட்டம் - பீட்டர் அலெக்சாண்டர்		5/-
77.	சிலுவையில் சிந்திய7 சிவப்பு முத்துக்கள் -உறையூர் வளவன்		5/-
78.	வேத இரகசியங்கள்		5/-
79.	சொர்க்கமும் நரகமும் உங்கள் கையில் (வாலிபர்களுக்கு)		5/-
80.	இறுதிப் பயணம்		5/-
81.	இது உங்கள் உயிர் காக்கும் முயற்சி - சாந்திதேவி	10,000	2.50
82.	மோட்ச வாழ்வுக்கு வழி என்ன- சாந்திதேவி	5,000	2.50
83.	இன்றைய பெற்றோரின் பாவம் நாளை பிள்ளைகளுக்குச் சாபம் - செலின் சாமுவேல்	3,000	2.50
84.	திருமறையும் ஜாதிகளும் - டாக்டர் உறையூர் வளவன்	3,000	2.50
85.	எப்படி ஜெபிக்கணும்? - டாக்டர் கிளிஃபோர்டு குமார்	3,000	2.50
86.	ஞானஸ்நானமும், பரிசுத்தவ ஆவியும் அபிஷேகமும் - Rev. ராபர்ட் டேனியல்	3,000	2.50
87.	உன் தேவனை சந்திக்க நீ ஆயத்தமா? - R. ஸ்டான்லி (தமிழ, ஆங்கிலம், இந்தி, கன்னடம்)		2.50
88.	ஸ்ரீராமஜெயம்		2.50
89.	மருத்துவத்தை வென்ற சாட்சிகள் - பால்ராஜ்துரை		2.50
90.	இந்துமத சித்தாந்தங்களும் திருமறையும் - உறையூர் வளவன்		2.50
91.	மனித நேயம் காக்கும் கிறிஸ்தவம்		2.50
92.	ஈடு இணையில்லாத ஈவு - உறையூர் வளவன்		2.50
93.	இயேசு இணையற்றவரா? - ஆர்.ஸ்டான்லி		2.50
94.	இரண்டு கேள்விகள் - Dr. சாம் ஏசுதாஸ்	3,000	2.50
95.	மாட்டுக்கறி தடை - உறையூர் வளவன்		2.50
96.	DVD ஆனந்த புதுவாழ்வு (Telefilm)		100
97.	DVD அமாவாசை (Telefilm)		100
98.	VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (தமிழ், கன்னடம், ஹிந்தி, மலையாளம்)	12,00,000	10/-
99.	VCD எழுந்து கட்டுவோம் (தமிழ்)	20,000	10/-
100.	VCD முக்திக்கு வழி கிறிஸ்தவமே (தமிழ்)	15,000	10/-
101.	VCD கதாகாலட்சேபம் (தமிழ்	20,000	10/-
102.	VCD தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே (தமிழ்)	10,000	10/-
103.	CLARIFIED		10/-
104.	MAGNIFIED		10/-
105.	TRINITY		10/-
106.	POLYGAMY		10/-

(103–106:) Answer to 25 Intriquing Questions from Bible by Rev. Micheal Pedrain

இந்த நூல் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி

எஸ்.தாயப்பன்
பிளாட் எண், 24, 25,
சக்தி அய்யனார் நகர்
(லட்சுமி அம்மாள் இன்ஜினியரிங் காலேஜ் அருகில்)
அகரம் ரோடு, திருவஞ்சேரி,
சென்னை - 600 126.
தொலைபேசி: 044-22234526, 8680859894
மின்னஞ்சல்: sakthiprabha@yahoo.com

நூலை அனுப்ப சில விதிகள்!

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ.1. M.O., D.D. அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை M.O பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் வெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. MO, DD பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும். விசிடி அனுப்ப தபால் செலவு மட்டும்: கொரியரில் பதிவு பார்சலில் அனுப்ப (தமிழ்நாட்டிற்குள்) 1 முதல் 15 விசிடி வரை அனுப்ப ரூ.50/-. 16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ.60/-

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

புத்தகம் விற்பனை நேரம்: காலை 10 - 1 மணி வரை
மாலை 4 - 7 மணி வரை மட்டும்

வங்கியில் பணம் கட்டி புத்தகம் பெற...

கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் பணம் செலுத்தி விட்டு எங்களுக்கு தகவல் அளித்தால், நீங்கள் வேண்டும் புத்தகங்கள் / CD அனுப்பி வைக்கப்படும். வங்கிக் கணக்கு விபரம்:

எஸ்.தாயப்பன் (S. THAYAPPAN)
சிட்டி யூனியன் பேங்க், சிட்லபாக்கம், சென்னை - 600 064
A/c எண்: 295001001980044. IFS Code: CIUB 0000295

பிறகு கண்டிப்பாக தகவல் அளிக்க வேண்டிய தொலைபேசி எண்:
T. கார்த்திகேயன், 8680859894, 044 - 2223 4526, 044 - 4355 2899

நேரில் வர...

பஸ்ரூட்: கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜில் இருந்து
51A, 51K, 51T, S-6
இறங்கும் இடம்: லட்சுமி அம்மாள் இன்ஜினியரிங் காலேஜ்.

முன்னுரை

இந்தப் புத்தகத்தை எழுத ஆரம்பிச்சப் பிறகு எனக்குள்ள ஒரு உணர்வு. இந்தப் புத்தகம் தேவைதானா? யாருக்காக, எதுக்காக எழுதுற? யப்பா யோசிச்சுப் பார்த்தா ஒண்ணும் புரியலை. ஆனா ஏதோ ஒரு உந்துதலில் எழுதி முடிச்சுட்டேன். இந்தப் புத்தகத்துனால யாருக்காவது ஏதாவது பிரயோஜனமா இருக்குமா? அதுவும் தெரியலை. நான் ஒண்ணும் பெரிய ஊழியக்காரன் இல்லை. பெரிய பெரிய ஜாம்பவான்கள், மேதைகள், வரம் பெற்றவர்கள், இந்த உலகத்தையே காக்குகிறவர்கள், 40 – 50 வருஷம் ஊழியம் பண்ணுறவங்கள்லாம் இருக்காங்க. ஒரு 17 – 17½ வருஷம் ஊழியம் பண்ணிட்டு என்னமோ ரொம்ப பெரிசா சாதிச்சிட்டது மாதிரி நினைச்சிக்கிட்டு எழுதுறோமோன்னு எனக்குள்ளே ஒரு சத்தம் கேக்குது.

எதையும் மறைக்காம, மனம் திறந்து எல்லாத்தையும் அப்படியே எழுதிட்டேன். ஊழியத்தின் பாதையில் எத்தனையோ இன்னல்கள், தடைகள், சறுக்கல், விழுகை, எதிர்ப்பு, அனுபவங்கள், சாதனைகள் இருக்கத்தான் இருக்கிறது. சில பெரிய சர்ச் வைத்திருக்கும் பாஸ்டர்கள்கூட ஊழிய ஆரம்ப காலத்தில் குழந்தைக்கு ஒரு கிளாஸ் பால் வாங்கிக் கொடுக்ககூட முடியாத ஒரு நிலைமையில பரிதாபமாக கஷ்டப்பட்டதையும், அடுத்தவேளை சாப்பாட்டுக்கே ஒரு வழியும் இல்லாம இருந்த நிலையில் ஆண்டவர் எப்படி அவங்க தேவைகளை எல்லாம் சந்தித்தார், கையில் எந்த பைசாவும் இல்லாம எப்படி சர்ச் கட்ட நிலம் வாங்கினாங்க, சபை கட்டினாங்களெல்லாம் அவங்க சொல்றதை கேக்கும்போது, அப்படியே எனக்கு புல்லரிக்கும். நம்ம ஆண்டவர் எவ்வளவு நல்லவர், அன்புள்ளவர், தேவைகளை சந்திக்கிறார்னு அறியும்போது இதெல்லாம் வெளியே தெரிய மாட்டேங்குதேன்னு எனக்கு வருத்தமா இருக்கும். என்னோட அனுபவங்களை பார்த்த பிறகாவது எந்த பாஸ்டராவது, ஊழியக்காரர்களாவது அவங்க ஊழிய அனுபவத்தை எழுதுனாங்கன்னா அது பலருக்கு என்கரேஜ்மெண்டாக இருக்கும். அதுவே இப்புத்தகத்தின் வெற்றியாகவும் இருக்கும்!

[illegible]

[illegible]

சென்னை—73
15.3.2008

ஊழியத்தின் பாதையிலே...

பக்தி உள்ளவனை கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டார்

58 வயது வரைக்கும் ஒரு தீவிர பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளனாகவும் இருந்த என்னையும் என் முழுக் குடும்பத்தையும் ஆண்டவர் அமெரிக்காவில் வேலை பார்த்துக் கொண்டிருந்த என்னுடைய மூத்த மகன் கார்த்தியின் வியாதியின் மூலமாக தொட்டார். மாதம் 2½ லட்சம் ரூபாய் சம்பளத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்த என் மகனின் மூளை அங்கே பாதிக்கப்பட்டு, 18 ஆபரேஷன் செய்து கோமா ஸ்டேஜில் நாலு மாதமாக சுயநினைவின்றி இருந்ததையும், இயேசு கிறிஸ்துவினுடைய தொடுதலில் அவன் எப்படி அற்புத சுகம் பெற்றான் என்பதையும் ஒரு சாட்சிப் புத்தகமாக **'என் அழுகையும் ஆனந்த புதுலாழ்வும்'** என்று எழுத கர்த்தர் கருணை காட்டினார்.

நீங்களே எனக்கு சாட்சிகள்

என்னை கிறிஸ்துவுக்குள் வழி நடத்திய போர்ட்லேண்ட் ஐபிசி சர்ச்சைச் சேர்ந்த சாம் வர்கீஸ் புலிக்கோட்டிலின் நண்பர் மேத்யூ வர்க்கி 2002 இல் கேரளா வந்தவர் சென்னைக்கு என்னையும் கார்த்திக்கையும் பார்க்க வந்தார். அப்போது எங்கள் வாழ்வில் நடந்த விஷயங்களை எல்லாம் அவர்களிடத்தில் ஆங்கிலத்தில் பகிர்ந்து கொள்ளும் படியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது அவர் நான் கூறியவற்றை எல்லாம் ஒரு சாட்சி நூலாக எழுதி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதை அவர் அமெரிக்காவில் சியாட்டில் ஐபிசி சர்ச்சின் வெப்சைட்டில் வெளியிடவும், அதன் மூலம் ஆண்டவரின் நாமமும் மகிமைப்படும் என்றார். ஆகவே நான் கண்டிப்பாக எழுதி அனுப்ப வேண்டும் என்று வற்புறுத்தினார். சொல்லிச் சென்றவர் எனக்கு அமெரிக்காவிலிருந்து மீண்டும் டெலிபோன் செய்து நினைவுபடுத்தி, பிரஷர் கொடுத்தார். வேறு வழியில்லாமல் 'My cry and joyful New Life' என்று ஆங்கிலத்தில் முதன்முதலாக என் சாட்சியை எழுதும்படி ஆயிற்று. அதை அவர் அமெரிக்காவின் சியாட்டில் ஐபிசி சர்ச்சின் வெப்சைட்டிலும் அப்படியே போட்டார்.

நீ அறியாத விஷயங்களை உனக்கு வெளிப்படுத்துவேன்

தேவன் என்னைக் கொண்டு எழுத வைத்த அந்த ஆங்கில சாட்சிப் புத்தகத்தை நான் சென்று கொண்டிருந்த சபையில் ஒருவர் படித்துப் பார்த்துவிட்டு மிகவும் நன்றாக இருக்கிறது. ஆனால் இது ஆங்கிலத்தில் இருக்கிறதே தமிழில் இருந்தால் மிகவும் நன்றாக இருக்குமே. தமிழில் எழுதுங்கள். அது பலருக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று வற்புறுத்தினார். நான் அதுவரை எந்த புத்தகமும் எழுதியது கிடையாது. அப்பொழுது முழுமையாக பைபிளையும் படித்து முடிக்கவில்லை. எப்படி எழுதுவது என்று திகைத்து நின்றேன். அப்போ சிலர் கூறினர். நீங்க ஏன் கவலைப்படுறீங்க? ஆண்டவர் கிட்டே கேளுங்க. இது அவரோட நாம மகிமைக்காக எழுதப்படுற புத்தகம். புத்தகம் எழுதுவதற்கு வேண்டிய ஞானத்தை அவர் தருவார். **'அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று வரங்கள் அளிக்கப்படுகிறது'** என்று சத்திய வேதம் கூறுகிறது (1 கொரி 12:7). நான் ஆண்டவரிடம் மண்டியிட்டேன். 'ஆண்டவரே, நான் ஒரு ஞான சூனியம். எனக்கு புத்தகம் எழுதி அனுபவம் எதுவும் இல்லை. எப்படி எழுதணும்னு எனக்குத் தெரியாது. நான் எழுதணும்னா அதற்குரிய ஞானத்தையும், தாலந்துகளையும் எனக்கு நீங்கள் தாங்கப்பா' என்று அவரிடம் கேட்டேன். **'என்னை நோக்கி கூப்பிடு. நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய விஷயங்களை உனக்கு நான் வெளிப்படுத்துவேன்'** என்று எரேமியா 33:3இல் சொன்ன தேவன், **'என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்'** என்று ஒரு சாட்சிப் புத்தகம் தமிழில் எழுதி வெளியிட கிருபை தந்தார். 2017 வரை தமிழில் மாத்திரம் இப்புத்தகம் 8,50,000 பிரதிகள் வெளியாக தேவன் கிருபை பாராட்டினார். இதே புத்தகம் இன்று ஆங்கிலம் (மறுபதிப்பு), இந்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், பெங்காலி, ஷில்லாங்கின் காசி ஹில்ஸ் மொழி, மற்றும் ஒடிசா மொழியிலும் வெளியிட தேவன் இரக்கம் பாராட்டியுள்ளார்.

ஆண்டவரின் வார்த்தை பலரைத் தொடுகிறது

ஒரு ஹைகோர்ட் நீதிபதி இந்த தமிழ் சாட்சிப் புத்தகத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, 100 பிரதிகளை வாங்கி அவருடைய சொந்தம், பந்தம், இனத்தார், ஜனத்தார், நண்பர்களிடமும் கொடுத்துள்ளார். பல பேர் இந்த புத்தகத்தைப் படித்துப் பார்த்துவிட்டு குடிப் பழக்கம், சிகரெட் பழக்கம், போதைப் பழக்கம், புகையிலைப் பழக்கத்திலிருந்தும், பல வியாதிகளிலிருந்தும், பலவீனங்களிலிருந்தும் விடுதலை பெற்றதாக

டெலிபோன் மூலமாகவும், கடிதம் மூலமாகவும் தெரிவிக்கின்றனர். தமிழ்நாட்டிலும், பல வெளி மாநிலம் மற்றும் வெளிநாடுகளில் உள்ள சிறைச்சாலை கைதிகளுக்கும் இப்புத்தகம் வழங்கப்பட்டு அநேகர் குற்ற வாழ்க்கையிலிருந்து வெளிவந்து, மனந் திருந்தி வாழ்வதாக கடிதங்கள் வந்திருக்கின்றன. அநேகம் ஆஸ்பத்திரிகளிலே சிலம்சி, ஸ்டேன்லி, ஜி.எச்., மீனாட்சி ஆஸ்பத்திரி, காமாட்சி ஆஸ்பத்திரிகளில் இப்புத்தகம் விநியோகிக்கப்பட்டு பல அற்புதங்கள் நடந்ததாகவும் நோய், பலவீனம், ஆபரேஷன் பண்ணப்பட்டோர் வீல் சேரில் உள்ளோர், தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டோர், இவர்கள் சுகம் பெற்றதையும் அவர்களின் பெற்றோர், உற்றார், உறவினர்கள், கணவன், மனைவி ஆகியோர் மனம் உடைந்து நம்பிக்கை இழந்து, சோர்ந்து, நொந்து போய் இருந்த அநேகரை இப்புத்தகம் ஆற்றித் தேற்றி, நம்பிக்கை தந்து, பலப்படுத்தியதாகவும் செய்திகள் அனுதினமும் வருகிறது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

தாம்பூலப் பையில், ட்ரெயினில் எங்கும் எதிலும் சாட்சி புத்தகம்

தூத்துக்குடியில் பாஸ்டர் சாம் மனோகர் அவருடைய மகனுடைய திருமணத்திற்காக 1750 பிரதிகள் வாங்கி திருமணத்திற்கு வந்தவர்களுக்கு தாம்பூலப்பையில் ஒரு புத்தகம் போட்டுக் கொடுத்திருக்கிறார். இப்படி அநேகர் திருமணத்திலும், வீட்டு கிரஹபிரவேசத்திலும், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள் விழாக்களிலும், ரிட்டயர்மெண்ட் பிரிவு உபசார நிகழ்ச்சியிலும் இப்புத்தகத்தை பரிசாகக் கொடுக்கின்றனர். சென்னையில் விருகம்பாக்கத்தில் ஒரு சகோதரி மாதா மாதம் 200 புத்தகங்கள் வாங்கி, நான்கு சகோதரிகள் முழங்கால் படியிட்டு ஜெபித்து வியாழக்கிழமைகளில் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஜி.டி.எக்ஸ்பிரஸ், தமிழ்நாடு எக்ஸ்பிரஸ், மும்பை எக்ஸ்பிரஸ், கல்கத்தா மெயில் என்று பல டிரெய்னில் ஒவ்வொரு கம்பார்ட்மெண்டாக சென்று புத்தகத்தை இலவசமாக கொடுக்கின்றார். 1½ நாள் பயணப்படுகிறார்கள். பொழுது போகவில்லை என்று எடுத்து படிப்பார்கள் என்று கொடுக்கின்றனர். **'தண்ணீரின் மேல் ஆகாரத்தைப் போடு. நீண்ட நாட்களுக்குப் பிறகு அதன் பலனைக் காண்பாய்'** என்கிற வேத வசனத்தை விசுவாசித்து கொண்டு போய் கொடுக்கின்றனர். பஸ், ட்ரெயின், ஹோட்டல், பார்க், ஆஸ்பத்திரி என்று பல்வேறு இடங்களில் இப்புத்தகத்தை அப்படியே விட்டுவிட்டு வருகின்றனர். புத்தகம் யாராவது எடுத்துப் படித்து இரட்சிக்கப்படட்டும் என்று இப்படி செய்கின்றனர். கிராம ஊழியம், ஆஸ்பத்திரி ஊழியம்,

தெரு ஊழியம் என்று சுவிசேஷம் அறிவிக்க பண்டில் பண்டிலாக இப்புத்தகத்தை வாங்கிச் செல்கின்றனர். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது.

புத்தகங்களை மலிவு விலையில் கொடு

ஆண்டவர் இந்த புத்தகத்தை பத்து ரூபாய்க்கு போடு என்று உணர்த்தினார். பிரிண்டிங் காஸ்ட் பத்து ரூபாய்க்கு அதிகமாகவே ஆச்சு. இருந்தும் ஆண்டவர் உணர்த்தியபடியே புத்தகத்தை பத்து ரூபாய்க்கே கொடுத்தேன். தேவன் என் தேவைகளை எல்லாம் நான் சிந்திப்பதற்கும் வேண்டுவதற்கும் அதிகமாகவே சந்தித்து வருகிறார். ஒரே ஒரு தடவை தாம்பரத்தில் உள்ள ஒரு கிறிஸ்தவ புத்தகங்களை விற்பனை செய்யும் கடைக்கு கொடுத்தேன். 30%, 40% கமிஷன் கேட்டனர். பிரிண்டிங்கிற்காக ஆகும் செலவை விட கம்மியாக கொடுப்பதால், என்னால் கமிஷன் எதுவும் கொடுக்க முடியவில்லை. அதுவும் புத்தகங்களை கடனுக்குக் கேட்டனர். புத்தகங்களை விற்ற பிறகே பணம் தருவார்கள். இரண்டு மூன்று தடவை நேரிலும், பல தடவை போனிலும் புத்தகம் விற்றது குறித்து கேட்கும்படி ஆயிற்று. ஒருநாள் போய் விற்காமல் இருந்த புத்தகங்களை எல்லாம் எடுத்து விட்டு புத்தகம் வேண்டும் என்றால் என் வீட்டிற்குவந்து பணம் கொடுத்திட்டு வாங்கிட்டு போங்க என்று சொல்லி எடுத்து வந்து விட்டேன்.

ELS, CLS மற்றும் பல கிறிஸ்துவ புத்தக நிலையங்களிலிருந்து போன் செய்து புத்தகங்கள் கேட்டார்கள். எல்லோருக்கும் இதே பதிலை கூறிவிட்டேன். தேவைப்படுகிறவர்கள் அனைவரும் என் வீட்டிற்கே வந்து இப்போது வாங்குகின்றனர். மணியார்டர் அனுப்பியும், டிடி எடுத்து அனுப்பியும், பேங்கில் என்னுடைய அக்கவுண்ட்டில் பணம் செலுத்தி விட்டும் புத்தகம் கேட்கின்றனர். 10 முதல் 100 புத்தகங்கள் வரை போஸ்ட் ஆபீஸ் மூலம் புக் போஸ்ட்டிலும், வெளியூர்களுக்கு கேபிளன் பார்சல் சர்வீஸ் மூலமும், வெளி மாநிலங்களுக்கு விஆர்எல் லாஜிஸ்டிக்ஸ் மூலமாகவும் அனுப்புகிறேன். நான் பிரசங்கம் பண்ண அழைக்கப்படும் இடங்களுக்கும் எனது புத்தகங்களை எடுத்துச் சென்றோ அல்லது முன்பே அனுப்பியோ விற்கிறேன்.

சுவிசேஷம் அறிவிக்க ஏதுவான புத்தகம்

சுவிசேஷம் அறிவிக்க எனது புத்தகங்கள் பெரிதும் உபயோகமாக இருக்கிறது என்றும், குறிப்பாக இந்துக்களுக்கு நற்செய்தியை அறிவிக்க, இந்துமத வேதங்களில் என்ன

சொல்லப்பட்டு இருக்கிறது என்று மிகத் தெளிவாக, ஆதாரத்துடன் எழுதியிருக்கிறீர்கள், அதுவுமின்றி இவ்வளவு சீப்பாக 10 ரூபாய், 5 ரூபாய், 2.50 ரூபாய்க்கெல்லாம் யாருமே புத்தகம் போடுவதில்லை என மிக அதிகமாக என்னுடைய புத்தகங்களை வாங்குகின்றனர். வாங்கி மற்றவர்களுக்கும் கொடுக்கின்றனர். இதனால் என்னுடைய புத்தகங்கள் அனைத்தும் (தமிழில் மாத்திரம் 117 புத்தகங்கள்) ஒவ்வொன்றும் பல லட்சம் பிரதிகள் விற்கப்பட்டுள்ளன. கிரிடிட் எனக்கு இல்லை. நான் ஜீரோ. ஆண்டவர்தான் ஹீரோ! இந்த அடிமையால் ஆவது ஒன்றுமேயில்லை. அனைத்தும் ஆவது அவரால். அவருடைய கிருபையால் மாத்திரமே!

கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்பு எந்த புத்தகமுமே எழுதியிராத என்னைக் கொண்டு இத்தனை புத்தகங்களை எழுதி வெளியிட வைத்த அந்த அகிலாண்ட ஞானேஸ்வரருக்கு ஈடு இணை யாருமே இல்லை. அவருக்கு ஈடு இணை அவர் ஒருவரே. என்னுடைய 10, 12 புத்தகங்கள் ஆங்கிலத்திலும் வெளிவந்திருக்கிறது. என்னுடைய புத்தகங்களில் பல இந்தியிலும் மற்ற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டால் பிற மொழி பேசும் மக்களின் மனக் கண்களும் திறக்கப்படும். அவர்களும் கிறிஸ்துவை அறிந்து கொள்வார்கள். நம் தேசம் சந்திக்கப்படும். தேசம் கர்த்தருக்கு சொந்தமாகும். நம் தேசத்தில் நிலவும் விக்கிரக வழிபாடு, மூட நம்பிக்கைக்ள், தீவிரவாதம், வன்முறை, பாலியல் கொடுமைகள், ஜாதி ஏற்றத்தாழ்வு, நிர்வாக சீர்கேடுகள், லஞ்ச லாவண்யங்கள், போதை, புகையிலை, சிகரெட், மற்றும் . கஞ்சா, மதுவுக்கு அடிமைப்பட்டிருக்கும் ஜனங்கள் விடுதலை பெறுவார்கள். நம் தேசம் தேவ கோபாக்கினையிலிருந்து, அழிவிலிருந்து காப்பாற்றப்படும். ஆகவே மொழிபெயர்ப்புக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். நாம் செய்வது மதமாற்றமல்ல. மன மாற்றமே. கடவுளை எதற்கு ஒரு மதத்திற்குள் பாக்கணும்? இந்த ஜாதி, மதம் எல்லாம் மனிதர்கள் உண்டாக்கியது.

ஆண்டவர் எங்களுக்கு ஒரு திருச்சபையை காட்டினார்

நானும் என் மகன் கார்த்திக்கும் 2001 ஜூனில் சென்னைக்கு வந்தவுடன் எப்படியோ வெகு விரைவில் நான் இயேசுவை ஏற்றுக் கொண்டு கிறிஸ்துவுக்குள் வந்தது பலருக்கு தெரிந்துவிட்டது. கார்த்தியைப் பார்க்க அக்கம்பக்கம் இருந்தவர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள், உறவினர்கள் என பலர் வந்தனர். அப்போது இயேசு செய்த அற்புதங்களை கூறும்படி ஆயிற்று. செய்தி வெளியே பரவ ஆரம்பித்தவுடன், பல திருச்சபைகளிலிருந்து

அவர்கள் திருச்சபைக்கு வரும்படி எனக்கு அழைப்பு வந்தது. நான் ஆண்டவர் சமூகத்தில் முழங்கால் படியிட்டு 'எனக்கு ஒரு நல்ல ஆவிக்குரிய சபையை காட்டுங்கள் தகப்பனே. அது ஒரு சின்ன சபையாக, அந்த சபையோடு சேர்ந்து நானும் என் குடும்பமும் கிறிஸ்துவுக்குள் வளரும்படியாக ஒரு கிருபையை தாருங்கள்' என வேண்டினேன். அதன்படியே எனக்கு 60, 70 பேர் கொண்ட ஒரு சிறிய ஆவிக்குரிய சபையை **'மகிமையுள்ள சியோன் கிறிஸ்தவ சபை'** நான் வசித்து வந்த சிட்லபாக்கம் பகுதியிலேயே தேவன் எனக்கு தந்தார். நல்ல ஒரு ஆவிக்குரிய, சத்திய வேதத்தின் அடி ஆழத்துக்கு சென்று போதிக்கின்ற ஒரு நல்ல போதகரையும் (பாஸ்டர் சாலமோன் ராஜா) காட்டினார். இன்று அந்த திருச்சபை 800 பேருக்கும் அதிகமாக கொண்ட ஒரு சபையாக வளர்ந்து காலை 6 மணிக்கு முதல் ஆராதனையும், அப்புறம் 9 மணிக்கு இரண்டாவது ஆராதனையுமாக நடந்து வருகிறது.

முதன் முதலில் என் சாட்சி புத்தகத்தை படித்துப் பார்த்துவிட்டு என்னை சாட்சி பகர அழைத்தவர் அடையாறு ஏ.ஜி. சர்ச் பாஸ்டர் திரு. சாமுவேல் ராஜ் அவர்கள். "உங்கள் சாட்சிப் புத்தகம் படித்தேன். நன்றாக இருந்தது. எங்கள் சபையில் வந்து 16.1.2005 அன்று சாட்சி கூற முடியுமா? எங்களது இரண்டு சர்வீசிலுமே நீங்களே பேசுங்கள்' என்றார். சரி என்றேன். பிறகு நான் போகும் சபையின் போதகரிடம் சென்று கூறினேன். ஞாயிறு அன்று சபை ஆராதனையை விட்டுவிட்டு நான் வேறெங்கும் போவது அவருக்கு அவ்வளவு இஷ்டமில்லை. ஏனென்றால் நான் சபையில் முக்கியப் பொறுப்பில் பொருளாளராக இருந்தேன். பிறகு நான் ஆண்டவரோட நாம மகிமைக்காக சாட்சி கூறத்தானே செல்கிறேன். வேறு எதற்கும் செல்லவில்லையே என்று சமாதானம் கூறினேன். அவருக்கு நான் தேவ அழைப்பில்லாமல் ஊழியத்துக்கு செல்கிறேனோ என்று ஒரு சந்தேகம். கண்டிப்பாக தேவ அழைப்பு அவசியம் தேவை. எதற்கு? சபை நடத்துவதற்கு! போதக ஊழியத்துக்கு அழைப்பு தேவை. மாம்ச புத்தியில், விருப்பத்தில் சபை நடத்தக் கூடாது. ஆனால் ஆண்டவர் செய்த எண்ணி மாளாத அற்புதங்களை, அதிசயங்களை, நன்மைகளை சாட்சியாக சொல்லுவதற்கும், சுவிசேஷம் அறிவிக்கவும் எந்த அழைப்பும் தேவையே இல்லை. அப்படி சாட்சி சொல்ல வேண்டியது, ஊழியம் செய்தல் நமது தலைமேல் கடமையாகுமே.

கர்த்தர் செய்த நன்மைகளை வெளியே போய் சொல்லணும்

'நீங்களே எனக்கு சாட்சிகள்' என்று ஏசாயா 43:12 சொல்கிறதே.

ஆண்டவர் செய்த நன்மைகளை சாட்சியா சொல்லணும். அவரோட நாமம் மகிமைப்படும்படி சாட்சியாகவும் வாழணும். கிறிஸ்தவங்க எல்லாருமே சாட்சி சொல்றாங்க. எங்கே? சபையிலே, நாலு சுவற்றுக்குள்ளே! ஒரு கிறிஸ்தவன் மத்த கிறிஸ்தவங்ககிட்டே சொல்றாங்க. வெளியிலே எங்கேயாவது போயி சொல்றாங்களா? புற ஜாதி மக்கள்ட்ட போயி சொல்றாங்களா? இல்லையே. 95% பேரு போயி சொல்றதே இல்லை. வெளியிலே இருக்கிறவங்களுக்கும் அற்புதம் தேவைப்படுதே. இயேசுவை அறியாத புற ஜாதி மக்களுக்கும் சுகம் தேவைப்படுது. விடுதலை தேவைப்படுது. பிரச்சனைக்கு தீர்வு, சந்தோஷம், சமாதானம் எல்லாமும் தேவைப்படுது. அது எங்கே கிடைக்கும்னு தெரியாமத்தான் கோயில் கோயிலா அலையுறாங்க. அற்புதங்களை செய்கிற ஒரு ஜீவனுள்ள தேவன் நம்ம சபையில் இருக்கிறார்னு நாமதானே போயி அவங்ககிட்டே சொல்லணும்? வேற யாரு போயி சொல்லுவா?

ஊழியம் செய்ய ஊக்கமளிக்கணும்

இந்தியாவுல சுவிசேஷம் முழுமையா பரவாம இருக்கிறதுக்கு இதுவும் ஒரு மேஜர் காரணம். சபைப் போதகர்களுக்கு தங்கள் சபையில யாக்கோபின் மந்தை பெருகுகிறது போல மந்தை பெருகணும்னு ஆசையிருக்கு. ஆனா அதுக்கு என்ன செய்யணுமோ அதை செய்ய ஒரு தயக்கம். நிறைய போதகர்கள் தங்களின் சபை விசுவாசிகள் தனிப்பட்ட முறையில் ஊழியம் செய்வதை அவ்வளவாக விரும்புவதில்லை. அதை அவர்கள் என்கரேஜ் பண்ணுவதும் இல்லை. பெந்தகோஸ்தே சபைகளிலேயே இப்படி என்றால், CSI, ECI அட்வெண்ட், இவைகளில் கேட்கவே வேண்டாம். என்னைப் பொறுத்த வரையில் ஒரு சபை விசுவாசி 3, 4 வருஷத்துக்கு மேலே சபையிலே விசுவாசியாவே உட்கார்ந்துக்கிட்டு இருக்கக் கூடாது. ஏதாவது ஒரு ஊழியம் செய்ய கிளம்பணும்.

இத்தனை மிஷனரி நிருவனங்கள் உருவாக நாமே காரணம்

கிராம ஊழியம், ஹாஸ்பிடல் ஊழியம், டிராக்ஸ் ஊழியம், தெருப் பிரசங்கம், ஒண்ணும் இல்லைன்னா அட்லீஸ்ட் ஒரு பிரேயர் செல்லாவது தன்னோட வீட்ல கண்டிப்பா ஒரு விசுவாசி ஆரம்பிச்சுடணும். இதை ஆரம்பத்துல இருந்தே சபை விசுவாசிகள் மனசுல ஊற வைக்கணும். பாட்டு பாட வைக்கணும். சில பொறுப்புகளை கொடுக்கணும். அவங்களை அதுல என்கரேஜ் பண்ணி, பாராட்டி ஊக்குவிக்கணும். நம்மோட புள்ளைங்களை ஒண்ணாங் கிளாஸிலேயே கடைசி வரைக்கும் அப்படியே உட்கார்த்தி வச்சிட்டு இருக்கோமா? இல்லையே. சபை விசுவாசி மட்டும்

ஏன் கடைசி வரைக்கும் சபை விசுவாசியாகவே இருக்கணும்? அவங்களை சரியா பயன்படுத்தாததுனாலதான் இன்னிக்கு சபைக்கு வெளியே இத்தனை மிஷனரி ஆர்கனிசேஷன்ஸ் BYM, IEM, IME, IMA என்று ஏகப்பட்டது உருவாகிடுச்சு. அதுக்கு மெயின் காரணமே இந்த ஊழியங்களை ஆரம்பிச்சவங்களை சபையில் நாம் முழுமையாக எடுத்து பயன்படுத்தாததுனாலதான்.

ஐந்து வகை ஊழியங்களும் சபைக்குள்ளேயே இருக்கணும், வளரணும், வெளியிலே போயி தனியா ஆரம்பிக்காதபடிக்கு சபைக்குள்ளேயே இருக்கும்படியாக, சபைக்கு பிரயோஜனம் ஆகும்படியா எடுத்துப் பயன்படுத்தணும். இதை நாம பண்றது இல்லையே. அப்படி சபையிலிருந்து ஊழியத்துக்கு போயிட்டு வந்தவங்க அடுத்த வாரம் வந்து சபையில அங்க என்ன நடந்தது? என்ன அற்புதம் நடந்துச்சுன்னு வந்து சாட்சியா சொல்லணும். இது ஊழியத்துக்குன்னு இது வரைக்கும் ஒப்புக் கொடுக்காதவங்களுக்கு, போகாதவங்களுக்கு ஒரு என்கரேஜ்மெண்ட்டா இருக்குமே.

நடந்த அற்புதங்களை புத்தகமாக, விசிடியாக வெளிவரணும்

சபையில நடந்த, சபை விசுவாசிகளின் வாழ்க்கையில ஆண்டவர் செய்த அற்புதங்களை சாட்சியா புத்தகம் எழுதி அவங்க போட்டோ, அட்ரசோட ஒரு சாட்சி புத்தகமா ரொம்ப கம்மியான விலைக்கு பிரிண்ட் செஞ்சு அக்கம் பக்கத்துல கொடுக்கணும். அந்த சாட்சிகளை அவங்களையே சொல்ல வச்சு ஒரு விசிடியோ, டிவிடியோ வெளியிடணும். இதை 98% சபைகள் செய்யுறது இல்லை. நான் ஊழியத்துக்குன்னு போன சபைகள் எல்லாத்திலயும் ஆண்டவர் செஞ்ச எண்ணி மாளாத நன்மைகளை, அதிசயங்களை கேக்கும்போதே அப்படியே புல்லரிக்கும். அப்படிப்பட்ட அற்புதங்களை எல்லாம் ஆண்டவர் செஞ்சிருக்காரு. அதேபோல கிறிஸ்துவை எதிர்த்தவங்க, ஊழியத்துக்கு எதிராக, இடையூறாக செயல்பட்டவங்கள்லாம் என்ன கதி ஆனாங்கன்னு பல பாஸ்டர்கள் சொல்லக் கேட்டிருக்கேன். ஆனா எதையுமே அவங்க எழுதி, ஒரு புத்தகமா, விசிடியா வெளியிட்டது இல்லை. இது எவ்வளவு பெரிய கொடுமை தெரியுமா?

எல்லா மீடியா மூலமாகவும் நற்செய்தி பரவணும்

எதுக்கு முக்கியத்துவம் கொடுக்கணுமோ அதுக்கு நாம முக்கியத்துவம் கொடுக்காம இருந்தா, அது நம்ம ஆண்டவருக்கு செய்யுற துரோகம்னுதான் நான் சொல்லுவேன். ஆண்டவர் செஞ்ச அதிசயங்கள் நாலு சுவிசேஷப் புத்தகங்களிலே எழுதப்படலைன்னா

நமக்கெல்லாம் தெரிஞ்சிருக்குமா? எங்க வாழ்க்கையில ஆண்டவர் செய்த நன்மைகளை நான் ஒரு புத்தகமாகவும், விசிடியாகவும் போட்டதுனாலதான் இன்னிக்கு உலகம் முழுக்க எங்களோட சாட்சி தெரிஞ்சிருக்கு. அதுவும் இப்போ இன்டர்நெட், யூடியூப், ஃபேஸ்புக், வாட்ஸ்அப்னு மீடியாக்கள் மூலமாகவும் இவைகளை எல்லாம் பரப்பலாமே. கொஞ்சம் எதிர்ப்புகளும் வரலாம். வந்தா என்ன? எப்போ எதிர்ப்பு இல்லாம இருந்துச்சு? இயேசு ஊழியம் செய்யும்போதே அவருக்கே எதிர்ப்பு இருந்துச்சே. எதிர்ப்பு இருக்கும்போதுதான் இன்னும் வளர்ச்சி இருக்கும். பல எதிர்ப்புகளை சந்திச்சு எதிர்கொண்டு, சமாளிச்சு, சிரமங்கள் பட்டு எதிர் நீச்சல் போட்டு வளர்ந்ததுதான் நம்மோட கிறிஸ்தவம்! நாம் சந்திக்காத எதிர்ப்புகளா?

எதிர்ப்பு இல்லாமல் ஊழியம் இல்லையே!

என்னோட ஊழியத்தின் பாதையிலே எத்தனையோ எதிர்ப்புகளை நான் சந்திச்சிருக்கேன். எதைப் பத்தியும் நான் கவலைப்பட்டதே இல்லை. எத்தனையோ போலீஸ் ஸ்டேஷன்களுக்கு என்னை இழுத்திட்டு போயிருக்காங்க. எத்தனையோ மீட்டிங்கில கல்லை விட்டெறிஞ்சு இருக்காங்க. மேடையிலே ஏறி கழுத்தை பிடிச்சிருக்காங்க. கொலை மிரட்டல் லெட்டர் வந்திருக்கு. காதே புளிச்சுப் போற மாதிரி கெட்ட வார்த்தை சொல்லி திட்டியிருக்காங்க. நான் வெளியிலே வர முடியாத அளவுக்கு ‘ஜாமீன் இல்லா அரஸ்ட் வாரண்ட்டை’ என் மேலே தூத்துக்குடியிலே போட்டாங்க. ஒரு பக்கம் ஆர்எஸ்எஸ், இந்து முன்னணி, பிஜேபி. இன்னொரு பக்கம் நம்ம சபை பாஸ்டர்களே!

சில போதகர்களிடமிருந்தும் எதிர்ப்பு

கிறிஸ்துவுக்குள்ளே நான் வர்றதுக்கு முன்னாடி நெறைய இந்துமத வேதங்களைப் பத்தியும், வேதாந்தங்களையுப் பற்றியும், சித்தர்கள் பற்றியும் ஆர்வமா படிப்பேன். அப்போ பல விஷயங்களுக்கு எனக்கு விளக்கம் கிடைக்காம இருந்தது. ‘ரத்த பிரதோஷணம் பாப விநாசம்’னு சம்பூர்ண மஹாபாரதத்தில் எழுதப்பட்டிருக்கு. அதாவது இரத்தம் சிந்தாமல் பாவமன்னிப்பு இல்லைன்னு. எனக்கு புரியலை. எதுக்காக இரத்தம் சிந்தணும்? ஏன் சிந்தணும்? யார் சிந்தியிருக்கா? பாவ மன்னிப்புக்கும் இரத்தம் சிந்துறதுக்கும் என்ன சம்பந்தம்? புரியலை.

‘அஸ்வமேத யக்ஞம்’னு பிரம்ம சூத்திரத்தில சொல்லப் பட்டிருக்கு. ‘நானே பலியாகிறேன்’னு பிரஹதாரணி உபநிஷத்தில்

சொல்லப்பட்டிருக்கு. 'அஸ்வமேத அதியக்ஞும்'னு கிருஷ்ண பரமாத்துமா பகவத் கீதையலே சொன்னாரு. 'விஸ்வகர்மா பலியாக்கப்பட வேண்டும்'னு சாந்தோக்கிய உபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கு. 'புருஷா பலியாக்கப்பட வேண்டும்'னு புருஷ சூக்தத்தில் சொல்லப்பட்டிருக்கு. 'இனி ஈண்டு தேகத்திலுள்ள நானே பலியாகிறேன்'னு மஹா பாரதத்தில் கிருஷ்ணன் சொல்றாரு. ஆனா எந்த தெய்வம் மரிச்சிருக்கு? எந்த தெய்வமும் மரிக்கலையே! ரத்தம் சிந்தலையே!

இந்து மத வேதங்களில் சொல்லப்பட்டிருப்பது கிறிஸ்துவே!

எந்த தெய்வமும் பலியாகாம, இரத்தம் சிந்தாம இருக்கும்போது, இந்த சத்தியம் எப்படி நம்ம உபநிஷத்துக்கள்ல வந்துச்சுன்னு எனக்குள்ள ஒரே குழப்பம். அப்போ நான் இயேசு கிறிஸ்துவைப் பத்தி நினைச்சே பார்க்கலை. பைபிளை படிச்சாப்பிறகுதான் எனக்கு இருந்த இந்த எல்லா சந்தேகங்களுக்கும் விளக்கம் கிடைச்சது. அதுக்கப்புறம் இன்னும் அதிகமா ஒரு புரிதலோடு, ஆழமா இந்துமத வேதங்கள்ல தேட ஆரம்பிச்சேன். அப்பத்தான் எனக்கு புரிஞ்சது நம்ம இந்துமதம் உருவானதே கிறிஸ்துவத்தினுடைய அடிப்படையில 4 ஆம் 5 ஆம் நூற்றாண்டுலதான்னு. பிறகு பார்த்தா சித்தர்கள், திருவள்ளுவர், தேவாரம், திருவாசகம், போற்றிப் பஃறொடை, சைவ சித்தாந்தங்களுக்கு அடிப்படை நூலாக இருக்கிற மெய்கண்டார் எழுதிய சிவஞான போதம், வேத வியாசர் எழுதிய பிரம்ம சூத்திரம், திருமூலர் எழுதிய திருமந்திரம் மற்றும் நாலுவேதங்கள் எல்லாத்திலேயும் சொல்லப்பட்டிருக்கிறது இயேசு கிறிஸ்துவைப் பற்றித்தான்னு தெளிவா தெரிஞ்சது. அதுவுமில்லாம நம்ம இந்துக்கள் கும்பிடுற தெய்வங்கள்லாமே பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் உருவகம்தான்னு புரிஞ்சது. ஆனா அது டூப்ளிகேட்டு. ஒரிஜினலான இயேசு கிறிஸ்துவை புடுச்சுக்கிட்டாத்தான் பாவ மன்னிப்பு, பாவ விமோசனம், பரலோகம்னு எல்லாம் தெளிவா தெரிஞ்சது.

இந்து கோயில்களின் வடிவமைப்பு பைபிளில் உள்ளதே!

தேடினவனுக்கு பெரிய புதையலே கிடைச்ச மாதிரி ஆயிடுச்சு. விடுவேனா? அதுக்கப்புறம் இந்த சத்தியங்களை மேடைகளிலேயும், சபைகளிலும், என் புத்தகங்களிலேயும், விசிடியிலேயும் சொல்ல ஆரம்பிச்சேன். நம்ம இந்துக் கோயில்கள்ல பின்பற்றுகின்ற வழிபாட்டு முறைகள் எல்லாமே எபிரேயர்கள் கடைப்பிடிச்சவைகள்தான். எல்லாமே மத்திய ஆசியாவில இருந்து இறக்குமதி செய்யப்பட்டது.

நம்ம இந்துக் கோயில்களின் அமைப்பு, எல்லாமே கர்த்தர் சீனாய் மலையிலே மோசேக்கு சொன்ன ஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரமே இருக்கு. இயேசு பிறக்குறதுக்கு முன்னாடியே சாலமோன் ராஜா கட்டின முதற் கற் கோயிலின் அமைப்பிலேயே எல்லாமும் இருக்குதுன்னு தெரிஞ்ச உடனே இவைகளையும் சேர்த்து சொல்லி இந்துக்களை கிறிஸ்துவுக்குள்ளே கொண்டு வர்றதுக்கு இதை ஒரு கொக்கியா எடுத்து பயன்படுத்தினேன். வேற எதுக்காகவும் இல்லை. நான் இதுவரைக்கும் இருந்த, என் சொந்தபந்தம், நான் நேசிக்கிற என்னோட இனத்தார், ஜனத்தார் எல்லாருமே மோட்ச பிரஜைகளாக மாறணுமேங்கிற இந்த நல்ல எண்ணத்துல சொன்னேன். எழுதினேன். விசிடியா போட்டேன். ஒருத்தரும் கெட்டு நரகத்துக்குப் போயிடப்பிடாதேங்கிற ஆதங்கம் எனக்கு. வேற என்ன எனக்கு கிடைக்கப் போகுது?

அந்நிய தேவர்களின் பெயரை உச்சரித்தது சில பாஸ்டர்களுக்குப் பிடிக்கலை!

அவ்வளவுதான்! நம்ம பெண்டிகாஸ்ட் பாஸ்டர்கள்ல சில பேருக்கு இது பிடிக்கலை. அதுலயும் சில பரம்பரை கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த பாஸ்டர்களுக்கு இது சுத்தமா பிடிக்கலை. தாயப்பன் நெறைய இந்து மதம் பற்றியும், இந்து தெய்வங்களைப் பற்றியும், அந்த அந்நிய தேவர்களின் பெயர்களையும் உச்சரிக்கிறார்னு முகம் சுளிக்க ஆரம்பிச்சாங்க. எனக்கு இவங்களைப் பாத்து சிரிப்புதான் வந்துச்சு. நான் எதுக்காக இவைகளை சொல்றேன்னு அவங்க சரியா புரிஞ்சுக்கிடலை. நான் அவங்க கும்பிடுகிறவைகளை நாமளும் கும்பிடணும்னு சொல்லலை. அவைகளை அவங்க தொடர்ந்து கும்பிடலாம்னு சொல்லலை. இயேசுவை அறியாது, எதிர்க்கிற பக்தி வைராக்கியமுள்ள இந்துக்களும், மூட நம்பிக்கைகள்ல, பாரம்பரிய கலாச்சாரத்தில் மூழ்கிக் கிடக்கிற விக்கிரக ஆராதனையில ஈடுபட்டுக் கொண்டிருக்கிற தேவன் படைச்ச இந்த புற ஜாதி மக்களும் இரட்சிக்கப்படணுமேங்கிற ஆதங்கத்தில் நான் சொன்னேன்.

இந்துக்களுக்கு இந்துக்களைப் போல சுவிசேஷம் அறிவிக்கணும்

வேதம் சொல்றது **''யூதனுக்கு யூதனைப் போலவும், நியாயப் பிரமாணம் இல்லாதவர்களுக்கு அவர்களைப் போலவும், பலவீனர் களுக்கு பலவீனர்களைப் போலவும், எல்லாருக்கும் எல்லாமும் ஆனேன்''** பவுல் 1 கொரி 9:20 இலே சொல்றாரே. அந்தப் பாணியை கடைப்பிடித்து, அவர்களையும் நம்ம ஆண்டவரை ஆராதிக்கின்ற

அவரோட புள்ளைகளா மாறணுமேங்கிறதுக்காக அவங்க இதுவரை நம்பிக்கிட்டு இருக்கிற. அதுதான் உண்மையான சத்தியம், அவங்களோட மதம், வேதம், சாமிதான் ஆதியில இருந்தே இருக்கிற ஒன்று. அதுதான் தொன்மையானதுங்கிற அவங்களோட அந்த தவறான எண்ணங்களை உடைச்சு அவங்க வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிற. இதுவரை அவங்க கண்டு கொள்ளாத, தெரியாம இருந்த நம்ம ஆண்டவரை அவங்க தெரிஞ்சு, அவரோட புள்ளைங்களா மாறணுமேங்கிறதுக்காக சொல்றேன். அத்தனே பட்டிணத்தில் பவுல் போயி அவங்க ஆராதிக்கிற விக்கிரஹங்களை எல்லாம் பார்த்துட்டு **'நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற தேவனை உங்களுக்கு அறிமுகப்படுத்த வந்தேன்'**னு சொல்லி ஆரம்பிச்சு எவ்வளவு அழகா, நைசா சுவிசேஷத்தை அறிவிக்கிறாரே. அது மாதிரி நான் செய்தேன். அதைப் புரிஞ்சுக்காம அந்நிய தேவர்களின் பெயர்களை உச்சரிக்கிறார். ஆண்டவர் வாந்தி பண்ணிப் போடுவார். உன்னை யாருன்னே தெரியாதுன்னு சொல்லி விடுவாருன்னெல்லாம் சொல்ல ஆரம்பிச்சாங்க.

அந்நிய தேவர்களின் பேரை நாம சொல்லாம இருக்க முடியாதே

அந்த பெயர்களை எல்லாம் நாம சொல்லாம இருக்க முடியுமா? நாம எல்லாருமே அந்த பெயர்களுடைய கோட்டைக்குள்ளேதானே இருக்கோம். அதுங்க பேர்களை சொல்லாம எப்படி இருக்கிறது? என்னோட வீடு இருக்கிற தெரு பேரு பாலாஜி அவென்யூ. அது எங்கே இருக்கு? திருமகள் நகருக்கு எதிர்த்தாப்புல இருக்கு. திருமகள் நகர் எங்க இருக்கு? அது கோமதி நகருக்கு பக்கத்துல. கோமதி நகர் சரஸ்வதி நகருக்கு பக்கத்துல. அதுக்கு வர மகாலட்சுமி நகர்ல இறங்கணும். அதுங்க பேர்களை சொல்லித்தானே ஆகணும்? நாம சொல்லாம இருக்க முடியுமா? எதிர் வீட்ல இருக்கிறவன் பேரு முருகன்னா, அவனை முருகான்னுதான் கூப்பிட முடியும்? மொர்தேகேயுன்னு கூப்பிட முடியுமா? முருகானு எதிர் வீட்டுக்காரனை பெயர் சொல்லிக் கூப்பிட்டா, மலைமேல இருக்கிற அந்த ஆண்டியவா நாம கூப்பிடுறோம்? இல்லையே! பாலாஜி அவென்யுவை பர்தலமேயு அவென்யூவை சொல்ல முடியுமா? முடியாதே. அந்நிய தேவர்களின் பெயரை உச்சரிக்கக் கூடாதுன்னா ஆராதிக்கக் கூடாதுன்னுதான் அர்த்தம்! பெயரே சொல்லப்பிடாதுன்னா, அது பயித்தியக்காரத்தனம் இல்லையா?

நம்ம பைபிளிலேயே அந்நிய தேவர்களின் பேர் இருக்கே

அப்படீன்னு பார்த்தா பைபிள்ல எத்தனையோ அந்நிய தேவர்

களின் பேர் இருக்கே. பாகால், சாத்ராக், மேஷாக், ஆபத் நேக்கோ, அப்பெல்லோ, கொர்நெலியூ இப்படி எத்தனையோ பேர்கள் இருக்கு. இதையெல்லாம் ஆவியானவர்தானே எழுதியிருக்காரு. பைபிள் படிக்கிற சமயத்தில் இந்த பேர்களை சொல்லாம இருக்கோமா? பல சரக்கு கடையில் போயி ஒரு மசாலா பாக்கெட்டுன்னு கேட்டா, அவன் எந்த மசாலா வேணும்? சக்தி மசாலாவா? இல்லை ஆச்சி மசாலாவான்னு கேக்கிறான். அப்பளம் வேணும்னு கேட்டா, அம்பாள் அப்பளமா? இல்லை சக்தி அப்பளமான்னு கேக்குறான். அந்தப் பெயரை நாம சொல்லித்தானே ஆகணும். சொல்லாம இருக்க முடியுமா?

ஜாமக்காரனில் விமர்சனம்

தாயப்பன் இப்படியெல்லாம் சொல்லிட்டு திரிகிறார்னு யாரோ ஒரு புண்ணியவான் ஜாமக்காரன் டாக்டர் புஷ்பராஜுக்கு எழுதிட்டாரு. அவரும் என்ன நெனச்சாரோ தெரியலை. அதை அப்படியே அவரோட ஜாமக்காரன் மேகசீன்ல போட்டுட்டு, தாயப்பனோட புத்தகம், சீடிகளை இனிமே ஒண்ணுக்கு ரெண்டு தடவை நல்லா பார்த்திட்டு அப்புறம் மத்தவங்களுக்கு கொடுங்கன்னு எழுதிட்டாரு. இதை எனக்கு ஒருத்தர் எழுதியிருந்தாரு. நான் உடனே டாக்டர் புஷ்பராஜை தொலைபேசியில தொடர்பு கொண்டு எல்லாத்தையும் நான் விளக்கமாக சொன்னேன். விரிவாக ஒரு கடிதமும் எழுதினேன். அவர் என்னோட லெட்டரை அவரோட மேகசீன்ல பப்ளிஷ் பண்ணாம எனக்கு ஒரு பதில் லெட்டர் எழுதியிருந்தார். அதுலயும் அவர் நான் சொன்னதை ஒத்துக்காம, சாய்பாபா, சங்கராச்சாரியார் பேர்களை எல்லாம் நீங்க உயர்த்தி எழுதியிருங்கன்னு எழுதினாரு.

அத்தனே பட்டிணத்தில் பவுல் விக்கிரஹ ஆராதனைக்காரரை பாராட்டினார்

நான் மறுபடியும் அவருக்கு ஒரு பதில் எழுதினேன். அத்தனே பட்டிணத்தில் விக்கிரஹங்களை ஆராதிக்கிறவங்களை பார்த்து பவுல் முதல்ல என்ன சொல்றாரு? **'உங்கள் அதீத பக்தியை நான் மெச்சுகிறேன்'**னு அவங்க விக்கிரஹ ஆராதனை பக்தியை பாராட்டித்தான் பேச்சை ஆரம்பிக்கிறாரு. அதுமாதிரி நான் இவங்களை உயர்த்தி கடைசியில என்ன சொல்றேன்? இவங்க நல்லவங்கதான். இவங்க உபதேசம் நல்லதுதான். இவைகளின் படி நடந்தா இனிமே நாம பாவம் செய்யாம இருக்கலாம். ஆனால் ஏற்கனவே நாம செஞ்ச பாவத்தை இவங்களால போக்க முடியாது.

ஏன்னா இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லைன்னு சம்பூர்ண மஹாபாரதம் சொல்றது. இவங்க யாருமே இரத்தம் சிந்தலை. அதுனால இவங்களால நம்ம பாவத்தை மன்னிக்க முடியாதுன்னு எழுதினேன். உங்களோட விமர்சனத்தையும் அந்த விமர்சனத்துக்கு என்னோட மறுப்பு பதிலையும் உங்க பத்திரிக்கையில போடுங்கன்னு எழுதினேன். அவரு போடலை.

என்னோட அடுத்த பதிப்பான **'சைவமும் வைணவமும் கிறிஸ்தவமும்'** அப்படீங்கிற புக்குல கவர் பேஜ்ஜிலயே 'ஜாமக்காரனின் விமர்சனமும், அதற்கு என்னுடைய பதிலும் உள்ளே' அப்படீன்னே எழுதி அவரோட விமர்சனம், என்னோட பதில், அதுக்கு அவரோட பதில், என்னோட இரண்டாவது கடிதமும் எல்லாத்தையும் அப்படியே பப்ளிஷ் பண்ணி, ஒரு காப்பியை அவருக்கும் அனுப்பிச்சுட்டேன். எனக்கென்ன பயமா? மடியில கனம் இருந்தாத்தானே வழியில பயம்? நாம தப்பு ஒண்ணும் பண்ணலையே. துர்உபதேசம் எதுவும் செய்யலையே. அவங்க கிறிஸ்துவுக்குள்ள வந்தப் பிறகு நாம தேவாரம், திருவாசகமா சொல்லிக் கொடுக்கப் போறோம்? பைபிள் மட்டும்தானே உபதேசிப்போம்!

ஜாமக்காரனின் புத்தகத்தை நானே வெளியிட்டேன்

அதுக்கப்புறம் கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஜாமக்காரன்ல அவரோட ஆரம்ப கால வாழ்க்கையை சாட்சியா 'திரும்பிப் பார்க்கிறேன்'னு எழுதியிருந்தாரு. அது நல்லா இருந்துச்சு. வாலிபர்களுக்கு ரொம்ப பிரயோஜனமா இருக்கும்னு தோணுச்சு. அவருக்கு போன் பண்ணினேன். அவரோட 'திரும்பிப் பார்க்கிறேன்' என்கிற அவரோட சாட்சியை நான் ஒரு புக்கா போடட்டுமான்னு பெர்மிஷன் கேட்டேன். தாராளமா போடுங்கன்னார். போட்டேன். எனக்கு அவர் மேலேயோ, வேறு யார் மேலேயோ எந்த கோபமும் கிடையாது. சில பேரை விட்டு கொஞ்சம் விலகி தள்ளி நிப்பேன். உலகப் பிரகாரமா, சுயநலத்தோட நம்மளை யூஸ் பண்ணிக்கணும்னு நினைக்கிறாங்களே அவங்களை விட்டு நான் கொஞ்சம் தள்ளி தூர இருப்பேன். வேற எந்த மனக் கசப்பும் கிடையாது.

டைம்ல ரொம்ப ஸ்டிரிக்டா இருப்பேன்

சில விஷயங்கள்ல நான் கொஞ்சம் ஸ்ட்ரிக்ட். அதுவும் குறிப்பா டைம் கீப்அப் பண்றதுல. எதையும் டயத்தோட செய்யுறதிலே கரெக்டா இருப்பேன். அது நான் 26 வருஷம் விமானப் படையில் இருந்ததுனால டைம் கீப் அப் பண்றது என் ரத்தத்துலயே ஊறிப் போச்சு. இதுவரைக்கும் ஆண்டவர் சுமார் 4500 சபை, இடங்கள்ல

கன்வென்ஷன்ல பேசும்படியா தேவன் எனக்கு கிருபை பாராட்டி யிருக்கிறார். இதுல ஒரு தடவை கூட எங்கேயும் நான் லேட்டா போனதே கிடையாது. டான்னு 1/2 மணி நேரத்துக்கு முன்னாடியே நான் இருப்பேன். அதே மாதிரி அவங்க கொடுத்த டயத்தில பேசி முடிப்பேன். முதல்லயே அவங்ககிட்டே எனக்கு பிரசங்கம் பண்ண இவ்வளவு டைம் வேணும்னு கேப்பேன். கொடுத்தா சபைக்கு, விசுவாசிகளுக்கு பிரயோஜனமா ஆண்டவரோட வார்த்தைகளை கொடுக்க முடியும். என்னைக் கூப்பிட்டா சபைக்கு ஏதாவது பிரயோஜனமா இருக்கணும். டைம் கொடுங்கன்னு கேட்பேன். கொடுத்தா ஓகே. கொடுக்கலைன்னா அவங்க குடுத்த டயத்திலயே பேசி முடிச்சுப்பேன்.

30 நிமிஷம் பேசுங்க என்றனர்

ஒரு சமயம் மதுரையில ஒரு சிஎஸ்ஐ சபையில என்னை பேசுறதுக்கு கூப்பிட்டிருந்தாங்க. அந்த சபைக்கு இதுதான் நான் முதல் தடவையா போறது. அதுனால என்னோட சாட்சியையும் சொல்ல வேண்டியிருந்தது. நார்மலா என்னுடைய முழு சாட்சியையும் நான் சொல்லணும்னா, தினமும் 1½ மணி நேரம் ரெண்டு நாள் நான் சொன்னாத்தான் அதை ஓரளவாவது சொல்ல முடியும். பிறகு செய்தி வேற கொடுக்கணும். எவ்வளவு டைம் கொடுப்பீங்க? நான் எப்போ முடிக்கணும்னு கேட்டேன். ஒரு 30 நிமிஷம் எடுத்துக்கோங்கன்னு சபை ஐயரு சொன்னாரு. கமிட்டி மெம்பர்ஸும் இருந்தாங்க. 30 நிமிஷம் பேசுறதுக்கு என்னை ஏன் மெட்ராஸ்லேர்ந்து கூப்பிட்டீங்க? நீங்களே மேனேஜ் பண்ணிக்கோங்க. மீட்டிங்கை கேன்சல் பண்ணுங்க என்றேன். உங்களுக்கு எவ்வளவு டைம் வேணும்னு கேட்டாங்க. எனக்கு நார்மலா பேச 2 மணி நேரம் வேணும். இது சண்டே சர்வீஸ்ங்கிறதுனால மேக்சிமம் எவ்வளவு டைம் கொடுக்க முடியுமோ கொடுங்க. கொடுத்தீங்கன்னா நல்லா இருக்கும்னு சொன்னேன். ஐயய்யோ அவ்வளவெல்லாம் நிச்சயமா கொடுக்க முடியாதுங்க. எங்க ஆளுங்க எந்திரிச்சு போயிடுவாங்க. வேணும்னா கூட ஒரு 5, 10 நிமிஷம் எடுத்துக்கோங்கன்னு கமிட்டி மெம்பர்ஸ் சொன்னாங்க.

மேலும் 45 நிமிஷம் பேசினேன்

நான் என்னோட சாட்சியை கொஞ்சம் சுருக்கமா சொல்லிட்டு, செய்தியையும் கொடுக்க ஆரம்பிச்சேன். அவங்க சொன்ன டைம் பிரகாரம் கரெக்டா 40 நிமிஷம் ஆன உடனே நிறுத்தினேன். நிறுத்திட்டு சொன்னேன். உங்க ஐயரும், உங்க கமிட்டி மெம்பர்ஸும்

நான் 40 நிமிஷம்தான் பேசணும்னு டைம் கொடுத்தாங்க. இப்போ 40 நிமிஷம் ஆயிடுச்சு. இதோட நான் நிறுத்திடவா? இல்லை தொடரவா? தொடரலாம்னு சொல்றவங்க மட்டும் கையை தூக்குங்கன்னு சொன்னேன். அங்க இருந்த எல்லாருமே ஏறத்தாழ 600 பேரும் கையைத் தூக்கிட்டாங்க. ஐயரையும், கமிட்டி மெம்பர்களையும் திரும்பி ஒரு பார்வை பார்த்தேன். இனி அவங்களை பத்தி கவலை இல்லை. மக்களின் தீர்ப்பே மகேசனின் தீர்ப்பு. யாரு இனி என்ன செய்ய முடியும்? அல்லேலுயான்னு சொல்லிட்டு மேலும் முக்கால் மணிநேரம் பேசினேன். ஒருத்தர் கூட எழுந்து போகலை. அப்படியே ஆடாம அசையாம உட்கார்ந்து இருந்தாங்க. மீட்டிங் முடிஞ்சப்புறம் எல்லாருமே சொல்றாங்க. இந்த மாதிரி மெசேஜ் இருந்தா யாருங்கவேண்டாம்னு சொல்லுவாங்க? இன்னும் கொஞ்சம் பேசமாட்டீங்களான்னுதான் இருந்தது. ரொம்ப நல்லா இருந்தது. உங்க செய்தியை கேட்டா பிறகுதான் நாங்க இன்னும் கடந்து வரவேண்டிய பாதை எவ்வளவு தூரம் இருக்குன்னு தெரிஞ்சது என்றனர்.

குளத்தூர்ல ஒரு பப்ளிக் மீட்டிங்

குளத்தூர்ல ஒரு தடவை பப்ளிக் மீட்டிங்கிற்காக தெருவில மேடை போட்டிருந்தாங்க. மேடைக்கு எதிரிலே ஒரு தெரு. இடது புறம், வலது புறம் ஒவ்வொரு தெரு. தெரு ரோட்டில ஒரு சைடுல மூணு சேர் வரிசையில தெரு முழுக்க போட்டிருந்தாங்க. நடக்க, போக வர என்று சைடுல ஒரு நாலு அடி விட்டிருந்தாங்க. மெயின் ரோட்டுக்கு பேரலல்லா இருக்கிற ஒரு ரோடு. அந்த ரோடு வழியா அடுத்த தெருவுக்கும் போகலாம். இதுக்கு அடுத்த தெரு வழியாவும் போகலாம். ஆனா மேக்சிமம் இந்த ரோடு வழியாகத்தான் எல்லாருமே போவாங்க, வருவாங்க. மூணு தெருவிலேயும் எல்லா சேர்களிலேயும் ஜனங்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. நான் மூணு பக்கமும் திரும்பி திரும்பி பார்த்து பேசிக்கிட்டு இருந்தேன்.

போலீஸில் புகார்

அப்போ யாரோ ஒருத்தர் மெயின் ரோட்ல இருந்து மோட்டார் பைக்ல இந்த தெரு வழியா போறதுக்கு பைக்ல வந்துட்டாரு. வந்தாப் பிறகுதான் அவருக்கு தெரியுது, இங்க ஏதோ மீட்டிங் நடக்குதுன்னு. நான் என்ன பேசுறேன்னு கேக்குறதுக்காக வண்டி இன்ஜினை ஆஃப் பண்ணாம அப்படியே லேசா ஆசுலேஷன் கொடுத்துக் கிட்டே வண்டில உட்கார்ந்து கேட்டுக்கிட்டு இருந்திருக்காரு. அங்க சேர்ல உட்கார்ந்து கேட்டுக்கிட்டு

இருந்த நம்ம ஆளுக்கு அது புடிக்கலை. அந்த ஆளை ஏதோ சொல்லக் கூடாத வார்த்தையில சொல்லி திட்டிட்டாரு. கொஞ்சம் பொறுமையா, சமாதானமா சொல்லி இருந்தா இந்தப் பிரச்சினை வந்திருக்காது. நம்மாளுங்ககிட்டதான் அது இல்லையே. அந்த ஆளு ஏதோ சொல்ல, இவரு அதுக்கு ஏதோ பதில் சொல்ல, வாக்குவாதம் பெருசாகி சண்டை ஆயிடுச்சு. அவரு நேரா போலீஸ் ஸ்டேஷன் போய் கம்ப்ளைண்ட் கொடுத்திட்டாரு. இந்து மதத்தை குறிச்சு இந்து மத பெரியவங்களைக் குறிச்சு கேவலமா பேசுறாங்க. தெருவை அடைச்சு மீட்டிங் போடுறாங்க அப்படீன்னு புகார் கொடுத்திட்டாரு போல. ஒரு வேன் நிறைய போலீஸ். ஒரு டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர்னு ஒரு பெரிய படையே வந்து எறங்கிடுச்சு. டி.எஸ்.பி. அங்க இருக்கிறவங்ககிட்டே பேசிக்கிட்டு இருந்தாரு.

சாய்பாபாவின் உபதேசம் இனிமேல் பாவம் செய்யாதபடி தடுக்கும்

இதை நான் மேடையில இருந்தே பாத்துக்கிட்டே இருக்கேன். ஆவியானவர் இடைப்பட்டார். டிராக்கை மாத்துன்னார். நான் உடனே 'சாய்பாபா நல்லவர், சங்கராச்சாரியார் நல்லவர், பங்காரு அடிகளார் நல்லவர். இவங்கள்லாம் ரொம்ப நல்லவங்க. இறைவன் இவர்களை எல்லாம் உருவாக்கி, நல்ல ஞானத்தை கொடுத்திருக்கிறார். அதுனால நம்மை பண்படுத்துகிற, பாவம் செய்யாதபடி தடுத்து நிறுத்துகிற நல்ல உபதேசங்களை செய்யுறாங்க. இவங்களோட உபதேசத்தின் பிரகாரம் நாம நடந்தா தப்பு, பாவம் எதுவும் செய்ய மாட்டோம். அதாவது இனிமே எதுவுமே செய்ய மாட்டோம். ஆனா ஏற்கனவே நாம செஞ்ச பாவத்தையோ அல்லது ஜென்ம பாவத்தையோ இவங்களால போக்க முடியாது என்றேன்.

இவங்க நல்லவங்கன்னு நீ சொல்ல மாட்டே

ஏன்னா 'இரத்த பிரதோஷணம் பாபவிநாசம்னு' சம்பூர்ண மஹாபாரதம் சொல்லுது. அதாவது இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லைன்னு அர்த்தம். இவங்க ரொம்ப நல்லவங்க. ஆனா, இவங்க இரத்தம் சிந்தலை. அதுனால இவங்களால நாம ஏற்கனவே செஞ்ச பாவத்தை போக்க முடியாது. இனிமே வேணா பாவம் செய்யாதபடி இருக்கலாம். ஆனா பரலோகம் போக முடியாதே' அப்படீன்னு சொன்னேன். அந்த டி.எஸ்.பி. இதைக் கேட்டுட்டு, புகார் கொடுத்தவனை ஒரு போடு போட்டாரு. இவங்கள்லாம் நல்லவங்கன்னு நீ சொல்ல மாட்டே. அவரு மேடையிலே இருந்து சொல்லிக்கிட்டு இருக்காரு. அவரு என்னடா

தப்பா பேசினாருன்னு இன்னும் ஒரு அடி போட்டாரு. அதோட எந்த பிரச்சினையும் இல்லாம அப்புறம் மீட்டிங் நல்லபடியா முடிஞ்சது. அல்லேலூயா!

வாலாஜாபாத்தில் ஊழியம்

ஒரு சமயம் என்னை காஞ்சிபுரம் போற பாதையில இருக்கிற வாலாஜாபாத்தில் ஒரு பாஸ்டர் அவரு சபையில பேசறதுக்கு ஒரு சண்டே அன்னிக்கு கூப்பிட்டிருந்தாரு. 8 மணிக்கு காலையிலே வந்திருங்கய்யா. நான் பஸ் ஸ்டாண்டுலேயே வெயிட் பண்றேன்னாரு. நான் கரெக்ட்டா 7.50க்கெல்லாம் அங்கே போயிட்டேன். போன உடனே அவருக்கு போன் பண்ணினேன். நான் பஸ் ஸ்டாண்டுக்கு எதிர்லே இருக்கிற ஒரு ஹோட்டலுக்கு முன்னாடி நிக்கிறேன்னு சொன்னேன். ஐயா இதோ நான் வந்திட்டேன்னாரு. நான் வெயிட் பண்ணிக்கிட்டு இருந்தேன். 8.15 ஆச்சு. மறுபடியும் போன் பண்ணினேன். ஐயா இருங்க, நான் வந்திடுவேன்னாரு. 8.30 ஆச்சு, 8.40ம் ஆச்சு. மறுபடியும் போன் பண்ணினேன். ஐயா சாரி இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திடுறேன்னார்.

ஒரு மணி 30 நிமிஷம் காக்க வச்சுட்டாரு

மணி 9 ஆச்சு. எனக்கு அங்கே உட்கார கூட இடம் இல்லை. நின்னு நின்னு கால் வலிக்க ஆரம்பிச்சுடுச்சு. 9.05க்கு மறுபடியும் போன் பண்ணினேன். அப்பத்தான் அவரு சொல்றாரு. நான் வேறு ஒரு சபையில பேசிக்கிட்டு இருக்கேன். ஒரு 10நிமிஷத்துல வந்துடுறேன்னாரு. எனக்கு கடுப்பாயிடுச்சு. 5, 10 நிமிஷம் ஓகே. 1 மணி 20 நிமிஷத்துக்கு மேலே என்னை காக்க வச்சுட்டாரு. இவருக்கு வேற ஒரு சபையில மீட்டிங் இருக்குன்னா அதுக்கு ஒரு தகுந்தாப்பில என்னை 9 மணிக்கு வரச் சொல்லி இருக்கலாமே. எதுக்கு 8 மணிக்கே வரச் சொல்லணும்? ஒரு ஊழியக்காரரா இருந்துக்கிட்டு இன்னொரு ஊழியக்காரரை மதிக்கத் தெரியலையே. இவரு என்ன மனுஷன்? நான் நிக்கிற இடத்துக்கு ஆப்போசிட்லதான் நான் தாம்பரத்துக்கு திரும்பி போற பஸ் வந்து நிக்கும். அங்கே போயி நின்னுட்டேன். பஸ்ஸூம் வந்தது.

அவர் செய்தது தப்பு; நீ செஞ்சது ரைட்டா?

இதுல நான் ஏறப் போறேன். அப்பதான் அவரு வர்றாரு! 'ஐயா'ன்னு கூப்பிட்டாரு. சாரிய்யா. ஒரு மணி நேரத்துக்கு மேல் நின்னுட்டேன். ஊழியக்காரனை மதிக்கத் தெரியணும்மய்யா. சாரி. இப்போ நான் திரும்பிப் போறேன்னு சொல்லிட்டு பஸ் ஏறிட்டேன்.

ஐயா, ஜனங்க வெயிட் பண்ணுவாங்கன்னு சொன்னாரு. 'சாரிய்யா. இன்னொரு தடவை பார்ப்போம்னு பஸ்ஸிலே ஏறிட்டேன். பஸ்ஸில ஏறினா பிறகு ஆவியானவர் பேசினார். 'டேய்.. அவரு பண்ணினது சரின்னு நான் சொல்லலை. ஆனா நீ செஞ்சது சரியா? ஜனங்க வெயிட் பண்றாங்கன்னு சொன்னாருல்ல. நீ போகாதது தப்பு'ன்னு எனக்கு உணர்த்தினார். அப்பத்தான் நான் பண்ணின தப்பும் எனக்குப் புரிஞ்சது. உடனே அவருக்கு போன் பண்ணி என்னை மன்னிச்சிடுங்கய்யா. ரொம்ப நேரம் என்னை காக்க வச்சதுல நான் கடுப்பாகிட்டேன். சாரி.. இன்னொரு தடவை கூப்பிடுங்க. நான் கண்டிப்பா வர்றேன்னேன். அவரும் சரின்னார். அதுக்கப்புறம்தான் எனக்கு கொஞ்சம் நிம்மதியே வந்தது.

கிருஷ்ணகிரியில் பேச அழைப்பு

இன்னொரு தடவை கிருஷ்ணகிரியில் மூன்று நாள் கூட்டத்துக் காக ஒரு தடவை என்னை ஒரு ஊழியக்காரர் கூப்பிட்டிருந்தார். பஸ் ஸ்டாண்டுக்கு பக்கத்திலேயே ஒரு லாட்ஜ்ல ரூம் ஏற்பாடு பண்ணிடுறேன்னார். நீங்க காலையில பஸ்ஸில வந்திடுங்கன்னார். நான் தாம்பரத்தில் பஸ் ஏறிய உடனேயே அவருக்கு போன் அடிச்சேன். வாங்கய்யா. நான் பஸ் ஸ்டாண்டில் வெயிட் பண்றேன்னார். வேலூர் வந்தவுடனேயே போன் செஞ்சேன். கிருஷ்ணகிரி வந்து இறங்கினேன். அவர் வரலை. போன் செஞ் சேன். எடுக்கலை. ஒரு பத்து தடவையாவது போன் அடிச்சேன் எடுக்கலை. அவருக்கு என்ன ஆச்சுன்னு தெரியலையேன்னு எனக்கு ஒரே குழப்பம். பஸ் ஸ்டாண்டுக்கு பக்கத்தில் இருக்கக் கூடிய மூணு, நாலு லாட்சுல போயி விசாரிச்சேன். என் பெயரிலோ, அல்லது அந்த ஊழியக்காரர் பேர்லயோ ரூம் எதுவும் புக் ஆகலை. நான் பஸ்ஸை விட்டு இறங்கி ஒரு மணி நேரத்துக்கும் அதிகமா ஆயிடுச்சு. ஒரு தகவலும் இல்லை. லக்கேஜோட நிக்கிறேன். பிறகு ஏஜி சர்ச் பாஸ்டர் எல்.ஜோசப்புக்கு (ஏற்கனவே அந்தச் சபைக்கு இரண்டு மூணு தடவை வந்திருக்கேன்) போன்பண்ணி விஷயத்தைச் சொன்னேன். அவர் இதோ ஒரு நிமிஷத்தில நான் அங்க வர்றேன். அங்கேயே இருங்கன்னார். 5 நிமிஷத்தில் கார்ல வந்து என்னை பிக்கப் பண்ணி அவர் வீட்டுக்கு கூட்டிட்டுப் போயிட்டாரு. வர்றதுக்கு முன்னாடி அவரும் அவருக்கு போன் பண்ணியிருக்காரு. போன் எடுக்கலை.

ஊழியக்காரர்களுக்குள் ஒற்றுமை இல்லையே

'ஐயோ... ரெண்டு நாளைக்கு முன்னதான் உங்களைப் பத்தி

பேசிக்கிட்டு இருந்தோம். இப்போ நேர்லயே வந்திட்டீங்க. இன்னிக்கு இங்க ஒரு பாஸ்டர்ஸ் மீட்டிங் இருக்கு. அதுல நீங்க பேசுங்கன்னார். நான் சொன்னேன். அந்த ஊழியக்காரரும் என்னை பாஸ்டர்ஸ் மீட்டிங்கிலே பேசுறதுக்குத்தான் கூப்பிட்டிருக்காரு. அப்ப ரெண்டு மீட்டிங்கும் ஒண்ணுதானான்னு கேட்டேன். இல்லய்யா, அது வேற ஒரு ஐக்கியம். இது வேற ஒரு ஐக்கியம்ன்னார். என்ன கொடுமை பாருங்க. ஊழியக்காரங்களுக்குள்ளேயே ஒரு ஐக்கியமில்லாத ஐக்கியம்! பிரிவினை! பிறகு எப்படி சுவிசேஷம் பரவும்? நான் இவரோட பாஸ்டர்ஸ் மீட்டிங்கிற்கு கிளம்பிக்கிட்டு இருக்கேன். அப்பத்தான் அந்த ஊழியக்காரர் போன் பண்ணினார்.

ஊழியக்காரரை அசட்டை பண்ணுகிறார்கள்

ஐயா எங்கே இருக்கீங்கன்னு கேட்டாரு. பிறகு நான் வெயிட் பண்ணிக்கிட்டு இருந்த விஷயத்தையும், நாலு லாட்ஜில விசாரிச்சதையும் சொன்னேன். சாரிய்யா, என் செல்போன்ல சார்ஜ் இல்லாம இருந்திருக்கு. அப்பப்போ என்னோட செல் கொஞ்சம் மக்கரும் பண்ணுது. அதுனாலதான் போன் பண்ண முடியலைன்னு சொன்னார். அவர் போன் பண்ணலைன்னா, வேற யார் மூலமாவது என்னை தொடர்பு கொண்டிருக்கலாமே. இல்லைன்னா போன் பண்ணாம அவரே என்னை ரிசீவ் பண்ண வந்திருக்கலாமே. இதுக்கு நான் பஸ் ஏறின உடனேயும், வேலூரில் இருந்தும் போன் செஞ்சிருக்கேன். காலையில நான் வருவேன்னு தெரியும். அப்படியும் அவர் வரலை. என்ன என்னமோ ஜால்ஜாப்பு எல்லாம் சொன்னாரு. இப்போ வாங்கய்யா. பாஸ்டர்ஸ் எல்லாம் காத்திக்கிட்டு இருக்காங்கன்னார். சாரிய்யா, நான் இன்னொரு பாஸ்டர்ஸ் மீட்டிங்கில பேசுறேன். மன்னிச்சிடுங்கன்னு சொல்லிட்டு போனை கட் பண்ணிட்டேன். இப்படியும் ஒரு சில அனுபவங்கள்.

பெரிய சபை, சின்ன சபை என்று பார்ப்பதில்லை

ஊழியத்துக்கு என்னை பிளேன் டிக்கெட் அனுப்பி கூப்பிடு கிறவர்களும் இருக்காங்க. சைக்கிள்ல பின்னாடியே வச்சு கூட்டிட்டுப் போறவங்களும் இருக்காங்க. பெரிய சபை, சின்ன சபைன்னு நான் பாக்குறதே கிடையாது. சின்ன சபைதானே பெரிய சபையா மாறணும். 20000 பேர் இருக்கிற சபையிலும் பேசுவேன். 20 பேர் இருக்கிற சபையிலும் பேசுவேன். அந்த 20 பேர்ல ஒரு பேதுரு, ஒரு பவுல், ஒரு எஸ்தர் எழுந்திருக்கலாமே. அதனால் நான் சபையைப் பார்க்கிறதில்லை.

ஒரு தடவை சீர்காழிக்கு அருகில் இருக்கிற ஒரு ஊருக்கு என்னை ஒரு போதகர் அழைத்திருந்தார். அப்போது நான் கும்பகோணத்தில் மூன்று நாள் மீட்டிங் முடித்து விட்டு சீர்காழிக்கு பஸ்ஸில் வந்தேன். பஸ் ஸ்டாண்டில் என்னை ரிசீவ் பண்ண அந்த பாஸ்டர் வந்திருந்தார். நான் பஸ்ஸை விட்டு கீழே இறங்கியவுடன் என்னுடைய சூட்கேசை அவர் வாங்கிக் கொண்டார். கொஞ்ச தூரம் நடந்து ஒரு சைக்கிள் நின்று கொண்டிருந்த இடத்திற்கு என்னைக் கூட்டிக் கொண்டு வந்தார். சொல்ல தயங்கித் தயங்கி என்னிடம் அவர் கேட்டார். ஐயா சைக்கிள் கேரியர்ல உட்கார்ந்துப்பீங்களா? கொஞ்சதூரம்தான். இந்தாதான் இருக்குன்னார். அவர் நிலைமையை நான் புரிந்து கொண்டேன். ஒரு ஆட்டோவை வைத்து அழைத்துச் செல்லக் கூட வசதி வாய்ப்புகள் இல்லை போலும். 'ஓ தாராளமாக.. நல்லா உட்கார்ந்துப்பேன்' என்றேன்.

ஏழு கிலோ மீட்டர் சைக்கிள் கேரியரில் பயணம்

என் சூட்கேசை முன்னாடி உள்ள ஹேண்பாரில் அப்படியே சாய்த்தபடி பிடித்துக் கொண்டார். தோல் பையை நான் தோளில் மாட்டிக் கொண்டேன். சைக்கிள் பின்புறம் உள்ள கேரியரில் ஏறி உட்கார்ந்தேன். அவர் சைக்கிளை மிதிக்க ஆரம்பித்தார். கொஞ்ச தூரம்தான். இந்தா இருக்கு என்றவர் லொக்கு.. லொக்குன்னு 7 கிலோ மீட்டர் ஓட்டிட்டுப் போனாரு. அதுவும் லக்கேஜோட. என்னை பின்னாடி உட்கார்த்தி வச்சுக்கிட்டு. கடைசியா ஒரு வழியா ஒரு கிராமத்துல ஒரு நீளமான குடிசைக்குப் பக்கத்திலே ஒரு சின்ன குடிசைக்கு முன்னாடி நிறுத்தினார். இரண்டிலேயும் மண் தரை. அதன் மேல மாட்டுச் சாணம் பூசியிருக்கு. சர்ச் மேலே கூரை வேய்ந்திருந்தாலும், பாக்குறதுக்கு நல்லா நீட்டா, சுத்தமா அழகா இருந்தது. சுற்றிலும் ஒரு மூணு அடி உயரத்துக்கு மண் சுவரு. அதுக்கு மேல கூரை வரைக்கும் மூங்கிலில் சட்டம் சட்டமாக செய்யப்பட்டிருந்த ஒரு தடுப்பு. ஒண்ணு ரெண்டு வசன அட்டைகள் தொங்குது.

ஒப்பனான ஒரு குளியல் அறை

பக்கத்தில் இருக்கிற ஒரு சின்ன குடிசைக்கு என்னை கூட்டிட்டு போனாரு. பாஸ்டரின் மனைவி கொஞ்ச வயசுதான். ரொம்ப அன்பா ஸ்தோத்திரம் சொல்லி வாங்கன்னாங்க. ஐயா குளிச்சிட்டு ரெடியாயிடுங்கன்னு சொல்லி என்னை குடிசைக்கு பின்புறம் கூட்டிச் சென்றார் பாஸ்டர். மூன்று பக்கமும் ஓலை வைத்து வேய்ந்து கவர் பண்ணின ரொம்ப சின்ன குளியல் அறை. ஒரு

பக்கம் தட்டியோ, கதவோ, மூடியோ அல்லது ஒரு தொங்கல் சாக்கு கூட இல்லாம அப்படியே ஒப்பனா இருக்கக் கூடிய ஒரு இடம். உள்ளே எட்டிப் பார்த்தேன். உள்ளே ஒரு ஓரத்தில் ஒரு சிமிண்ட் தொட்டி. அதன் அருகில் தண்ணீர் விழுந்து விழுந்து சகதியாகிப் போன ஒரு இடத்துல நாலு செங்கல். அதுமேல நின்னுக்கிட்டு குளிக்கணும். கொஞ்சம் பேலன்ஸ் பண்ணி நிக்கணும். கொஞ்சம் எசகு பிசகா ஆச்சுன்னா கால் சகதியில பொலக்குன்னு உள்ளே போயிடும். ஒப்பனா இருக்கிற பக்கம் வழியா பார்த்தா கொஞ்சம் தூரத்துல ஆள் நடமாட்டம் தெரியுது. இங்க எப்படி குளிக்க? கதவோ, ஒரு மறைவோ இல்ல. பேலன்ஸ் பண்ணி நின்னுக்கிட்டு வேற குளிக்கணும்.

நீ ஆம்பிளை. உனக்கென்ன கொள்ளை?

பாஸ்டர் ரெண்டு பிளாஸ்டிக் குடத்துல தண்ணியை கொண்டு வந்து சிமிண்ட் தொட்டியில ஊத்தினாரு. ஐயா சாரி.. நான் ரொம்ப சின்ன ஊழியக்காரன். வசதி வாய்ப்பு இல்லை. கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்கன்னார். இது என்னப்பா கொடுமைன்னு நான் தயங்கிக்கிட்டு நிக்குறேன். ஆவியானவர் என்னிடம் இடைப்பட்டார். 'ஏலே பாஸ்டரம்மா ஒரு பொம்பளை.. அவங்களே இங்கதானே குளிக்கிறாங்க... ஆம்பளை நீ. உனக்கு என்ன கொள்ளை?' அப்படின்னார். அவ்வளவுதான். மடமடன்னு நாலு சொம்பு தண்ணியை தலையில ஊத்தினேன். குளிச்சேன். துண்டை எடுத்து துடைச்சிக்கிட்டு பத்திரமா வெளியில வந்துட்டேன். குடிசைக்குள்ள கொஞ்சம் குனிஞ்சுதான் போகணும். நிமிர்ந்துக்கிட்டே போக முடியாது. ஆனா கூட்டத்துக்கு ஒரு 100 பேருக்கு மேல வந்தாங்க. எல்லாம் கிராமத்து ஜனங்க. பாமர மக்கள். படிக்காதவங்க. ஆனா ரெம்ப ஆர்வமா வந்தாங்க. சாட்சியையும், சத்தியத்தையும் கேட்டாங்க. மனசுக்கு திருப்தியா இருந்துச்சு. ஆண்டவர் இப்படியும் பல இடங்களில் பிரசங்கம் பண்ணும்படியாகவும் தெரு ஓரங்களில் நின்றுகொண்டு வயல்காடுகளில் வரப்பில் நின்று கொண்டு பிரசங்கிக்கவும் எடுத்து பயன்படுத்தியிருக்கிறார். அதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். 5 ஸ்டார், 3 ஸ்டார் ஹோட்டல்களிலும் தங்க வைத்திருக்கிறார். இப்படி மண் குடிசைகளிலும் தங்கி .ஊழியம் செய்யும் பாக்கியத்தையும் கொடுத்திருக்கிறார். அல்லேலூயா!

தர்மபுரி அருகேயுள்ள ஒரு சிறிய கிராம ஊழியம்

ஒரு முறை தர்மபுரிக்கு அருகில் ஒரு ஊரில் பிரசங்கம்

செய்ய என்னை அழைத்திருந்தனர். கிராமத்தில் பப்ளிக் மீட்டிங். நல்ல கூட்டம். ஜனங்க நல்ல பொறுமையோடு, ஆர்வத்தோட சாட்சியையும், செய்தியையும் கேட்டார்கள். நிறைய பேர் இறுதியில் ஆண்டவரை ஏற்றுக் கொண்டனர். மனசுக்கு மிகவும் திருப்தியாக இருந்தது. மீட்டிங் முடிச்சிட்டு வயல்காட்டில் காலியாக இருந்த ஒரு பண்ணை வீட்ல என்னை தங்க வச்சாரு அந்த பாஸ்டர். வீடு நல்லா பெரிசாவே இருந்தது. ரூமும் ரொம்ப பெருசாவே இருந்தது. மீட்டிங் முடிஞ்சு, ஹோட்டல்ல சாப்பிட்டுட்டு வர்றதுக்கு ரொம்ப லேட்டா ஆயிடுச்சு. அதுனால அவரும் அதிக நேரம் இருக்கலை. இங்க எல்லாம் இருக்குது. நான் காலையில வந்திடுறேன். இங்கு உங்களுக்கு எந்த டிஸ்டர்பன்சும் இருக்காது. நிம்மதியா நீங்க படுத்து ரெஸ்ட் எடுத்துக்கோங்கன்னு சொல்லிட்டு போயிட்டாரு. நானும் சரின்னு சொல்லிப் படுத்துட்டேன். காலையிலே எந்திரிச்சு பாத்ரூம் எங்கே இருக்குன்னு வீடு முழுக்க தேடுறேன். எங்கேயுமே இல்லை.

திறந்தவெளி ஓப்பன் ஏர் டாய்லட்

ஒருவேளை வெளியிலே அதுக்கு வாசல் இருக்கோன்னு வெளியில வந்தும் தேடுறேன். அப்படி எதுவும் இல்லை. எனக்கு ஒண்ணும் புரியலை. எனக்கு காலைக் கடன்களை முடிக்காம கொஞ்சம் அன் ஈசியா இருந்துச்சு. என்ன பண்றதுன்னு தெரியலை. பாஸ்டருக்கு போன் அடிச்சேன். எடுக்கலை. வெயிட் பண்றது தவிர வேறு வழியில்லை. வெயிட் பண்ணினேன். 7 மணிக்கு மேலே காபியோட வந்தாரு. பாத்ரூம் எங்கேய்யா இருக்குன்னு அவர்கிட்டே கேக்குறேன். என்னய்யா இப்படி கேக்குறீங்க? இப்படி வாங்கன்னு வெளியிலே கூட்டிட்டுப் போனாரு. எதிர்த்தாப்புல இருக்கிற திறந்த வெளியில ரெண்டு கையையும் விரிச்சு ஆட்டிக் காட்டினாரு. எங்கவேணா, ஃபிரியா காத்தாட போங்கய்யா அப்படீன்னு சொல்லி சிரிக்கிறார். எனக்கு பக்குன்னு ஆயிடுச்சு. இப்படியும் ஒரு ஊரான்னு சுத்தியும் முத்தியும் பாத்தா மறைவா ஒரு சின்ன செடி, கொடி, மரம் கூட இல்லை. எல்லாம் பொட்டைக் காடு. கொஞ்ச தூரம் தள்ளி தென்னந்தோப்பு. என்ன பண்ண? கையில ஒரு சொம்பு தண்ணீரோட தான் நான் போனேன். இப்படியும் ஒரு அனுபவம். அல்லேலூயா! சிரிக்காதீங்க. ப்ளீஸ். எனக்கு எப்படியோ இருக்கு!

நடுவக்குறிச்சியில் ஒரு மீட்டிங்

ஒரு தடவை தூத்துக்குடி அருகில் உள்ள நடுவக்குறிச்சியில்

ஒரு சி.எஸ்.ஐ. சபையில அதோட நூற்றாண்டு விழாவில மூணு நாள் கன்வென்ஷன்ல பேசுறதுக்கு என்னை கூப்பிட்டிருந்தாங்க. 100 வருஷமா இருக்கிற அந்த சர்ச் காம்பவுண்டு சுவருக்கு பக்கத்திலேயே ஒரு பிள்ளையார் கோயிலை கட்டியிருந்தாங்க. அந்த கோயில்ல ஏதோ திருவிழா. அங்க காலையிலேயே 5 மணிக்கு ரேடியோ போட்டாங்கன்னா ராத்திரி 10 மணி வரைக்கும் போட்டு சும்மா ரேடியோவை அலற விட்டுக்கிட்டு இருந்தாங்க. அதுவும் மீட்டிங் டயத்தில இன்னும் ஜாஸ்தி வால்யூம் வச்சு அலற விடுவாங்க. ரொம்ப டிஸ்டர்பன்ஸா இருந்தது. சி.எஸ்.ஐ. ஐயர் கிட்டே சொன்னேன். '100 வருஷமா இந்த சர்ச் இருக்கு. இவங்க நேத்து இங்க ஒரு கோயிலை கட்டிக்கிட்டு இப்படி எடஞ்சல் பண்றாங்க. போயி சொல்லுங்கய்யா. அட்லீஸ்ட் மீட்டிங் நடக்குற சமயத்திலாவது வால்யூமை கொறைக்க சொல்லுங்கய்யா'ன்னு சொன்னேன். அவர் அதைக் கண்டுக்கிடலை.

ஜெபம் செய்வோம், தேவன் கிரியை செய்வார்

மூணாவது நாள் நான் மீட்டிங்கில ஜனங்ககிட்டே சொன்னேன். இதுக்காக எல்லாரும் ஜெபம் பண்ணுங்க. தாம்பரத்தில் செல்லி நகர்ல இப்படித்தான் ஒரு அம்மன் புற்றுக் கோயில் ரோட்டை அடைச்சு கட்டி, வருஷா வருஷம் மேடை போட்டு அதுல கச்சேரி, டான்ஸ் எல்லாம் வைப்பாங்க. ரோட்டிலேயே கூட்டமா பொங்கலிடுவாங்க. தீ மிதிப்பாங்க. நாள் முழுக்க ரேடியோ அலறும். ஆடிப் பூரம் அது இதுன்னு தொடர்ந்து திருவிழா கொண்டாடுவாங்க. அதுக்காக தொடர்ந்து ஜெபிச்சோம். ஒரு நாள் ராத்திரியோட ராத்திரியா ஹைவேஸ் டிப்பார்ட்மெண்ட்காரங்க வந்து கோயில்ல பாதியை அப்படியே இடிச்சுத் தள்ளிட்டாங்க. அதுபோல சிட்லபாக்கம் ஏரிக் கரையில வரிசையா ஐயப்பன் கோயில், அம்மன் கோயில், பிள்ளையார் கோயில்னு புறம்போக்கு நிலத்துல கட்டியிருந்தாங்க. அதுக்காக தொடர்ந்து ஜெபிச்சோம். ஒருநாள் அந்த மூணு கோயிலையுமே இடிச்சு தள்ளிட்டாங்க.

போலீஸ் கம்ப்ளைண்ட்

இந்த மாதிரி மதுரை, ராம்நாட்டில இருக்கிற ரோட்டோர கோயில்களுக்காகவும் ஜெபிச்சோம். ஆண்டவர் எல்லாத்தையும் காலி பண்ணிட்டாரு. இந்த கோயிலுக்காகவும் ஜெபிப்போம். ஆண்டவர் என்ன செய்யணுமோ அதைச் செய்வார். ஜெபம் பண்ணுங்கன்னு சொன்னேன். ஜெபம் பண்ணினோம். இதை யாரோ போயி வத்தி வச்சுட்டாங்க போல இருக்குது. ஆர்.எஸ்.எஸ்.

இந்து முன்னணி எல்லாம் சேர்ந்து அந்த கோயில் தர்மகர்த்தா மூலமா போலீஸ் கம்ப்ளைண்டு கொடுக்க வச்சுட்டாங்க. தாயப்பன் கோயிலை இடிக்க சொல்றாரு. இந்து சாமிகளை கன்னாபின்னான்னு திட்டினாரு அப்படீன்னு இல்லாதது பொல்லாதது எல்லாம் நான் சொன்னதா சொல்லி புகார் கொடுத்திட்டாங்க. போலீஸும் அதை வாங்கிக்கிட்டாங்க.

எனக்கு வெளியே வர முடியாத அரெஸ்ட் வாரண்ட்

மறுநாள் 4, 5 லாரியில ஒரு 100, 200 பேர் பேனர் எல்லாம் கட்டி 'போதகர் தாயப்பனை அரெஸ்ட் பண்ணு'ன்னு கோஷம் எல்லாம் போட்டுக்கிட்டு போலீஸ் ஸ்டேஷன்ல போயி கலாட்டா பண்ண, உடனே என் மேலேயும், அந்த சி.எஸ்.ஐ. சர்ச் செக்ரட்டரி மேலேயும் கேஸ் எழுதிட்டாங்க. இது அங்க இருக்கிற நெறைய லோக்கல் பேப்பர்களிலேயும் வந்திடுச்சு. நான் 3 நாள் மீட்டிங் முடிச்சிட்டு சென்னைக்கு கிளம்பி வந்துட்டேன். மறுநாள் காலையிலே எனக்கு ஒரு போன் வருது. இது மாதிரி ஆயிடுச்சுன்னு. ஒரு வக்கீல் வச்சு அட்வான்ஸ் பெயில் ஆர்டர் வாங்க ட்ரை பண்ணிக்கிட்டு இருக்கோம்னு சொன்னாங்க. ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி பிரஷர்னால ஸ்டேயும் வாங்கிட்டாங்க. போலீஸ் எனக்கு பெயில் கொடுக்கக் கூடாதுன்னு தடுத்துட்டாங்க. அதாவது வெளியிலேயே வர முடியாத அளவு அரெஸ்ட் வாரண்டுக்கு. அனுமதியும் வாங்கிட்டாங்க. பேப்பர்ல எல்லாம் வந்திடுச்சு. பேப்பர் நியூஸ் எல்லாம் பார்த்திட்டு அங்க நடந்த பாஸ்டர்ஸ் மீட்டிங்கிலே இதைப் பத்தி டிஸ்கஸ் பண்ணிட்டு பிறகு 100 பாஸ்டர்களுக்கு மேலே கலெக்டரை பாக்கப் போயிட்டாங்க. அவங்க கூட்டமா போயி புகார் கொடுத்ததுனால எதையும் விசாரிக்காம அரெஸ்ட் வாரண்ட் போடுவீங்களா? இப்போ நாங்களும் எங்க கூட்டத்தைக் காட்டறோம், பாருங்கன்னு போயி தகராறு பண்ணின உடனே, அதெல்லாம் செய்ய வேண்டாம். நான் எஸ்.பி. கிட்டே இது விஷயமா சொல்றேன்னு சொல்லி கலெக்டர் சமாதானப்படுத்தியிருக்கிறார்.

நான் கேட்காமலேயே எனக்கு உதவிகள்

இதுக்குள்ள சகோதரர் மோகன் சி. லாசரஸுக்கு இந்த விஷயம் தெரிஞ்சு, அவர் உடனே டாக்டர் அன்பரசு மற்றும் ஒரு ரிட்டையர்டு எஸ்.பி. இவங்களை எல்லாம் கூப்பிட்டு தாயப்பன் அய்யாவை கூப்பிட்டு அவருக்கு வேணுங்கிற எல்லா உதவிகளையும் செய்யுங்க. இது அவருக்கு எதிரா நடக்கிற எதிர்ப்பு இல்ல. இது நம்ம கிறிஸ்தவங்களுக்கு எதிரா நடக்கிற ஒரு யுத்தம். அவர் எந்த

மதுமுமே வேண்டாம்னு சொல்றவரு. நிச்சயமா அவர் இந்த மாதிரி எல்லாம் பேசியிருக்கவே மாட்டாரு. இதை இவனுங்க வேணும்னே பண்றாங்கன்னு அவர் சொல்ல, உடனே அவங்க நாகர்கோயில்ல ஊழியம் செஞ்சுக்கிட்டு இருந்த என்னை கூப்பிட்டு விட்டாங்க.

அதுக்குள்ள இந்த விஷயம் எப்படியோ தெரிஞ்சு சென்னையில ஊழியம் செய்து கொண்டிருக்கிற டாக்டர் ரவிக்குமார் ஸ்டீபன் என்கிறவர் எனக்காக ஒரு வெப்சைட்டையே நெட்டில் கிரியேட் பண்ணி எனக்கு ஆதரவா எத்தனையோ ஆயிரம் பேரை அப்போ சீப் மினிஸ்டரா இருந்த செல்வி ஜெயலலிதா அவர்களுக்கும், மெட்ராஸ் ஹைகோர்ட் சீப் ஜஸ்டிஸ் அவர்களுக்கும் மெசேஜ் அனுப்புறதுக்கும் ஏற்பாடு செஞ்சுட்டாரு. இதுக்கு அவரை யாருன்னே எனக்கு தெரியாது. என்னோட புக்கை படிச்சிருக்காரு. அவ்வளவுதான்.

சி.எம்.முக்கும், சீப் ஜஸ்டிஸுக்கும் ஏகப்பட்ட எஸ்.எம்.எஸ். போயிருக்கு. வருகின்ற ஏகப்பட்ட எஸ்.எம்.எஸ். பார்த்துட்டு சி.எம்.மே கேட்டிருக்காங்க. யாரு தாயப்பன்? என்ன பிரச்சனை என்று? இப்படி எனக்கு ஒருபுறம் உதவிகள் வருது. இதுல நான் பெரிதும் மதிக்கும் ஒரு ஊழியக்காரர், டாக்டர் ரவிக்குமாருக்கு போன் பண்ணி 'ஏன்யா தாயப்பனுக்கு உதவி செய்ய இப்படி அலைகிறீர்? போயி கொஞ்சநாள் உள்ளே இருந்துட்டுத்தான் வரட்டுமே' அப்படீன்னு சொல்லி இருக்காரு. அவர் எனக்கு போன் பண்ணி இவருக்கும் உங்களுக்கும் ஏதாவது தகராறா என்று கேட்டார். நான் இல்லை என்றேன். இவர் பெயர் சொல்ல நான் விரும்பவில்லை. இப்படியும் சிலர்!

தெரியாத வக்கீல் மூலம் எனக்கு பெயில் ஆர்டர் கிடைத்தது

இதையெல்லாம் பார்த்துட்டு மதுரை ஹை கோர்ட்ல இருக்கிற ரெண்டு லாயர்ஸ் எனக்கு அவங்க யாருன்னே தெரியாது. பேரையும் கேள்விப்பட்டது இல்லை. என்னோட கேசை அவங்களே டேக் அப் பண்ணி, அந்த ஊர் கோர்ட்ல இருந்து எப்ஐஆர் காப்பியையும் வாங்கி, மதுரை ஹைகோர்ட்லயே கேசை பைல் பண்ணி அவங்களே பெயில் ஆர்டர் வாங்கி எனக்கு ஈமெயில்ல அதை அனுப்பிச்சுட்டாங்க. பிறகுநான் போயி அந்த ஊர் கோர்ட்ல இந்த பெயில் ஆர்டரை கொடுத்து, என் மேல் இருந்த அரெஸ்ட் வாரண்டை கேன்சல் பண்ணிட்டு வந்தேன். அப்படி நான் அந்த ஊருக்கு போயி கோர்ட்ல பைல் பண்றதுக்கு எனக்கு ஆதரவா, சப்போர்ட்டா அந்த ஊர் பாஸ்டர்ஸ் பெல்லோஷிப் பிரசிடெண்ட்

மற்றும் சில பாஸ்டர்களும் வந்து கூடவே இருந்து பாதுகாப்பு கொடுத்து என்னை திருப்பி அனுப்பும் வரை கார் எல்லாம் கொடுத்து என்னை சுகபத்திரமா பார்த்துக்கொண்டார்கள்.

ஆண்டவர் எவ்வளவு நல்லவரு பார்த்தீங்களா? அவருக்குன்னு நாம ஊழியம் செய்யும்போது அவரு நம்மை கண்ணின் மணி போல பாதுகாத்துக் கொள்கிறார்.

புகார் கொடுத்தவங்க கதி

அந்த கம்ப்ளைண்ட் கொடுக்க காரணமாக இருந்த அந்த ஆர்.எஸ்.எஸ். காரர் ஏதோ ஒரு பிரச்சினையில மாட்டிக்கிட்டு ஆறு மாசம் ஜெயிலுக்குப் போனாராம். அந்த தர்மகர்த்தாவோட படிச்ச பொண்ணு அந்த ரேடியோ போட்ட பையனோட எங்கயோ ஓடிப் போய் விட்டாள்னு கேள்விப்பட்டேன். அந்த கோயில்ல ரொம்ப முக்கியமா இருந்தவரு, இந்த கேஸ் கொடுக்க காரணமா தூண்டுதலா இருந்தவர் ஒரு ஆக்சிடெண்ட்ல மாட்டி, ஆஸ்பத்திரியில ஐசியுவில இருந்தாராம். அவரோட மனைவி வந்து சர்ச்ல சொல்லி அவருக்காக ஜெபம் பண்ண சொன்னாங்களாம். இதெல்லாம் அப்புறமா எனக்கு தெரிய வந்தது. **'உன்னைத் தொடுகிறவன் என் கண்ணின் மணியைத் தொடுகிறான்'**ன்னு ஆண்டவர் சும்மாவா சொன்னார்? அல்லேலூயா! அந்த கேஸு அப்படியே கிடப்பில் கிடக்குது. ஹியரிங்கிற்கு வருமோ அல்லது வராமலேயே போயிடுமோன்னு தெரியாது. எது நடந்தாலும் அவரோட அனுமதியில்லாம எதுவுமே நடக்காதே.

இந்து மதம் உருவானதே கிறிஸ்தவத்தை வைத்துதான்

இப்படி எத்தனையோ எதிர்ப்புகள் என் ஊழியத்தின் பாதையில் சந்தித்திருக்கிறேன். ஊழியம்னா இதெல்லாம் வரத்தான் செய்யும். அதுவும் இந்து மதம் உருவானதே கிறிஸ்தவத்தின் அடிப்படையில்தான். இவங்க கும்பிடுகிற தெய்வங்கள்லாம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் உருவகமே. ஆனால் அது டூப்ளிகேட்டு. ஒரிஜினலான இயேசுவைப் புடிச்சிக்கிட்டாத்தான் பரலோகம் போக முடியும்னு இந்துமத வேதங்களிலேயே இருந்தே நான் எடுத்துச் சொன்னா அவங்களுக்கு கோபம் வரத்தானே செய்யும். அவங்களுக்கு கோபம் வரணும்கிறதுக்காகவோ, அவங்களை கோவப்படுத்தணும்னுங்கறதுக்காகவோ நான் இதைச் சொல்லலையே. அவங்களும் இரட்சிக்கப்படணுமேங்கிற ஆதங்கத்தில அவங்களுக்கு தெரியாத இந்துமத சத்தியத்தை நான் எடுத்துச் சொல்றேன். சிலருக்கு இது எரிச்சலா இருக்கு.

இதெல்லாம் பார்த்தா நாம் ஊழியமே செய்ய முடியாதே. ஊழியத்தில் எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். இயசுவுக்கும், அவரோட எல்லா அப்போஸ்தலர்களுக்குமே எதிர்ப்பு இருந்தே. ரத்த சாட்சியா மரிச்சாங்களே. நாம வெறும் ஒரு விசுவாசியா ஒரு சண்டே கிறிஸ்தவனா மட்டும் இருந்திட்டா எந்தப் பிரச்சனையுமே இருக்காது. அப்படிப்பட்டவங்களால பிசாசுக்கு எந்த தொந்தரவும் இருக்காது. அவனும் அவனோட சேனைகளும் அவங்களை கண்டுக்கவே மாட்டாங்க.

ஊழியக்காரனைக் கண்டா சாத்தானுக்கு பிடிக்காது

ஆனா நாம நமக்காக மட்டுமில்லாம, மத்தவங்களுக்காகவும், தேசத்துக்காகவும் ஜெபிக்கிறவங்களாகவோ, அல்லது சாதாரணமா ஏனோ தானோன்னு இல்லாம கொஞ்சம் ஓடி ஆடி வல்லமையான ஜெபத்தோடே ஊழியம் செய்யுறவங்களா இருந்தோம்னாலோ, சாத்தானுக்கும், அவன் சேனைகளுக்கும் முழுக்க முழுக்க நம்ம மேலே தான் கண்ணு இருக்கும். எப்போடா சான்ஸ் கிடைக்கும், காலை வாரலாம்னு காத்துக்கிட்டு நம்மளை சுத்தி சுத்தி வருவாங்க. அதுவும் நம்ம ஊழியத்தின் மூலமா நெறைய பேரு மனம் திரும்புறாங்கன்னா அவனுக்கு பொறுக்கவே பொறுக்காது. எப்படியாவது அதை தடுத்து நிறுத்த என்ன என்ன செய்யணுமோ அத்தனையும் செய்வான். அதுனால நம்மோட ஊழியம் பெருகப் பெருக, நம்மோட ஜெபமும் அதிகமாகணும். நமக்காக அதிகமானோர் ஜெபிக்கணும். இது அத்தனைக்கும் மேல நாம பிசாசுக்கு கொஞ்சம் கூட இடம் கொடுத்திடக் கூடாது.

ஊழியக்காரனை கெடுக்க பல ஆயுதங்கள் சாத்தானிடம் இருக்கு

அறிந்தோ அறியாமலோ கொஞ்சூண்டு இடம் கொடுத்துட்டாலும் தொலைஞ்சோம். நம்மளை உண்டு இல்லைன்னு பண்ணிடுவான். நம்மளை அட்ராக்ட் பண்றதுக்குன்னே எத்தனையோ வல்லமையான ஆயுதங்களை அவனும் அவன் சேனைகளும் வச்சிருக்காங்க. பண ஆசை, பாலியல் இச்சைகள், பெருமை, தலைக்கனம், தாங்கிற கர்வம், மேட்டிமையான எண்ணம், கோபம், வம்பு, வீம்பு, வைராக்கியம், இப்படி எத்தனையோ ஆயுதங்களை வச்சிருக்கான். நாம ரொம்ப ரொம்ப கேர்புல்லா இருக்கணும். இல்லை தொலைஞ் சோம். நம்ம சந்தோஷம், சமாதானத்தை கெடுக்க, குறைக்க வீட்லயும், அக்கம்பக்கத்திலயும், நண்பர்கள் மத்தியிலும் என்ன என்ன செய்யணுமோ அத்தனையும் செய்வான். அத்தனையும் எதிர் கொண்டுதான் நாம ஊழியம் செய்யணும். பிரச்சினைகள்லாம்

இருக்கத்தான் செய்யும். ஆனா மரணத்தை ஜெயித்த தேவன், சாத்தானை, பாதாளத்தை வென்ற தேவன் நம்ம கூடவே இருப்பாரு. அவரை முன்னாடி வச்சுக்கிட்டே நாம ஓடணும்.

என் ஊழியத்துக்கு என் வீட்டிலேயே எதிர்ப்பு

என்னோட ஊழியத்தின் பாதையில் எனக்குண்டான எதிர்ப்புகள் கொஞ்ச நஞ்சமில்ல. முதல்ல என்னோட வீட்ல என்னோட மனைவியோ, புள்ளைங்களோ, என்னை ஒரு வார்த்தை பாராட்டி உற்சாகப்படுத்தவில்லை. சமயத்தில ரொம்ப மனமடிவைத்தான் உண்டாக்குவாங்க. அதுவும் நான் 117 புத்தகம் தமிழ்ல மட்டும் எழுதி நானா பிரிண்ட் செய்தது பிடிக்கலை. மேலும் ஆங்கிலத்தில மட்டும் ஒரு 10 புக்குக்கு மேல, அப்புறம் என்னோட சாட்சிப் புத்தகம் கன்னடம், மலையாளம், தெலுங்கு, இந்தி, ஒரிசா மொழிகள்லயும் இருக்கு. முன்னாடி எல்லாம் எல்லா புக்குலயும் 5000 பிரதிகள் போட்டேன். அப்புறம் 3000 போட்டேன். இப்போ 2000 மட்டும்தான் போடுறேன். ஏன்னா வீட்ல வைக்குறதுக்கு இடம் இல்லை. வீடு கோடவுன் மாதிரி ஆயிடுச்சு. அது என் மனைவிக்கும், மகளுக்கும் சுத்தமா புடிக்கலை. இதுல மத்தவங்க சிலர் எழுதின புத்தகம் அல்லது சாட்சி ரொம்ப நல்லா இருந்துன்னா, அதையும் வாங்கிக் கொடுப்பேன். சிலவற்றை நானே பதிப்பாசிரியராய் வெளியிட்டிருக்கிறேன். இதுக்கும் என் வீட்ல பயங்கர கடுப்பு, எதிர்ப்புதான்.

எந்த கடைக்கும் என் புத்தகத்தை விற்பனைக்கு கொடுக்கலை

ஆண்டவர் 10 ரூபாய்க்கு புக் போடுன்னு எனக்கு உணர்த்தினாரு. எந்த லாப நோக்கமும் இல்லாம, நஷ்டத்துக்கு தான் நான் கொடுக்கிறேன். இப்போ என்னோட புக்குகளை 5 ரூ, 2.50 ரூ.க்கும் போடுறேன். எப்படியாவது சுவிசேஷம் பரவணுங்கிற வாஞ்சியில செய்யுறேன். இப்படி வீட்டிலேயும் நான் பிரசங்கம் பண்ற இடத்திலேயும் மட்டுமே விற்று பல லட்சக்கணக்கான புத்தகங்கள் விற்கப்பட்டுள்ளன.

4000 பிரதி வாங்குகிறேன்; ரிபேட் கொடுங்க

சில வருஷங்களுக்கு முன்பு எர்ணாகுளத்திலிருந்து ஒரு பாஸ்டர் போன் பண்ணினார். உங்களின் சாட்சியை மலையாளத்தில் வாசித்தேன். ரொம்ப நல்லா இருந்தது. அதை நான் 4000 பிரதிகள் வாங்கி கேரளாவில் டிஸ்ட்ரிபியூட் பண்ண விரும்புகிறேன். உங்களால் என்ன கன்செஷன் அல்லது ரிபேட்

கொடுக்க முடியும்னு கேட்டார். 'நான் 10 ரூபாய்க்கு யாரும் இத்தனை பக்கத்தில் புக்கு போடுறது இல்லை. இதுல எப்படி நான் கன்செஷன் கொடுக்க முடியும்' என்று கேட்டேன். அவர் நான் 4000 பிரதி வாங்குறேன். அதுனால குடுக்கலாம்னார். பிறகு நான் சொன்னேன். ஒண்ணு பண்ணுவோம். உங்ககிட்ட இருக்கிற புக்கை நீங்க எர்ணாகுளத்தில் இருக்கிற எந்த பிரஸ்ஸில் வேணா போய், 4000 காப்பி பிரிண்ட் பண்ண எவ்வளவு ஆகும்னு கேளுங்க. நான் உங்களுக்கு புக்கோட நெகடிவ் அனுப்புகிறேன். நீங்க எனக்கு ஒரு பைசா கொடுக்க வேண்டாம். நெகடிவ்வை மாத்திரம் பத்திரமா திருப்பி அனுப்பிடுங்க. இதுதான் என்னால செய்ய முடியும்னு சொன்னேன். அவர் அடுத்த நாள் போன் பண்ணினார். 'ஐயா 10 ரூபாய்க்கு எப்படியா கொடுக்குறீங்க? உங்களுக்கு பிரிண்டிங் காஸ்ட்டு எவ்வள்வு ஆகுதுன்னு கேட்டார். 'நீங்க அங்க பிரஸ்ஸில் விசாரிச்சீங்களா? இங்கேருந்து அனுப்புற செலவும் மிச்சம் ஆகுமே. எவ்வளவு ஆகும்னு சொன்னாங்கன்னு கேட்டேன். ஐயா 4000 பிரிண்ட் பண்ணினா, ஒரு புக்குக்கு 18 ரூபாய் ஆகும்னு சொன்னாங்க. எனக்கு ஷாக் ஆயிடுச்சு. அங்கேயும் நிச்சயமா நீங்க 10 ரூபாய்க்கு பிரிண்ட் பண்ணலேன்னு இப்ப புரிஞ்சுக்கிட்டேன். எனக்கு எந்த கன்செஷனும் வேண்டாம். ஜெபத்தோட அனுப்பி வையுங்க. அதுபோதும். நான் பேங்கில பணம் போட்டுறேன்னு சொன்னார். அல்லேலூயா!

புத்தகம் வைக்க பெரிய வீட்டை கட்ட வைத்தார்

இப்போ நான் இருக்கிற வீட்டை 2000இல ஓம் சக்தி முறைப் பிரகாரம் கலச விளக்கு, வேள்வி பூஜை எல்லாம் செஞ்சு, நாங்க முன்னாடி போயிக்கிட்டு இருந்த மேல் மருவத்தூர் ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றத்தைச் சேர்ந்த 20 செவ்வாடை அணிந்த பக்தர்களைக் கொண்டு மனை பூஜை எல்லாம் போட்டு மாடி வீட்டை கட்ட ஆரம்பித்தேன். கீழே 1600 சதுர அடி மேலே 1500 சதுர அடி. எல்லாமே கேட்டாங்க. எதுக்கு இவ்வளவு பெரிய வீடா கட்டுறீங்கன்னு. ஆனா இது தேவ சித்தம். பின்னாடி நான் இத்தனை புத்தகங்களை எழுதுவேன். அதை வக்கிறதுக்கு இடம் வேணுமேன்னு கர்த்தர் முன்னாடியே இவ்வளவு பெரிய வீட்டை என்னை கட்ட வச்சிருக்காரு. அவர் எப்படிப்பட்டவர் கில்லாடி! சகலத்தையும் ஒழுங்கும் கிரமுமா நேர்த்தியா, முன் யோசனையோடே பிளான் பண்ணி செய்யுறவரு இல்லையா? அவர் ஆனந்த ஞானேஸ்வரன் ஆச்சே!

மனை பூஜை ஓம் சக்தி முறையில், பிரதிஷ்டை பாஸ்டரால்

அந்த வீடு பாதி முடிஞ்சிருக்கிற நிலையிலதான் என்னோட மகன் கார்த்திக் அமெரிக்காவில வேலை கிடைச்சு சிங்கப்பூர்ல இருந்து அங்கே வேலைக்குப் போனான். போன ரெண்டே மாசத்துல அங்கே அவனுக்கு உடம்புக்கு சௌக்கியமில்லாமப் போயி 18ஆபரேஷன்கள் ஆகி, கோமா ஸ்டேஜ்ல இருந்தவனைப் பாக்க நான் அமெரிக்கா போயி, 8 மாசம் அங்கே இருக்கும்படி ஆச்சு. அதுனால வீட்டு கட்டுமானப் பணியை பாதியிலேயே நின்னு போச்சு. இரண்டாம் தளம் சீலிங் மட்டும் போடாம இருந்துச்சு. வீட்டின் கபாலம் திறந்திருக்க வேண்டாம். அதை மட்டும் மூடி சீலிங் போட்டுருன்னு என் மனைவியிடம் சொன்னேன். போட்டு முடித்த பிறகு 8 மாசம் சும்மாவே அப்படியே கிடந்தது. நான் அமெரிக்காவில இருந்து என் சன்னோட 2001இல் இங்கே திரும்பி வந்தாப் பிறகு வீட்டை கட்டி முடித்தேன். வீட்டை கட்ட ஆரம்பித்தபோது நான் ஒரு தீவிர இந்துவாக இருந்தேன். இந்து முறைப்படி வேள்வி எல்லாம் செஞ்சு மனை பூஜை எல்லாம் போட்டேன். கட்டி முடிக்கும் போது முழுக் குடும்பமும் கிறிஸ்தவர்களாக மாறி சர்ச் பாஸ்டரைக் கூப்பிட்டு, ஜெபம் செய்ய வைத்து பிரதிஷ்டை பண்ணி, கிரஹப் பிரவேசம் 2001 நவம்பரில் செய்தேன்.அல்லேலூயா! நம்மை வழி நடத்துகிறவர் அவர். எதுவும் நம்ம கையில் இல்லையே. **'உன் நினைவுகள் என் நினைவுகள் அல்ல. உன் வழிகள் என் வழிகள் அல்ல'**ன்னு ஆண்டவர் சொல்றாரே.

ஒவ்வொரு புத்தகமும் வேதனையோடுதான் வெளிவரும்

நெறைய ஊழியக்காரங்க எங்கிட்ட கேப்பாங்க. எப்படிய்யா இத்தனை புத்தகங்களை எழுதுறீங்க? ஒரு புத்தகம் எழுதுறதுக்கே எனக்கு 2 வருஷம் ஆயிடுச்சு. ஆச்சரியமா இருக்குதேன்னு சொல்லுவாங்க. ஆனா ஒவ்வொரு புத்தகத்தையும் எழுதி முடிச்சு, அதை டைப் பண்ணி வாங்கி, இரண்டு மூணு தரம் ஸ்பெல்லிங் மிஸ்டேக் எல்லாம் பார்த்து கரெக்ஷன் எல்லாம் பார்த்து, அப்புறம் பிரிண்டிங் பண்ணி அதை வெளியிடுறதுக்குள்ளே நான் படுற பாடு இருக்கே. அப்பப்பா... கர்ப்ப வேதனைதான். நான் இத்தனை புத்தகங்கள் எழுதி, இவ்வளவு மலிவாக கொடுக்கிறது சாத்தானுக்குப் பிடிக்குமா? அதுவும் இந்த புத்தகங்கள் மூலமா சுவிசேஷம் பரவுது, நெறையப் பேரு இயேசு கிறிஸ்துவை ஏத்துக்கிடுறாங்கன்னா அது அவனுக்கு பிடிக்குமா? அவனோட கோட்டையின் அஸ்திவாரமே ஆடுதில்ல. அதுனால அவன் என்னை என்ன செய்யணுமோ அத்தனையும் செய்து அது வெளியே வராம

இருக்க எத்தனை போராட்டங்கள் செய்யணுமோ அத்தனையும் செய்வான். உண்மையிலேயே ஒவ்வொரு புத்தகத்துக்கும் நான் அவனோட மல்லுக்கட்டத்தான் வேண்டியிருக்கும்.

டாக்டர் ஞானசிகாமணியின் 'அகத்தியர் ஞானம்'

பல வருஷங்களுக்கு முன்னாடி டாக்டர் ஞானசிகாமணி எழுதி திருச்சியில் நடந்த உலக தமிழ் கிறிஸ்தவ மாநாட்டில் வெளியிடப்பட்ட 'அகத்தியர் ஞானம்' என்கிற ஒரு புத்தகம் என் கைகளில் கிடைச்சது. அந்த புத்தகத்தை படிச்சுட்டு அப்படியே ஆடிப் போயிட்டேன். அகத்தியர் எழுதின 30 பாடல்களுக்கும் அவ்வளவு அழகா, பிரமாதமா விளக்கம் கொடுத்து, அதில் சொல்லப்பட்டு இருக்கிற உட்கருத்து இயேசு கிறிஸ்துன்னு ரொம்ப தெளிவா, நேர்த்தியா எழுதியிருந்தாரு. சூப்பர் புக்கு! ஆனா இது எத்தனை பேருக்கு தெரியும்? நெறைய கிறிஸ்தவங்களுக்கும் தெரியலை. இந்துக்களுக்கும் தெரியலை. எனக்குள்ளே ஒரு தாகம். ஐயோ இந்த புத்தகம் எல்லார் கையிலயும் கிடைக்கணுமேங்கிற ஆதங்கம். அடுத்து அந்த புக்கு 100 ரூபாயோ அல்லது அதுக்கு மேலேயே போட்டிருந்ததா எனக்கு ஞாபகம். அதையும் விட ரொம்ப வொர்த் அந்த புக்கு. எவ்வளவு கொடுத்தாலும் பெறும். அப்படிப்பட்ட ஒரு புக்கு அது. டாக்டர் ஞானசிகாமணியை ஒரு தடவை ஒரு கிறிஸ்டியன் மீட்டிங்குல பார்த்தேன்.

அனுமதி கேட்டேன். சரியான பதில் இல்லை

அவர்கிட்டே நேரா போயி என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, என் சாட்சிப் புத்தகம் ஒன்றையும் அவரிடம் கொடுத்துவிட்டு, அவர் எழுதின அந்த புத்தகத்தை பெரிதும் பாராட்டிப் பேசி, எல்லார் கையிலேயும் அது இருக்கணும், இதன் கருத்துகள் எல்லாருக்கும் தெரியணும்னு சொன்னேன். எனக்கு அனுமதி கொடுத்தீங்கன்னா, இதை நான் 10 ரூபாய்க்கே போடுறேன்னு அவர்கிட்டே அனுமதி கேட்டேன். அவர் சரியா பதில் ஒண்ணும் சொல்லாமல், ம்... பார்க்கலாம்னு வெறுமே தலையை மட்டும் ஆட்டினார். ஒருவேளை இது நம்மளால முடியாதுன்னு நினைக்கிறாரோன்னு எனக்கு சந்தேகம். சரி நம்மோட பாணியிலே இதை எழுதி இவர்கிட்டே காட்டுவோம்னு நான் இராத்திரி பகலா உட்கார்ந்து ஒரு மாசத்துல எழுதி முடிச்சு, அதை அப்படியே ஜெராக்ஸ் எடுத்து அவருக்கு அனுப்பி பெர்மிஷன் கேட்டேன். ஒரு மாசம் ஆச்சு. எந்த பதிலும் வரலை. அவருக்கு நான் போன் பண்ணிக் கேட்டேன். உங்க

கையெழுத்து ரொம்ப சின்ன எழுத்தில் இருக்கு. அதனால சரியா படிக்க முடியலை. டைப் பண்ணி அனுப்புங்கள்னு சொன்னாரு.

அனுமதி கொடுக்க முடியாது என்றார்

அவ்வாறே டைப் பண்ணி அனுப்பி வச்சேன். மேற்கொண்டு ஒரு மாசம் ஆச்சு. தகவலே வரல. நான் நேரடியாவே அவரை பாக்க போயிட்டேன். அவர் அப்போ சென்னை பல்கலைக்கழகத்தில் கிறிஸ்டியன் தமிழ் பிரிவின் சேர்பெர்சனாக இருந்தார். அவரைப் பார்த்து என்ன ஆச்சுன்னு கேட்டேன். நல்லா இருக்கு. ஆனா நான் பெர்மிஷன் தர மாட்டேன்னாரு. எனக்கு ஷாக்கு. அய்யா, இதை நான் லாப நோக்கத்தோடு போடலை. வெறும் 10 ரூபாய்க்கு போடுறேன். எம் பேரையும் போடலை. உங்க பேரைத்தான் போடுறேன். உங்க 12 வருஷ ஆராய்ச்சி வீணாயிடக் கூடாது. இது எல்லாருக்கும் பிரயோஜனமாய் இருக்கணும். பலரோட கண்கள் திறக்கப்படணும். அதன் மூலம் ஆண்டவரோட இராஜ்யம் கட்டப்படணுங்கிறதுக்காக இதை வெளியிட நான் விரும்புகிறன். பிறகு ஏன் அனுமதி கொடுக்க மாட்டேங்கிறீங்கன்னு கேட்டேன்.

அகத்தியர் ஞானத்திற்கு பயங்கர எதிர்ப்பு

இப்போதான் நான் கொஞ்சம் நிம்மதியா இருக்கேன். அதைக் கெடுக்கப் பாக்குறீங்களா? இந்த புத்தகத்தை வெளியிட்ட பிறகு சில மதவாத சக்திகள் என்னை டார்கெட் பண்ண ஆரம்பிச்சிட்டாங்க. சாது செல்லப்பா முதற்கொண்டு சொல்லிட்டாரு. கொஞ்ச நாளைக்கு தலை மறைவா இருங்கய்யான்னு அட்வைஸ் பண்ணினார். மிச்சம் இருக்கிற புத்தகங்களை விற்க வேண்டாம்னு சொல்லிட்டாரு. ஒரு மலேஷியாகாரன் வந்து எல்லா மிச்ச புத்தகங்களையும் அள்ளிட்டு போயிட்டான். அதை அவன் என்ன பண்ணினானோ தெரியாது. முதலில் மாநாட்டில் வெளியான புத்தகங்களில், ஒரு காப்பி எப்படியோ உங்க கைக்கு கிடைச்சிருக்கு. நான் புதைச்சு வச்சதை இப்போ நீங்க மறுபடியும் தோண்டி எடுக்கறீங்க. மறுபடியும் பிரச்சனை வரும். அதுனாலதான் வேண்டாம்கிறேன் என்றார்.

சுருக்க பகுதியை வெளியிடுங்கள்

நான் முதல்ல இதனோட ஒரு சுருக்கப் பகுதியை வெளியிட்டு இருந்தேன். அதை வேணும்னா உங்க பேர் போட்டே நீங்க வெளியிடுங்கன்னு ஒரு சுருக்க பகுதி சின்ன புத்தகம் ஒன்றைக் கொடுத்தாரு. திரும்பி நான் வீட்டுக்கு வரும்போது ட்ரெயினிலேயே அந்த புக்கை படிச்சு முடிச்சுட்டேன். அந்த புக்கை பப்ளிஷ் பண்றதும்

ஒண்ணுதான், பப்ளிஷ் பண்ணாமல் இருக்கிறதும் ஒண்ணுதான். யாருக்கும் புரியாது. நொந்து போயிட்டேன்.

இந்த புக் வெளி வரக்கூடாதுன்னு என் மனைவியின் ஜெபம்

வாடின முகத்தோட வீட்டுக்கு வந்தேன். என் வாடின முகத்தைப் பார்த்துட்டு என் மனைவி கேட்டாள். என்ன அவர் பெர்மிஷன் தரலையா? என்றாள். ஆமான்னு சொன்னேன். அவள் உடனே 'கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நன்றி'ன்னா. என்ன சொல்றேன்னு கேட்டேன். 'கர்த்தர் என் ஜெபத்துக்கு பதில் கொடுத்துட்டார். நான் அந்த புத்தகத்தைப் படிச்சுப் பார்த்துட்டேன். இது வெளியில வந்தா, நிச்சயம் பிரச்சனை வரும். அதுனால நானும் ஜெபிச்சேன்' என்றார். நான் நொந்து போயிட்டேன். சாப்பிடக் கூட பிடிக்கலை. ஒண்ணும் வேண்டாம்னு சொல்லிப்பிட்டு அப்படியே டைனிங் டேபிள்ளயே தலை கவிழ்ந்து உட்கார்ந்து இருந்தேன்.

ஏன் இத்தனை தடைகள் ஆண்டவரே?

என்னையும் அறியாமல் என் கண்கள்ல இருந்து கண்ணீர். ஆண்டவர்கிட்டே கேக்கிறேன். 'ஏன் ஆண்டவரே, ஏனப்பா இத்தனை போராட்டம்? எதுக்கு இத்தனை தடைகள்? நான் என்ன என்னோட நாம மகிமைக்காகவா இதை வெளியிடுறேன். உம்மோட நாம மகிமைக்குத்தானே இதை வெளியிடுறேன். லாப நோக்கத்துக்கும் போடலையே. பிறகு ஏன் இத்தனை தடைக் கற்கள்? இது உமக்குத் தெரியாதா? இவைகளை நீர் தடுத்துப் போடப்பிடாதான்னு என் உள்ளத்தில் ஒரே குமுறல். ஆண்டவர்கிட்டே புலம்பி தீர்க்குறேன். என் கண்களில் கண்ணீர். இருந்த எடத்தை விட்டு நான் அசையலை.

சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள் என வெளியிட்டேன்

நைட் ரெண்டு மணிக்கு மேல் ஆண்டவர் பேசினார். அந்த 30 பாட்டில் 10 பாட்டை எடுத்திடுன்னார். டைப் பண்ணினதை மறுபடியும் ஒரு தடவை தரோவா படிச்சேன். காண்டரோவர்ஷியலா தெரிஞ்ச 10 பாட்டுகளை நீக்கினேன். அகத்தியர் என்கிற பேரை '**சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்**'ன்னு மாத்தினேன். ஞானசிகாமணி பேரை எடுத்துட்டு எம்பேரையே போட்டேன். டைம் பார்த்தேன். காலையில மணி 4. போயி நிம்மதியா படுத்துட்டேன். காலையில பிரிண்டரைக் கூப்பிட்டு பிரிண்டிங்குக்கு கொடுத்துட்டேன்.

சாது செல்லப்பா எனக்கு கடிதம் எழுதினார்

இந்தப் புத்தகத்துல ஒரு காப்பி எப்படியோ சாது செல்லப்பா அவர்களுக்கு கிடைச்சிருக்கு. அவர் அதைப் படிச்சுப் பார்த்துட்டு எனக்கு ஒரு லெட்டர் எழுதினார். **'சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்'** புத்தகம் படிச்சேன். ரொம்ப நல்லா இருந்துச்சு. அதுல நான் எழுதினது, மைக்கேல் ஃபாரடே எழுதினது. டாக்டர் ஞானசிகாமணி எழுதியலிருந்து எடுத்து நெறைய விஷயங்களை எழுதியிருக்கீங்க. அப்படி எழுதியிருந்ததுக்கு கீழே இவைகளை இந்தப் புத்தகத்திலே இன்னார் எழுதியிருந்ததை எடுத்து எழுதியிருக்கேன்னு ஒரு வார்த்தை நீங்க எழுதி இருந்தா, உங்களோட மதிப்பு ஒண்ணும் கொறைஞ்சு போயிடாது என்று கொஞ்சம் குத்தலா எழுதியிருந்தார்.

சாது செல்லப்பாவிடம் விளக்கம் கூறினேன்

உடனே நான் அவருக்கு போன் பண்ணி சொன்னேன். ஐயா நான் உங்களைப் பத்தியும், மைக்கேல் ஃபாரடே பத்தியும் கேள்விப்பட்டு இருக்கேனே ஒழிய, உங்க புத்தகங்களையோ அல்லது மைக்கேல் ஃபாரடேயின் புத்தகங்கள் எதுவும் நான் இதுவரை படிச்சது கிடையாது. நான் எழுதியது எல்லாமே டாக்டர் ஞானசிகாமணி எழுதிய 'அகத்தியர் ஞானம்'கிற புத்தகத்திலிருந்து எடுத்ததையும், நான் படிச்ச மற்ற பல புத்தகங்களிலிருந்தும் எடுத்தது என்றும், இதையும் அவர்கிட்டே சொல்லிட்டுத்தான் எடுத்தேன், எழுதினேன். எழுதி அவருக்கும் அப்படியே அனுப்பினேன். ஆசிரியர்னு அவர் பேரையே போட்டு இருந்தேன். கடைசியில அவருக்கு வந்த எதிர்ப்புகளை பார்த்திட்டு இதை பப்ளிஷ் பண்ண வேண்டாம்னு எனக்கு அனுமதி கொடுக்கலை.

மூலம் யாருடையது என்று போடுங்கள் என்றார்

பிறகு நடந்தது என்று எல்லாவற்றையும் கூறி 30 பாடல்களில் 20 பாடல்கள் மட்டும் போட்டு கடைசியில என் பெயரை போட்டு 'சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்'கிற தலைப்புல இந்த புக்கை லாப நோக்கம் இல்லாம எல்லாரும் இந்த சத்தியத்தை தெரிஞ்சிக்கிடணும்னு போட்டேன் என்றேன். அவரு புக்கா வெளியிட்டாருல்ல.. அதிலேந்து எடுத்து எழுதுறீங்க. தப்பு இல்லே. அடுத்த பதிப்புல 'மூலம்னு அவர் பெயரையும் நூல் பேரையும் போட்டிடுங்க'ன்னு சொன்னாரு. அப்படியே அந்தப் புத்தகத்தினுடைய மறு பதிப்புகள்ல மூலம்னு டாக்டர் ஞானசிகாமணி பெயரையே போட்டேன். இப்போ இந்த புக்கு 6 லட்சம் பிரதிகளுக்கு மேல் வெளியாகி இருக்குது.

டாக்டர் ஞானசிகாமணியை மீண்டும் சந்தித்தேன்

மீண்டும் ஒரு தடவை டாக்டர் ஞானசிகாமணியை நான் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் லீடர்ஷிப் ட்ரெயினிங் (NILT) ஏற்பாடு செய்திருந்த ஒரு மீட்டிங்கில் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. சந்தித்து என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அவரோட புக்கு 6 லட்சம் பிரதிகளுக்கு மேல் போயிருக்கு என்றேன். என்னை ஏறிட்டு ஒரு தடவை பார்த்தார். தலையை ஒரு தடவை அசைத்தார். ஒன்றும் பேசவில்லை. நல்ல அருமையான ஒரு மனிதர். பெயருக்கு ஏற்றார் போல நல்ல ஞானமுள்ளவர். தற்போது அவர் ஆண்டவரோடு பரதேசில் நிச்சயம் இருக்கிறார் என விசுவாசிக்கிறேன்.

தேவசித்தம் இல்லாமல் எதுவும் எழுதுவது இல்லை

எந்த புத்தகத்தையும் நானாக எழுதினதுல்லை. அந்த விஷயம், சப்ஜெக்ட் குறித்து எழுத வேண்டும் என்கிற ஒரு தாகம், வாஞ்சை, துடிப்பு, கர்ப்ப வேதனை எனக்குள் வரவேண்டும். அதைத் தருவது கர்த்தர்தான். என்னைக் கொண்டு ஏதாவது சப்ஜெக்டில் எழுத வைக்க வேண்டும் என்று சித்தம் இருந்தால் அந்த சப்ஜெக்ட்டை குறித்து யாரிடமும் ஒரு வார்த்தை கூட நான் சொல்ல மாட்டேன். கேட்கவும் மாட்டேன். வெறுமே ஜெபம் மட்டுமே செய்வேன். தேவன் அதற்குரிய சம்பந்தப்பட்ட புத்தகங்களை எங்கெங்கிருந்தோ கேட்காமலே எனக்கு வந்து சேரும்படி செய்வார்.அப்போது நான் தெரிந்து கொள்வேன். இது தேவ சித்தம் என்று.

பல புத்தகங்களை தேவன் எழுத வைத்தார்

அப்படி எழுதப்பட்ட புத்தகங்கள்தான் 'உண்மையான கடவுள்', 'இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து', 'திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி', 'கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு', 'கிறிஸ்தவத்தை குறித்து இந்துக்களின் கேள்விகளுக்குப் பதில்', 'கிறிஸ்தவர்களின் சந்தேகங்ளுக்கு பதில்', 'யோகோவா சாட்சிகளின் கேள்விகளுக்கு பதில்', 'யோகோவா சாட்சிகளுக்கு எப்படி சத்தியத்தை அறிவித்தல்', 'ஒரு பிராமின் கிறிஸ்துவுக்குள் வர்றதுக்கு முன்னாடி அவர் கேட்ட கேள்விகள்' – 'தமசோமா ஜோதிர்கமய', 'சைவமும் வைணவமும் கிறிஸ்தவமும்' இப்படி வரிசையாக சொல்லிக் கொண்டே போகலாம். ஒவ்வொரு புத்தகத்தையும் வெளியிடுவதற்கு முன்னும் பின்னும் ஒரு கதையே இருக்கு. நான் புத்தகம் எழுதி வெளியிடுவது சாத்தானுக்கு

சுத்தமா பிடிக்காது. நான் அவனோட போராடித்தான் ஆகணும். ஏன்னா அதன் மூலமா அவனோட கோட்டையே, இராஜ்ஜியமே ஆட்டம் காணுகிறதே!

ஏன் சபைகளில் எதிர்பார்த்த வளர்ச்சி இல்லை?

நிறைய இடங்களுக்கும், சபைகளுக்கும் போறதுனால, அநேக ஊழியக்காரர்களோட பழகுற பாக்கியம் பெற்றதுனால ஏன் சபைகள்ல நாம எதிர்பார்க்கிற வளர்ச்சி, முன்னேற்றம் இல்லை, ஏன் சுவிசேஷம் முழுமையா பரவ மாட்டேங்குது? எல்லாருக்கும் கஷ்டங்கள், பிரச்சனைகள், நோய் நொடிகள் இருக்கு. சந்தோஷம், சமாதானம் இல்லை. இதுக்காக புற ஜாதிமக்கள் எங்கெங்கேயோ போயும் பிரச்சனை தீர மாட்டேங்குது. நம்ம ஆண்டவர்கிட்டே வந்தா பிரச்சனை தீருது. இதையும் அவங்க பாக்குறாங்க. ஆனா இயேசுவை ஏத்துக்க தயங்குறாங்க. என்ன காரணம்?

இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாக பரவவில்லை? – தடைகள்

நோண்ட ஆரம்பிச்சேன். ஆண்டவர் பல விஷயங்களை எனக்கு வெளிப்படுத்தினார். அதையெல்லாம் '**இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாக பரவவில்லை**'ன்னு தலைப்பிட்டு ஒரு புத்தகம் எழுத ஆரம்பிச்சேன். பாதி எழுதிட்டேன். பிசாசுக்கு பிடிக்குமா? எப்படியாவது அதை தடுத்து நிறுத்தணும்னு பார்த்தான். ஒரு நாள் நான் பாத்ரூம்ல குளிச்சிட்டு வெளியிலே வர்றேன். ரூமில் டைல்ஸ் போட்டிருந்த தரையிலே கொஞ்சம் தண்ணீர் சிந்திக் கிடந்திருக்கு. சர்ருன்னு வழுக்கி விட்டுடுச்சு. படக்குன்னு கையை ஊணிட்டேன். வலதுகை மணிக்கட்டு ஜாயிண்ட்டுல எலும்பில 4, 5 மல்ட்டி ஃபிராக்சர் ஆயிடுச்சு. மாவு கட்டுப் போட்டேன், நல்ல வேளை விரல்களுக்கு ஒண்ணும் ஆகலை.

திருநெல்வேலியில் புக் ரிலீஸ்

அதுனால புக்கை எழுதி முடிச்சு பிரிண்டிங்கிற்கு கொடுத்திட்டேன். அடுத்த வாரமே மலேசியா, சிங்கப்பூருக்கு ஒரு மாசம் ஊழியத்துக்கு ஏற்கனவே செய்த ஏற்பாட்டின்படியே மாவுக் கட்டோட போயி ஊழியத்தை எல்லாம் முடிச்சிட்டு வந்தேன். வந்த அடுத்த வாரமே இந்த புக்கை திருநெல்வேலியில செல்வி மஹால்ல ரிலீஸ் பண்றதுக்கு எல்லா ஏற்பாடுகளையும் நாகர்கோயில் அனாரிய சமாஜ் நிறுவனர் டாக்டர் சுந்தர் இயேசுவடியான் ஏற்பாடு செய்து, எல்லா பைபிள் காலேஜ், மிஷனரி ஆர்கனிசேஷன், சர்ச்

போதகர்கள், ஊழியக்காரர்கள் பலரையும் கூப்பிட்டிருந்தாரு. நான் தாம்பரத்தில் இருந்து அனந்தபுரி எக்ஸ்பிரஸில் டு டயர் ஏசியில கிளம்பி போறேன். என்னை மெயின் ஸ்பீக்கரா போட்டிருந்தாங்க. புக்கும் ரிலீஸ் ஆகுது.

சாத்தானின் தடை முயற்சி

சாத்தானுக்கு பிடிக்குமா? கையை ஒடிச்சோம். இருந்தும் எப்படியோ புக்கை எழுதி முடிச்சுட்டானே. ஒரு மாசம் மாவு கட்டோட வெளிநாடும் போயி ஊழியம் செஞ்சுட்டு வந்துட்டான். இப்போ இதை பிரதிஷ்டை பண்ண எல்லாரையும் கூப்பிட்டு 'ஏன் சுவிசேஷம் பரவலை? பரவ என்ன செய்யணும்னு பேசப் போறானேன்னு' அவனுக்கு பயங்கர கடுப்பு. நான் எப்பவுமே காலையில கொஞ்சம் சீக்கிரம் எழுந்திச்சிருவேன். எல்லாத்தையும் முடிச்சிட்டு, ஜெபமும் செஞ்சு முடிச்சிட்டேன். காபி குடிச்சா நல்லா இருக்கும் போல தோணுச்சு. ஏசி கம்பார்ட்மெண்ட்டுனால காபி, டீ எதுவும் உள்ளே வரலை.

ஏறுமுன் டிரெயின் கிளம்பிடுச்சு

வண்டி ஏதோ ஒரு ஸ்டேஷன்ல நின்ன மாதிரி தெரிஞ்சது. கதவைத் திறந்து பார்த்தா அது கோவில்பட்டி. காபி எங்கேயாவது கிடைக்குமான்னு பார்த்தேன். எதிர்த்தாப்பிலே ஒரு காப்பிக் கடை. நான் டிரெயினை விட்டு கீழே இறங்கி ஒரு காப்பியை வாங்கிட்டு திரும்புறேன். டிரெயின் கிளம்பிடுச்சு. கையில இன்னும் மாவுக்கட்டு பிரிக்கலை. இடது கையில காப்பி கப்பை பிடிச்சுக்கிட்டு வேகமா ஓடி வந்து ரயில் பெட்டியின் படியில் கப்பை வச்சிட்டு ஒரு கையிலை வண்டியோட கம்பியை பிடிச்சுக்கிட்டு, மூவிங் டிரெயின்ல அதோடயே ஓடி ஏறப் பார்த்தேன். முடியலை.

டிரெயினோடு ஓடி ஏற முடியாம, பிளாட்பாரத்தில் முழங்காலில் விழுந்தேன்

ஜம்ப் பண்ணி ஏறிடலாம்னு பார்த்தேன். முடியலை. இரண்டு கையாலயும் கம்பியை பிடிச்சிருந்தா பேலன்ஸ் கிடைச்சுருக்கும். ஒரு கையினால மட்டும் பிடிச்சிருந்ததுனால பேலன்ஸ் கிடைக்காம ஜம்ப் பண்ணி படியில கால் வைக்கிறதுக்குப் பதிலா பிளாட்பாரத்தில் முழங்கால் போட்டுட்டேன். ட்ரெயின் ஸ்பீடு பிக்கப் ஆகி வேகமா போகுது. என் ஒரு கை ட்ரெயினோட கம்பியை பிடிச்சிக்கிட்டு இருக்குது. நான் பிளாட்பாரத்தில் முழங்காலில் இருக்கேன். ட்ரெயின் என்னை தரதரன்னு இழுத்துக்கிட்டு போகுது. ஒரு

லெவலுக்கு மேல என்னால தூக்குப் பிடிக்க முடியலை. கம்பியை பிடிச்சிருந்த கையை விட்டேன். அவ்வளவுதான்.

டிரெயினுக்கு அடியில் விழுந்தேன்

பிளாட்பாரத்துக்கும் ட்ரெயினுக்கும் இடையில ஒரு அடி இடைவெளி இருக்குமே, அதுல நான் பொத்துன்னு உருண்டு உள்ளே விழுந்துட்டேன். 4, 5 அடி பள்ளம். பெரிய பெரிய கருங்கல் ஜல்லி போட்டுருக்காங்க. நான் உருண்டு விழுந்த வேகத்தில் என் கால் பெரு விரலோ, சுண்டு விரலோ, கையோ எதுவோ லேசா மூவிங் ட்ரெயினோட அடிப் பாகத்திலயோ, படியின் கீழ் பாகத்திலயோ அல்லது தண்டவாளத்திலயோ லேசா பட்டிருந்தாலும் என்னை பசக்குன்னு உள்ளே இழுத்திருக்கும். ரயில் சக்கரத்தில் நான் கண்ட துண்டமாகி பீஸ் பீஸா ஆகியிருப்பேன். ஆனா, கர்த்தரோட கிருபையால நான் விழுந்த உடனே பிளாட்பாரத்தின் சுவரோட அப்படியே பல்லி மாதிரி ஒட்டிக்கிட்டேன்.

ட்ரெயின் அடியில் உயிரோட இருந்தேன்

தலையைக் கூட நான் தூக்கி நிமிர்ந்து பாக்கலை. அப்படி தலையை தூக்கி இருந்தேன்னா ரயில் பெட்டி படியின் அடித்தளம் என் மண்டையை புளந்திருக்கும். என்னைத் தாண்டி ஒரு ஏழு எட்டு பெட்டி கடா கடாகுன்னு அந்த இடமே அதிர ஓடுது. அதுக்குள்ள யாரோ செயினை பிடிச்சு இழுத்து டிரெயினை நிறுத்தினாங்க. கிரீச்சுன்னு ஒரு சத்தத்தோட ட்ரெயின் இழுத்துப் புடிச்சு நிக்குது. எல்லாரும் ஓடிவந்து எட்டிப் பார்க்கிறாங்க. ஸ்டேஷன் மாஸ்டர், கார்டு, டிடிஈ, ரயில்வே போலீஸ், பயணிகள்னு ஏகப்பட்ட பேரு நான் கண்ட துண்டமா கிடப்பேன்னு வந்து எட்டிப் பாக்குறாங்க. நான் உயிரோட இருக்கேன். அல்லேலூயா!

கண்ட துண்டமாக்காமல் காப்பாற்றினார்

எப்படியப்பா இன்னும் நீ உயிரோட இருக்கே? இந்த மாதிரி விழுந்தவங்க யாருமே இதுவரை உயிரோட இருந்தது கிடையாது. கை, காலாவது போயிருக்கும். அப்படியே முழுசா இருக்கியே. ஆச்சரியம்தான்யா. உனக்கு ஆயுசு கெட்டி. நீ கும்பிடுற தெய்வம்தான் உன்னை காப்பாத்தி இருக்கு' என்று கூறினர். ஆமா நான் ஆராதிக்கிற என் இயேசுதான் என்னைக் காப்பாத்தி இருக்காரு. எல்லாமே கண்ணை மூடி கண்ணை திறக்கிற நேரத்தில ஒரு செகண்டுல ஆயிடுச்சு. அவரை நான் கூப்பிடறதுக்குக் கூட எனக்கு நேரம் இல்லை. ஆனா நான் கூப்பிடாமலேயே என்னை

காப்பாத்தி இருந்தாரு. அதுவும் எப்பேர்ப்பட்ட ஆபத்தில் இருந்து! இப்ப நெனைச்சலும் என் உடம்பெல்லாம் நடுங்குது. நான் அனாதை பொணமா கவர்மெண்ட் ஆஸ்பத்திரி மார்ச்சுவரியில் கிடந்திருப்பேன். நான் யாரு, என் பேரு என்னன்னு கண்டுபிடிக்கவே பல நாட்கள் ஆகியிருக்கும். ஆனா அதிசயமா, ஆச்சரியமா அவர் என்னைக் காப்பாத்திட்டாரு. அப்போ அவர் என் கூடவே, எனக்குள்ளேயே இருக்கிறார்னு தானே அர்த்தம்? **'நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதும் இல்லை'**ன்னு வாக்குப் பண்ணின தேவன், அதை அப்படியே நிறைவேத்திட்டாரு. ஓ.. வாட் எ காட் ஹி இஸ்! சிம்ப்ளி மார்வலஸ், வொண்டர் ஒர்க்கிங் காட்! ஆமென்!

அநாதை பிணமா கிடந்திருக்க வேண்டியவனை அள்ளி எடுத்தார்

என்னால அந்த சின்ன இடுக்குல எழுந்திருக்க கூட முடியலை. பிளாட்பார சுவருக்கும் ட்ரெயினுக்கும் ஊடால எவ்வளவு எடம் இருக்கும்? எப்படியோ நெளிஞ்சு கிளிஞ்சு, குனிஞ்சு நிமிர்ந்து மொள்ள லேசா எழுந்திருச்சேன். ட்ரெயினோட பாட்டம் என்னை அங்க அங்க இடிச்சது. வேற வழியில்லை. எந்திருச்சிட்டேன். ஆனா பிளாட்பாரத்தின் மேல ஏற முடியலை. இரண்டு கையை மாத்திரம் தூக்கினேன். ரெண்டு பேரு என் கையை பிடிச்சு அப்படியே தூக்கி மேலே பிளாட்பாரத்தில போட்டாங்க. அந்த ட்ரெயின்லயே வந்த ஒரு டாக்டர் என்னை செக் பண்ணினார். கால் முட்டியில, கொஞ்சம் சிராய்ப்பு. முழங்கால்ல கொஞ்சம் அடி. உடம்புல ஒண்ணு ரெண்டு இடத்தில் லேசா அடி. அவ்வளவுதான். அவரையும் அறியாம அவர் என் முதுகை தட்டி. 'யு ஆர் ரியலி லக்கி'ன்னு முணுமுணுத்தார். இது காலையில ஆறு முப்பதுக்கு நடக்குது. பத்து மணிக்கு செல்வி மஹால்ல மேடையில ஏறிட்டேன்.

பிணமாகியிருக்க வேண்டியவன் பிரசங்கம் பண்ணினேன்

திருநெல்வேலி ஏஜி சர்ச் பாஸ்டர் கிளாரென்ஸ் மருதய்யா ஒரு டாக்டருக்கு போன் பண்ணி மஹாலுக்கு வரவழைச்சு, மேடையிலேயே ஒரு ஏ.டி.டி. ஊசி போட வச்சாரு. பெயின் கில்லர் மாத்திரையும் ஒண்ணு ரெண்டு கொடுத்தாரு. 11 மணிக்கு மைக் பிடிச்சு பேச ஆரம்பிச்சுட்டேன். 'இந்தியாவில் சுவிசேஷம் ஏன் முழுமையாக பரவவில்லை'ங்கிற புத்தகம் வெளிவர்றதுக்கு எத்தனை தடைகளை சாத்தான் கொண்டு வந்தான் பார்த்தீங்களா? இது மாதிரி ஒவ்வொரு புத்தக வெளியீட்டுக்குப் பின்னாடியும் ஒரு நிகழ்வு இருக்கு. அவன் என்னவென்னாலும் செய்யட்டுமே.

கடைசியில வெல்லப் போறது, நம்ம ஆண்டவர்தானே! ஆமென்! அல்லேலூயா!

புத்தக தலைப்பை மட்டும் பார்த்து உள்ளே என்ன இருக்குன்னு தெரியாது!

கர்த்தர் இதுவரை 117 புத்தகங்களை தமிழில் வெளியிட கிருபை புரிந்துள்ளார். இந்த புத்தகங்களுடைய வெறும் தலைப்பை மாத்திரமே ப்ார்த்திட்டு யாரும் வாங்கிறது இல்லை. அந்த புத்தகத்தில என்ன எழுதியிருக்குன்னு கொஞ்சமாவது எடுத்து சொன்னாத்தான் வாங்குறாங்க. அதுனால என்னோட பிரசங்கங்களிலே இந்த புத்தகங்களைப் பற்றி கொஞ்சம் எடுத்து சொல்லுவேன். அதுவும் எந்த தலைப்புல, சப்ஜெக்ட்டுல பேசுறேனோ அது சம்பந்தமான புத்தகங்களைப் பத்தி மட்டும் சொல்லுவேன். பாபத்தை குறிச்சு பேசினேன்னா அது சம்பந்தமான புத்தகங்களை பத்தி சொல்லுவேன். பைபிள், வேத வாசிப்பு, ஆண்டவரோட வார்த்தை, அதற்கு கீழ்படிதல் பற்றி பேசினேன்னா அது சம்பந்தப்பட்ட புத்தகங்களை மட்டும் சொல்லுவேன். அதுவும் ஒரு புக்கைப் பற்றி 30 வினாடிகள்தான் சொல்லுவேன். நெறைய பாஸ்டர்கள் நீங்க எடுத்து சொன்ன விதம் ரொம்ப நல்லா இருந்துச்சு, பிரயோஜனமா இருந்துச்சு. எந்த புத்தகம் வாங்கணும், எதை மத்தவங்களுக்கு கொடுக்கலாம்னு நல்லா புரிஞ்சதுன்னு சொல்லுவாங்க. சில பேரு புத்தகங்களைப் பத்தியே ஜாஸ்தி பேசுறீங்கன்னு சொல்லியிருக்காங்க. பர்ப்பஸ் என்ன?

வேத வசனத்துக்கு முக்கியத்துவம்

சபையில ஒரு சில பேர்தான் நோட்டு அல்லது டைரி கொண்டு வந்து நான் சொல்லக் கூடிய வசனத்தை எழுதுவாங்க. மத்தவங்கள்ல சிலர் பைபிள்ல நான் சொன்ன வசனம் எங்க இருக்குன்னு பார்ப்பாங்க. முக்கால் வாசிப்பேரு சும்மா அப்படியே கேட்டுக்கிட்டு இருப்பாங்க. கேக்கும்போது புரிஞ்சாப்புல இருக்கும். அப்புறம் மறந்து போக நெறைய சான்ஸ் இருக்கு. அதுனால மூன்று நாள் கன்வென்ஷன்ல முதல் பிரசங்கத்திலேயே எல்லாரும் கண்டிப்பா நோட்டு கொண்டு வந்து கேக்கிற வசனத்தை எழுதி வச்சிக்கிடணும் என்று கண்டிப்பா சொல்லுவேன். கன்னியாகுமரிக்கு பக்கத்தில ஒரு ஊர்ல எனக்கு பப்ளிக் மீட்டிங். அதுக்கு தலைமை தாங்க ஐபிசி சர்ச் பாஸ்டர் ஆசீர்வாதம் வந்திருந்தார். அவர் 298 தடவை பைபிளை படிச்சிருக்கிறார். இருந்தாலும் மேடையிலேயே நான் சொல்லக் கூடிய வசனங்களை அவர் மெனக்கிட்டு உட்கார்ந்து

எழுதிக்கிட்டு இருக்காரு. அவருக்கு வசனம் தெரியாமல் இல்லை. ஆண்டவர் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு விதமா வெளிப்பாடு கொடுப்பார். அதை தெரிஞ்சிடணும்கிறதுக்காக எழுதுகிறார். பல சபைகள்ல பார்த்திருக்கேன். ஒரே ஒரு தடவை புல்லா பைபிளை படிச்சவங்க, ஒரு 10% கூட இருக்க மாட்டாங்க. இது கொடுமை இல்லையா?

அதை அப்புறமா வீட்ல போயி இந்த மாடு அசை போடுற மாதிரி கேட்ட பிரசங்கத்தை, செய்தியை வசனத்தோட பைபிள்ல பார்த்து, படிச்சு மறுபடியும் ரிவைஸ் பண்ணனும். செய்தியை வசனத்தோட ரெண்டு மூணு பேர்கிட்டவாவது அப்படியே பகிர்ந்துக்கிடணும். அப்பத்தான் வசனத்தை இருதயத்தில் வச்சு வைக்க முடியும். இல்லேன்னா இந்த காதுல வாங்கி அந்த காதுல விட்டுடுவீங்க. வசனத்துக்கு இம்பார்ட்டென்ஸ் கொடுங்க. அதுதான் உங்களை உயிர்ப்பிக்கும், பலப்படுத்தும், பக்குவப்படுத்தும். பரிசுத்தப்படுத்தும். பாவம் செய்யாதபடி உங்களை தடுத்து நிறுத்தும். உங்களை பரலோக பிரஜையா மாத்தும் என்று சொல்லுவேன். என்ன சொன்னாலும் சில பேருதான் நோட்டு கொண்டு வந்து குறிப்பு எடுப்பாங்க.

நெறைய படிக்கணும், குறிப்பு எடுக்கணும்

வீட்ல பைபிள் படிக்கிற சமயத்திலயும் உங்க பக்கத்தில ஒரு நோட்டு இருக்கணும். என்ன படிச்சீங்க? அந்த அதிகாரத்தில என்ன எழுதியிருக்கு? என்ன வாக்குத்தத்தம் இருக்கு? யாரைப் பத்தி எழுதியிருக்கு? அவரைக் குறிச்சு பைபிள்ல வேற எங்கெல்லாம் சொல்லப்பட்டு இருக்குன்னு அப்பப்போ படிக்கிற சமயத்திலே எழுதணும். உதாரணமா தாவீதை குறிச்சு பைபிள்ல எங்கெல்லாம் சொல்லப்பட்டு இருக்குன்னு அப்பத்தான் தெரிய வரும். மேலும் சப்ஜெக்ட் வாரியா பிரிச்சு எழுதணும். அன்பை குறிச்சு என்ன சொல்லப்பட்டு இருக்கு? பாவத்தைக் குறிச்சு, குடும்பம், கணவன் மனைவி, குழந்தை வளர்ப்பு, பரிசுத்தம் குறிச்சு எங்கெல்லாம் என்ன சொல்லப்பட்டு இருக்குன்னு எழுதணும். அப்போ அது குறிச்சு ஆண்டவரோட முழுமையான எண்ணம், எதிர்பார்ப்பு என்னங்கிறது நமக்கு புரியும். கேக்கிறது ஒண்ணு, திருவசனத்தை படிக்கிறது ஒண்ணு. அதை எழுதுறது ஒண்ணு. ஆண்டவரோட வார்த்தையை நோட்டில மாத்திரமல்ல, உங்க இருதயத்திலேயும் சேர்த்து எழுதுறீங்க. சும்மா குமுதம், ஆனந்த விகடன், ஜூனியர் விகடன் படிக்கிற மாதிரி பைபிளை படிக்கப்பிடாது. பைபிள், ஆண்டவரோட வார்த்தை. நல்ல தேவ மனிதர்கள் எழுதிய புத்தகங்களையும் வாங்கிப் படிக்கனும். ஒரு

நாளைக்கு ஒரு வசனம் மனப்பாடம் பண்ணினாக் கூட ஒரு வருஷத்தில 365 வசனம் மனப்பாடம் பண்ணலாமேன்னு எல்லாம் ஒரு பிரசங்கத்தில சொல்லுவேன். கேட்ட செய்தி, வசனம், சத்தியம் மறக்க வாய்ப்பு இருக்கு. ஆனா புத்தகத்தில இருக்கிறது என்னிக்கும் அழியாது. இதை மத்தவங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும் பயன்படுத்தலாம். புத்தகம்தான் பொக்கிஷம் நமக்கு. நெறைய படிக்கணும். அதுதான் நம்மை உருவாக்கும்.

புத்தகங்களைக் குறித்து ஒரு சீடி

ஆண்டவர் கொடுத்த இந்த வார்த்தை, செய்தி, ஞானம் எல்லாருக்கும் தெரிய இந்தப் புத்தகங்களை அவங்க வாங்கணு மேங்கிறதுக்காக, இந்த புத்தகங்களைக் குறித்து மட்டுமே ஒரு விசிடியாகவோ அல்லது ஒருத்தர் கேள்வி கேட்க, அதுக்கு பதில் சொல்லுகிறமாதிரி ஒரு சீடி தயார் பண்ணினா என்ன? 'இந்துமதம் உருவானதே கிறிஸ்தவத்தினுடைய அடிப்படையிலதான்'னு எப்படி சொல்றீங்கன்னு கேக்கிற கேள்விக்கு, அது சம்பந்தமான புத்தகங்களைக் காட்டி, சொன்னோம்னா அது ஆதாரத்தோட சொல்ற மாதிரியும் இருக்கும், அப்போ அதை வாங்குறதுக்கும் ஒரு ஆர்வம் இருக்குமேன்னு நெனச்சு என்னுடைய ஆவிக்குரிய ஊழிய நண்பர் டாக்டர் வி. ராஜாவிடம் சொன்னேன். (பிராமின்ல இருந்து இரட்சிக்கப்பட்டு 'நிம்மதியைத் தேடி' என்ற ஒரு அருமையான சாட்சிப் புத்தகத்தை பல மொழிகள்ல ரூ.5க்கு வெளியிட்ட ஒரு வல்லமையான பாடகர், செய்தியாளர், ஊழியர்) நான் அவர்கிட்டே இதை சொன்ன உடனே, 'செஞ்சுடுவோம். எனக்கு தெரிஞ்ச ஒருத்தர் ஸ்டூடியோ வச்சிருக்கார். மடிப்பாக்கத்திலே. அங்கே நீங்க சாயங்காலம் ஒரு 6 மணிக்கு வந்திடுங்கன்னு ஒரு இடம் சொன்னார். அவரே கேள்விகளை கேட்கிற மாதிரியும் நான் பதில் சொல்லி, புத்தகம் காட்டுற மாதிரியும் பிளான் பண்ணி, பிரிபேர் செய்து சாயங்காலம் 6 மணிக்கு மடிப்பாக்கத்தில் இருக்கும் படியா என் டூவீலர்ல 5 மணிக்கு கிளம்பினேன். முக்கால் வாசி தூரம் போயிட்டேன். அடிச்சது பாருங்க ஒரு மழை. இடி மின்னல், சூறாவளிக் காற்றோடு அப்படி ஒரு மழை. நான் சைடுல ஒரு இடத்துல ஒதுங்கிறதுக்குள்ளேயே தொப்பலா நனைஞ்சுட்டேன். மழை நிக்கிற வரைக்கும் அங்கேயே சைடுல நின்னுட்டு இருந்தேன். மழை கொஞ்சம் லேசா விட்டவுடனே மறுபடியும் கிளம்பினேன்.

வண்டியோட ஒரு பள்ளத்தில் விழுந்தேன்

ரோடெல்லாம் தண்ணி. மேடு பள்ளம் எதுவும் தெரியலை.

இதுல ரோட்டை வேற பேர்த்து போட்டிருக்காங்க. நம்ம ஊர்லதான் ரோட்டை பேர்த்துப் போட்டுட்டாங்கன்னா, அப்படியே மாசக்கணக்குல போட்டு வச்சுடுவாங்களே. ரோடு ரொம்ப மோசமா இருந்துச்சு. இதுக்கு அந்த ரோடு ரொம்ப பிசியான ஒரு ரோடு. பயங்கரமா ஹெவி டிராபிக் இருக்கிற ரோடு. அதுல நான் வண்டி ஓட்டிக்கிட்டு போறேன். எனது நண்பர் ராஜா சொன்ன இடத்தை தாண்டிட்டேன். அதுனால வண்டியை திருப்ப முனைந்தேன். அப்படி வண்டியை திருப்பும்போது மழை நீரினால் மூடி மறைக்கப்பட்டிருந்த ஒரு குழிக்குள் என் வண்டி நுழைஞ்சு நான் அப்படியே சாஞ்சு கீழே விழுந்துவிட்டேன். வண்டியோட நான் விழுந்திட்டதினால, என்னோட இடது கண்ணு புருவத்துக்கு பக்கத்துல ஒரு கல்லு குத்தி கிழித்து ரத்தம் வடியுது. சிலர் வந்து என்னை தூக்கி விட்டனர். என் புருவத்துல இருந்து ரத்தம் வழிஞ்சதையும் நான் அறியவில்லை. கொஞ்ச நேரத்தில என் மூக்கில் இருந்தும் இரத்தம் ஊற்ற ஆரம்பிச்சிடுச்சு. அதையும் நான் உணரவில்லை. அப்படி வடிஞ்ச இரத்தம் என் வாய்க்குள்ள போயி, அதன் டேஸ்ட் ஒரு மாதிரியா இருக்கும்போதுதான் நான் துப்பினேன். அதுல ஒரே ரத்தம். அப்பத்தான் நான் உணர்ந்தேன். எங்கேயோ உள்ளே அடி பட்டிருக்குன்னு.

சாத்தானின் சதி வேலை தடுத்து விட்டது

அந்த சமயத்தில என் நண்பர் ராஜா நான் எங்கே இருக்கேன்னு போன் பண்ணினார். என்னால போன்ல கூட பேச முடியலை. பக்கத்தில இருந்த ஒருத்தர் என் செல்லை வாங்கி, நான் இருக்கும் இடத்தை கூறி உடனே வரச் சொன்னார். அடுத்த ஐந்து நிமிடத்தில் அவர் வந்துட்டாரு. என் நிலையை பார்த்துட்டு உடனே அவரோட டுவீலர்ல பக்கத்துல ஒரு ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போனார். அங்கே என்னோட நிலைமையைப் பார்த்திட்டு, புருவத்தில் அடிபட்டிருந்த காயம் மிக ஆழமாக இருந்ததால், மூன்று தையல் போட்டாங்க. மூக்கிலிருந்து ரத்தம் வந்து கொண்டே இருந்ததால் சீட்டி ஸ்கேன் எடுத்து வாருங்கள் என்று டாக்டர் கூறினார். நான் ராஜாவிடம் ஸ்கேன் எல்லாம் ஒண்ணும் வேண்டாம். என்னை வீட்டில் விட்டு விடுங்கள். என் வண்டி எங்கேன்னு கேட்டேன். அங்கேயே ஒரு கடையில் முன்பாக நிறுத்தியிருக்கேன். நீங்க கவலைப்படாதீங்க. நாளைக்கு உங்க வீட்ல பைக் நிக்கும் என்றார். கடைசியில நான் சிடி ரிக்கார்டிங் செய்யணும்னு நினைச்சது முடியாமல் போச்சு. சாத்தான் இதை எப்படியெல்லாம் தடுக்க

முடியுமோ அதை மழையை கொண்டு வந்து, ஒரு பள்ளத்தில் என்னை விழ வச்சு, காயப்படுத்தி தடுத்து நிறுத்திவிட்டான்.

முழங்கால் ஜெபம் முற்றிலும் குணமாக்கும்

என்னோட சாட்சி ஏஞ்சல் டிவி, சால்வேஷன் டிவி, ஹோலி காட் டிவி, ஜீஸஸ் டிவி, ஹெவன் டிவி, ஜே.டி.கே. டிவி, என்று பல டிவிகளில் ரிக்கார்டு ஆகி, அவர்கள் அடிக்கடி அதை ஒளிபரப்பிக் கொண்டு இருக்கின்றனர். யாரோ சிலர் நெட்லயும், யூடியூப்லயும் அப்பப்போ சிலர் வாட்ஸ் அப்புலேயும் போட்டு விடுகின்றனர். இதுனால பப்ளிசிட்டியும் ஆகுது. எதிர்ப்பும் அதிகமாகுது. புக் பற்றிய இந்த சீடி வெளியே வந்தால், அதுனால சாத்தானின் இராஜ்யத்துக்கு பெரிய ஆபத்தாச்சே. அதுனால தடைகளை உண்டு பண்ணித் தடுத்துட்டான். இந்த ஆக்ஸிடெண்ட்டுக்கு பிறகு நான் படுத்தா ஏதோ ஒரு பெரிய பாதாளத்துக்குள்ள போற மாதிரி எனக்கு கண்ணை இருட்டிக் கொண்டு தலை சுற்றும். அதே மாதிரி எழுந்த வுடனேயே தலை சுற்றும். கண்ணுக்கு அருகில் போட்ட தையலை பிரிக்கும்போது டாக்டரிடம் இந்த தலை சுற்றல் பற்றி சொன்னேன். தலையில உள்ளே எங்காவது ரத்தம் கட்டி இருக்கலாம். அவரும் சீட்டி ஸ்கேன் எடுக்கச் சொல்லிட்டாரு. நான் முழங்கால் போட்டேன். ஆண்டவரே நான் உம்மோட ஊழியக்காரன், எனக்கு இந்த சோதனையா? பிசாசு வெற்றி பெறுவதா? நோ.. பிசாசை வென்ற இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தில் சாத்தானின் கிரியைகள் எல்லாவற்றையும் நான் அதமாக்குகிறேன் ஆண்டவரேன்னு ஜெபித்தேன். எந்தவித மருந்து மாத்திரையும் இல்லாமல் ஆண்டவர் தலை சுற்றலிலிருந்து அற்புத சுகத்தை நான் பெற்றுக் கொள்ள கிருபை பாராட்டினார்.

ஊழியத்தில் சோதனைகள் இருக்கும்

தடைபட்ட இந்த வீடியோ ரெக்கார்டிங்கை நான் சிங்கப்பூர் PEC சர்ச்சில் மூன்று நாட்கள் கன்வென்ஷனுக்கு போயிருக்கும்போது அங்கே இந்த ரெக்கார்டிங் வசதி இருந்ததால், அங்கே எந்த செலவுமே இல்லாமல் ரிக்கார்டிங் செய்தேன். ஆனா அந்த சீடி என் கையில கிடைக்க 3 மாசம் ஆயிடுச்சு. அதை போட்டுப் பார்த்த என்னோட மகன் சக்தி ஸ்டீபன் சொன்னான். இந்த சீடியை இன்னும் ரொம்ப நல்லா, பண்ணித் தாரேன். நீங்க பேசும் போது சைடுல அந்த புத்தகம் ரொட்டேட் ஆகி வர்ற மாதிரியும், அந்த புத்தகம் இதுவரை எவ்வளவு போயிருக்குங்கிற விபரத்தையும் போடுறேன்னு சொல்லி வாங்கினான். ஏதோ செய்ய

ஆரம்பிச்சான். அவனோட கம்ப்யூட்டர் பேக்அப் ஆயிடுச்சு. லேப்டாப்புல செய்ய ஆரம்பிச்சான். அதுலயும் ஏதோ புராப்ளம் வந்து செய்ய முடியவில்லை. இதுக்காகவே வேற ஒரு கம்ப்யூட்டர் வாங்கணும்னு வாங்கினான். அதுலயும் இன்னும் பண்ண முடியலை. இழுத்துக்கிட்டு இருக்கு. பிசாசின் கிரியைகளை பார்த்தீங்களா? நான் குஜராத், மாண்டியா (கர்னாடகா), ரங்கூன், மார்த்தாண்டம்னு ஓடிக்கிட்டு இருக்கிறதுனால, இதுக்கு டைம் ஒதுக்க நேரம் இல்லாததுனால இதை இன்னும் செய்து முடிக்கவில்லை. ஊழியத்திலே சோதனைகள் இருக்கும். கஷ்டமில்லாம, பிரச்சனை, வேதனை இல்லாம ஊழியம் இல்லை. இருக்கத்தான் செய்யும். ஆனால் தேவ கிருபையால் எல்லாவற்றையும் செய்து முடிப்பேன். அல்லேலூயா!

கேன்சருக்கு கீமோ தெரபி சிகிச்சை

போராட்டங்கள், பிரச்சனைகள், எதிர்ப்புகள், உடல்நலக் கோளாறுகள், எல்லாமுமே ஊழியக்காரர்கள் எதிர் கொள்ளத்தான் வேண்டி வரும். ஆனால் கர்த்தர் நம்மோடு இருந்தால் எதைக் குறித்தும் நாம் அதைரியப்பட தேவையில்லை. பல வெளிநாடுகளுக்கும் என்னை ஊழியத்துக்கென்று அழைப்பார்கள். அப்படி சிங்கப்பூர், மலேசியா,மியான்மர் போன்ற பல நாடுகளுக்கு நான் சென்றிருந்த சமயத்தில் என்னால் இரண்டு இட்லி கூட சரியாக சாப்பிட முடியவில்லை. டேஸ்ட் சரியில்லையோ என்று நினைத்தேன். நான் இங்கு வந்து செக் பண்ணிட்டு சீட்டி ஸ்கேன் எடுத்தா, பெருங்குடல்ல ஒரு பெரிய கட்டி. மியாட் ஆஸ்பத்திரியிலே வயிற்றில் ஒரு ஆறு இஞ்ச் ஓபன் பண்ணி அந்த கட்டியை ஆபரேட் செய்து எடுத்தனர். அதை பயாப்சி எடுத்தால் அது கேன்சர். 11 கீமோ தெராபி கொடுத்தாங்க. கீமோ தெராபி எடுத்திட்டு இரவு 8 மணிக்கு வருவேன். அதன் பிறகு நான் கண்டிப்பா ரெஸ்ட் எடுக்கணும்னு டாக்டர்கள் சொன்னாங்க. ஆனா நான் 9 மணிக்கு ட்ரெயின் பிடிக்க ஓடிவிடுவேன்.

நான் 75 வயசு ஊழியன்

என் மனைவி முதற்கொண்டு அழுவாள். ஏன் இப்படி அலையுறீங்க? உங்க மூஞ்சியே மறந்திடும் போல இருக்குன்னு புலம்புவா. நான் எதைப் பற்றியும் கவலைப்படாம தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கிறேன். எனக்கு 75 வயது முடியப் போகுது. நான் 75 வயது கிழவன் இல்லை. 75 வயசு வாலிபன்! வாழும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் ஆண்டவருக்காகவே வாழணும்னு

ஓடிக் கொண்டிருக்கிறேன். அவரோட அனுமதியில்லாம தலையிலே இருந்து ஒரு முடி கூட விழாதே. நம்மை பெலப்படுத்துகிற தேவனல்லவா அவர்! எந்த களைப்பும் எனக்கு இல்லை. சமயத்தில் சில ஊர்ல ஞாயிறு அன்று 4 சபையிலே செய்தி கொடுக்கிறேன். 5, 6 மணி நேரம் தொடர்ந்து நின்று பிரசங்கம் செய்ய தேவன் பெலன் தருகிறார். இது என் சுய பெலத்தில் அல்ல. தேவன் தந்திடும் அந்த தெய்வீக பலத்தால் ஓடிக் கொண்டிருக்கிறேன்! அல்லேலூயா!

இருதயத்தில் அடைப்பு

அந்த கட்டியை ஆபரேஷன் செய்து எடுக்கணும்னு டாக்டர்கள் சொல்லிட்டாங்க. ஆபரேஷனுக்கு முன்னாடி செக் பண்ணினால் ஹார்ட்டில் ரொம்ப பிளாக் இருக்கு. ஸ்கேன் எடுத்தா ஒரு இடத்தில் 95% பிளாக்கு, இன்னும் ரெண்டு எடத்துல 75%, ஒரு எடத்துல 60%, ஒரு இடத்தில் 40%. எப்படிய்யா நீங்க அலையுறீங்க?ன்னு டாக்டர் கேக்குறாரு. முதல்ல உங்க ஹார்ட்டுக்கு ஆபரேஷன். அப்புறமாத்தான் வயிற்றில் இருக்கிற கேன்சருக்கு ஆபரேஷன்னு டாக்டர் சொல்லிட்டாரு. நான் முழங்கால் போட்டேன். ஆண்டவரே! ஓபன் ஹார்ட் சர்ஜெரியா? வேணாம்ப்பா. வேற ஏதாவது செய்யும் என்று ஜெபிச்சேன். அடுத்த நாள் டாக்டரே சொல்லிட்டார். நெறைய பிளாக் இருக்கு. இப்போ ஆபரேஷன் செஞ்சா ரிஸ்க். அதுனால முதல்லஅந்த 95% பிளாக்கு இருக்கிறதுல ஒரு ஸ்டென்ட் போட்டுடலாம். அதுக்கு ஆபரேஷன் தேவையில்லை. கையில இருக்கிற நரம்பு வழியாவே (ஐ.வி) இந்த ஸ்டென்ட்டை அனுப்பி 95% பிளாக் உள்ள இடத்தை விரிவுபடுத்தி இரத்தம் தடைபடாமல் செல்ல வைத்துவிடலாம் என்று டாக்டர் சொல்லிவிட்டார். ஜெபத்தை கேட்டு ஆண்டவர் இருதய ஆபரேஷனே இல்லாமல் என்னை காப்பாற்றி விட்டார். அதுக்குப் பிறகு வயிற்றில் ஆபரேஷன் செய்தனர். இப்போது எனக்கு எந்த அதிகமான பிரச்சனையும் இல்லாமல் ஓய்வின்றி ஓடிக் கொண்டு இருக்கிறேன். அல்லேலூயா! ஊழியம் செய்யுறதுனாலயோ, நாம கிறிஸ்துவுக்குள் இருக்கிறதுனாலயோ, நமக்கு நோய் நொடியே வராது என்ற அர்த்தம் இல்லை. மனுஷ உடம்புதானே. வயசு ஆக ஆக சில தேய்மானங்கள், பலவீனங்கள், வீக்னஸ் இருக்கத்தானே செய்யும். ஆனாலும் தேவன் நம்ம கூடவே நல்ல பரிகாரிகாரியாக இருந்து தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சுன்னு சொல்லுவாங்களே அப்படி நம்மை காப்பார்!

ஹார்ட் புராபளத்தை ஓரளவு சரி செஞ்ச பிறகு...

கால தாமதம் ஆகிறதே என நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் நம்ம ஆண்டவருக்கு தெரியும். எதை எப்போ அனுமதிக்க வேண்டும் என்று. இப்போது கிறிஸ்தவத்துக்கு எதிரா, திருச்சபைகளுக்கு எதிரா, பல எதிர்ப்புகள் உருவாகிக் கொண்டு இருக்கிறது. அதுனாலதான் ஏதோ காரணத்தினால் இரண்டாம் வருகையை இன்னும் காலதாமதப்படுத்துகின்றார் என்று விசுவாசிக்கிறேன். எல்லா தடைகளையும் நீக்கி ஏற்ற வேளையில் ஆண்டவர் சகலத்தையும் வாய்க்கப் பண்ணுவார். அல்லேலூயா!

வெளியிலேயும், பாஸ்டர்கள் மத்தியிலும் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் மத்தியிலும், என் சரீரத்திலேயும் சில பிரச்சினைகளை கொண்டு வந்ததோடு சாத்தான் நிக்கலை. என் வீட்டுக்குள்ளும் என் குடும்பத்திலேயும் ஊழியத்துக்கு எதிரா பல எதிர்ப்புகளை கொண்டு வந்தான். வாரா வாரம் 3, 4 நாள் ஊழியம்னு நீங்க வெளியே போயிடுறீங்க. குடும்பமா நாம் ஒரு சபைக்கு போயி ஆராதிச்சா அது பெரிய ஆசீர்வாதம். நீங்க வாரா வாரம் ஒரு சபை, நாங்க ஒரு சபைன்னு போயிக்கிட்டு இருக்கிறது நல்லாவா இருக்கு? அது பெரிய ஆசீர்வாதம் இல்லை அப்படீன்னு என் மனைவி முணுமுணுக்க ஆரம்பிச்சா. ஏற்கனவே நான் ஏகப்பட்ட புக் பிரிண்ட் பண்ணி வீட்ல ஸ்டாக் வச்சு, வீட்டு முன் ஹால்லயே ஒரு ஷோ ரூம் மாதிரி புத்தகங்களை வச்சு விக்கிறது அவளுக்குப் பிடிக்கலை. வீட்டையே ஒரு கோடவுன் மாதிரி ஆக்கிட்டீங்க. எல்லா நேரத்திலேயும் புக்கு வாங்க வர்றாங்க. கொஞ்சம் கூட ஓய்வு எடுக்க முடியலைன்னு ஒரே புலம்பல். இதுல யாரோ சில புண்ணியவான்கள் போட்டு விட்டுட்டாங்க. அழைப்பு இல்லாம ஊழியம் செய்யுறது கூடாது. ஆண்டவர் அதை ஏத்துக்க மாட்டாரு. ஆண்டவரே, உம்மோட நாமத்தினாலே நான் பேய்களை விரட்டினேனே. நோய்கள் நீங்கிடுச்சே. உன்னை யாருன்னே தெரியாதுன்னு சொல்லிடுவாரு. மாம்ச புத்தியில் சுய விருப்பத்தில் ஊழியம் செய்யக் கூடாது.' அதுக்குன்னு தனி அழைப்பு, அபிஷேகம் இருக்கணும்னு போட்டு விட்டுட்டாங்க. அதுவும் அவள் பெரிதும் மதிக்கிற ஒருத்தர் கிட்டே இருந்து வந்திருச்சு. அவ்வளவுதான் ஏற்கனவே வீட்ல இருந்த புகைச்சல் இப்போ பத்திக்கிட்டு எரிய ஆரம்பிச்சிடுச்சு.

சுவிசேஷத்தை அறிவிக்க அழைப்பு தேவை இல்லை

நான் என் மனைவியிடம் சொன்னேன். ஆண்டவர் செய்த

நன்மைகளை நாம வெளியிலே போயி சொல்றது நம்ம தலை மேல விழுந்த கடமை அது. அதை கண்டிப்பா எல்லாருமே செஞ்சு ஆகணும். அதைச் செய்யாம இருக்குறதுனாலதான் இந்தியாவுல இன்னும் முழுமையா சுவிசேஷம் பரவாம இருக்கு. சுவிசேஷம் அறிவிக்க அபிஷேகம், அழைப்பு தேவை இல்லை. சபை நடத்த கண்டிப்பா அழைப்பு தேவைன்னு எவ்வளவோ எடுத்துச் சொன்னாலும் கேக்கலை. வசனத்தை எடுத்துச் சொல்றேன். 'நீங்களே எனக்கு சாட்சிகள்' ஏசாயா 43:12. 'கர்த்தரைத் துதித்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துங்கள். அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரஸ்தாபப்படுத்துங்கள்'னு சங் 105:1 சொல்லுது. 'நீ சுவிசேஷகனுடைய வேலையை செய்.உன் ஊழியத்தை நிறைவேற்று' - 2 தீமோ 4:5. 'நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாக இருப்பாயாக' - கொலே 4:17. 'இயேசு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்படாத இடங்களில் சுவிசேஷத்தை அறிவியுங்கள்'. - ரோமர் 15:21. 'நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்' - மாற்கு 16:15. 'நீ பெரு வழிகளிலும், வேலிகள் அருகிலும் போய் என் வீடு நிறையும் படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக் கொண்டு வா' - லூக்கா 14:23. 'எல்லா மருஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியவும் அவர் சித்தமுள்ளவராக இருக்கிறார்' - 1 தீமோ 2:4. இப்படி இன்னும் எத்தனையோ வசனங்களை எடுத்துச் சொன்னேன். வெளி 7:9 பாரு. ஆண்டவர் 'நம்மை சொந்த ஜனமா தெரிஞ்சுக்கிட்டதே அவர் செய்த புண்ணியங்களை அறிவிக்கத்தான்'னு 1 பேதுரு 2:9 சொல்லுது. 'இருளில் வாழும் ஒரு கூட்ட ஜனத்தை வெளியில கொண்டுவர உன்னை இந்த உலகத்துக்கு வெளிச்சமாக வைத்தேன்'னு ஆண்டவர் சொல்றாரு - மத் 5:14ல. இதுபோல எத்தனையோ வசனங்களை எடுத்துச் சொல்லியும் வீட்ல சமாதானம் இல்லை. நான் ஊழியத்துக்கு போகும் போதெல்லாம் தகராறு, பிரச்சனை.

இனி போன் காலை எடுக்காதே

நான் ஆண்டவர்கிட்டே கண்ணீர் விட்டேன். 'ஏன் ஆண்டவரே இத்தனை பிரச்சனை? உம்மோட ஊழியத்தை செய்யத்தானே நானே போறேன். பிறகு ஏன் இத்தனை இடஞ்சல்? நீர் பார்த்துக்கிட்டுத்தானே இருக்கிறீர். ஏதாவது செய்யும்'னு அழுதேன். 'இனி போன் கால் அட்டெண்ட் பண்ணாதே'ன்னு ஆண்டவர் உணர்த்தினார். எனக்கு ஒரே குழப்பம். நான் என்ன

கேக்குறேன். இவரு என்ன சொல்றாருன்னு எனக்கு புரியலை. ஆனாலும் எந்த கேள்வியும் கேக்காம அப்படியே கீழ்படிஞ்சேன். அதுக்கப்புறம் நான் போனை எடுக்கிறதே இல்லை. என்னோட மூத்த மகன் கார்த்தி, இல்லேன்னா என்னோட மனைவி தான் எடுத்து பேசுவாங்க. யாராவது ரொம்ப முக்கியமா எங்கிட்டே பேசணும்னு சொன்னா மாத்திரம் நான் போனை வாங்கி பேசுவேன். இல்லேன்னா அவங்கதான் அட்டெண்டு பண்ணும்படி விட்டுட்டேன். அப்புறமாகத்தான் தெரிஞ்சது ஆண்டவர் எதுக்காக இதைச் சொன்னாருன்னு. உலகத்தின் பல பகுதியில் இருந்து, நம் தேசத்தின் பல இடங்களில் இருந்து, பல ஊர்கள்ல இருந்து, தினமும் போன் வருது. 'உங்க புத்தகம் படிச்சேன். சீடி பார்த்தேன். நான் கிறிஸ்துவை ஏத்துக்கிட்டேன். உங்க புக் என்னை கிறிஸ்துவுக்குள்ளே பலப்படுத்துச்சு', 'என்னோட துன்பம், பிரச்சனைதான் பெரிசுன்னு நினைச்சேன். உங்களோடதை பார்த்த பிறகு என்னோடது ஒண்ணுமே இல்லைன்னு தோணுது', 'எங்க குடும்பத்தில இருந்த எதிர்ப்புகள் இப்போ இல்லை.. கடுமையா எதிர்த்துக்கிட்டு இருந்தவங்க இப்போ இயேசுவை ஏத்துக்கிட்டாங்க! 'ஒரே நாள்ல எங்க குடும்பத்தில் 13 பேர் ஞானஸ்நானம் எடுத்தோம். 'எனக்கு நோய் குணமாகிடுச்சு' என்று இப்படி ஏகப்பட்ட போன் கால்கள்.

ஒரே கல்லில் ரெண்டு மாங்காய்

இதை எல்லாம் கேட்டாப் பிறகுதான், நான் ஊழியத்துக்குப் போறதுனால நிறையப் பேரு மனம் திரும்புறாங்க. அற்புதங்கள் நடக்குது. கடின இருதயங்கள் உடைக்கப்படுதுன்னு தெரிஞ்சப் பிறகு படிப்படியா எதிர்ப்புகள் வீட்ல குறைய ஆரம்பிச்சது. அது மாத்திரமல்ல, நான் வீட்ல இருக்கிற நாட்கள், நேரம் கம்மி. இதில் போன் கால் வேற நான் அட்டெண்ட் பண்ணினா, லேசுல விடமாட்டாங்க. விலாவாரியா அவங்க சாட்சி எல்லாமே சொல்லுவாங்க. இதுனால என்னோட பல வேலைகள் அப்படியே கிடந்து போகும். இப்போ நான் போன் கால் எடுக்காததுனால் எனக்கு இந்த டைம் சேவ் ஆகுது. ஒரே கல்லுல ரெண்டு மாங்கா அடிச்சுட்டாரு ஆண்டவரு. நம்ம ஆண்டவரு எப்படிப்பட்ட கில்லாடி. பிரச்சனையை அவர் கிட்டே சொன்னால் போதும். அவரு என்ன செய்யணுமோ அதை செஞ்சுடுவாரே! அவர் ஆலோசனைக் கர்த்தரல்லவா!

பாராட்ட பரந்த மனம் வேண்டும்

ஆரம்பத்துல நான் எந்த புத்தகம் எழுதினாலும் அதை நான் பெரிதும் மதிக்கக்கூடிய ஒரு சில பேர்கிட்ட படிக்க ஒரு பிரதியை கொடுப்பேன். வாங்கிட்டுப் போயி படிச்சாங்களா இல்லையான்னு கூட தெரியாது. ஏன்னா வாயைத் திறந்து ஒரு வார்த்தை 'படிச்சேன். நல்லா இருந்துச்சு... இல்லை எனக்கு இது இது உடன்பாடு இல்லை. இதை நீங்க இப்படி மாத்தி எழுதியிருக்கலாம்'னு ஏதாவது சொல்லலாம் இல்லையா? ஒரு வார்த்தை கூட வராது. எந்த புத்தகத்தை நான் படிச்சாலும் உடனே அவங்களுக்கு போன் பண்ணி மனசார பாராட்டுவேன். அதே மாதிரி சிலர் பிரசங்கத்தைக் கேட்டும் மனசார பாராட்டுவேன். ஆனா சிலர் வாயில இருந்து தப்பித் தவறிக் கூட ஒரு வார்த்தை பாராட்டி வராது. ஆனா அவங்க மாத்திரம் பாராட்டுகளை எதிர்பார்ப்பாங்க. இப்படியும் சில பேரு. என்ன பண்ண? இது பொறாமையா? அல்லது அவங்களோட சுபாவமே அப்படியா? தெரியலை. இப்போ நான் யாருக்கும் படிக்கிறதுக்கு எந்த புத்தகமும் கொடுக்கிறது இல்லை. நிறுத்திட்டேன்.

நல்ல ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வேன்

என்னோட புத்தகங்களை படிச்சுட்டு நிறையப் பேரு பாராட்டுறவங்க இருக்காங்க. சில பேரு உருப்படியான சில ஆலோசனைகளை சொல்லுவாங்க. சிலதுகளை அப்படியே எடுத்துப்பேன். சிலதுகளை நான் கண்டுக்கமாட்டேன். ஈரோட்ல இருந்து ஒருத்தர் போன் பண்ணினார். 'ஐயா உங்க புக்கு நிறைய வாங்கி நான் புறஜாதி மக்களுக்கு கொடுப்பேன். சுவிசேஷத்தை அறிவிக்க உங்க புக் பெஸ்ட்டுய்யா. நெறையப் பேரு தொடப்படுறாங்க. ஆனா ஒரு சில பேரு உங்க சாட்சி புக்கை திறந்த உடனேயே இருக்கிற மேல் மருவத்தூர் பராசக்தியை கும்பிடுற மாதிரி நீங்க செவ்வாடையிலே இருக்கிறதைப் பார்த்துட்டு மேலும் ஆர்வமா ஒண்ணு ரெண்டு பக்கம் திருப்புவாங்க. அதுல சில கிறிஸ்தவ போதகர்களின் அணிந்துரை, மதிப்புரை எல்லாம் பார்த்துட்டு 'இது ஒரு கிறிஸ்தவ புத்தகம் வேண்டாம்னு' திருப்பிக் கொடுத்துடுறாங்கன்னு சொன்னாங்க. சுவிசேஷத்தை அறிவிக்க இந்த அணிந்துரையும், மதிப்புரையும் ஒரு தடையா? இந்துக்களுக்கு யாருக்கு தெரியும் நம்ம புகழ் பெற்ற போதகர்களையோ அல்லது ஊழியக்காரர்களையோ? அதனால அடுத்த பதிப்புல எல்லா அணிந்துரைகளையும், மதிப்புரைகளையும் எடுத்துட்டேன்.

சிலவற்றை ஏற்றுக் கொள்வதில்லை

இன்னொருத்தர் போன் பண்ணினார். 'ஐயா புக்கை லேசா புரட்டிட்டு, பின்னாடி அட்டையில உங்க போட்டோ போட்டு 'ஆசிரியர் குறித்து'ன்னு எழுதப்பட்டுள்ள பகுதியில் 'இவர் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பல்வேறு சபைகளில் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படி சாட்சி, செய்தி கூறி வருகிறார்'னு எழுதியிருக்கிறதை பார்த்துட்டு புக்கை அப்படியே திருப்பிக் கொடுத்திடுறாங்கய்யான்னு சொன்னாரு. உடனே கர்த்தர்னு வர்ற இடத்தில் எல்லாம் அதை இறைவன்னு மாத்தி, 'சபையின்னு' வர்ற இடத்தை 'பல இடங்களிலும்' என்று மாத்தினேன். எதுவுமே, எந்த வார்த்தையுமே கூட நம்ம ஆண்டவரை அறிவிக்க, சுவிசேஷம் சொல்ல தடையா இருக்கப்பிடாது. ஒரு சில கிறிஸ்தவர்களும் போன் பண்ணினாங்க. 'ஐயா நீங்க முன்னாடி ஒரு தீவிர பக்தி வைராக்கியமுள்ள ஒரு இந்துவா இருந்தீங்க. இப்போ மாறிட்டீங்க. அதுக்காக நீங்க முன்னாடி கும்பிட்டுக்கிட்டு இருந்த அந்த படத்தை எல்லாம் போடணுமா? வேண்டாமே, பாக்கவே எப்படியோ இருக்கு. அதை எடுத்திடுங்கன்னு பலபேரு சொன்னாங்க. ஆனா நான் அதை எடுக்கலை. இப்படி பலர் பல ஒப்பீனியன் கொடுப்பாங்க. ஆர்வத்தில் சொல்கிறார்கள். நல்ல எண்ணத்தில் சொல்றாங்க. அதை நான் தப்பா எடுத்துக்கிடலை. எனக்கு என்ன? சுவிசேஷம் அளிக்க எது பிரயோஜனமா இருக்கோ அதை எடுத்துப்பேன். அதுதானே நமக்கு முக்கியம். அல்லேலூயா!

எங்க பாஸ்டர் செய்த ஒரு நல்ல காரியம்

நானும் எனது மூத்த மகன் கார்த்திக்கும் முதலில் 2001 ஜூன் மாதம் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் எடுத்து கிறிஸ்தவர்களாக மாறினோம். 2005 ஜனவரி 16 ஆம் தேதி ஊழியத்துக்கென்று சென்று விட்டேன். 3 1/2 ஆண்டுகள்தான் சபையில் விசுவாசியாக இருந்தேன். விசுவாசியாக இருந்த என்னை சீஷனாக்கி, ஊழிய வாஞ்சையையும் நான் பெற்றுக் கொள்வதற்கு நான் ஆரம்பத்தில் சென்ற சபையும், சபைப் போதகருமே காரணம் என்றால் அது மிகையாகாது. கிழக்கு தாம்பரம், சிட்லபாக்கம் பகுதியில் உள்ள **'மகிமையுள்ள சியோன் கிறிஸ்தவ சபை'**க்கு நாங்கள் சென்றவுடனேயே, அதன் பாஸ்டர் சாலமோன் ராஜா கிறிஸ்துவுக்குள் புதிதாக வந்த நாங்கள் கிறிஸ்துவில் பலப்பட வேண்டும் என்கிற எண்ணத்தில் ஒரு நல்ல காரியம் செய்தார். இதை புதிதாக சபைக்கு வரும் மக்கள் ஒவ்வொருவருக்கும் எல்லா சபை பாஸ்டர்களும் செய்யணும் என்பேன்.

புதிதாக வந்தவர்கள் கிறிஸ்துவில் பலப்பட்வேண்டும்

சபையில் வொர்ஷிப் நடத்திக் கொண்டிருந்த காலேஜ் புரபசர் சுரேஷ் ஜார்ஜ் என்பவரை அழைத்தார். 'பிரதர், திங்கள்கிழமை சாயங்காலம் நீங்க ஃபிரியா இருக்கீங்களா?' என்றார். ஆமா. சொல்லுங்க பாஸ்டர் என்றார். 'தாயப்பன் ஐயா வீட்டுக்கு திங்கட்கிழமை சாயங்காலம் நீங்க அங்க ஃபேமிலியோட போகணும். போயி ஒரு 1/2 மணி நேரம் மாத்திரம் இருக்கணும். அரசியல், சினிமா என்று எதுவும் பேசப்படாது. போயி ஒரு பாட்டுப் பாடணும். ஒரு வசனம் அல்லது சங்கீதம் வாசிச்சு கொஞ்சம் விளக்கம் சொல்லணும். ஒரு சாட்சியை சொல்லணும். அவங்களுக்காக ஜெபிக்கணும், வந்துடணும். அங்கே என்ன கொடுத்தாலும் சரி, காபி, டீ, பலகாரம் எது குடுத்தாலும் சரி, இப்பத்தான் சாப்பிட்டு வந்தேன். ஒரு கிளாஸ் தண்ணீ கொடுங்கன்னு மட்டும் வாங்கி குடிச்சிட்டு, இன்னும் கொஞ்ச நேரம் இருக்க மாட்டாங்களாங்கிற ஒரு ஏக்கத்தோடே நீங்க கிளம்பிடணும்னு கிளீயர் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்திட்டார்.

வாரத்தில் ஆறு நாட்களுக்கு ஆட்கள்

இப்படியே செவ்வாய்க்கிழமைக்கு ரெபெக்கா சிஸ்டர், புதன்கிழமைக்கு புஷ்பா சிஸ்டர், வியாழன் சத்தீஷ், வெள்ளி பாஸ்டரம்மா, சனிக்கிழமை சஞ்சீவி பிரதர் என வாரத்தில் ஆறு நாள் நல்லா ஜெபிக்கக் கூடியவங்களை நியமிச்சிட்டாரு. அதேபோல அவங்க தினமும் வருவாங்க. பேசுவாங்க, போவாங்க என்ன.. நாளாக நாளாக இந்த 1/2 மணி நேரம்கிறது மாத்திரம் 1½ அல்லது 2 மணி நேரம் ஆயிடுச்சு. அது எங்களுக்கும் சந்தோஷம். அவங்களுக்கும் சந்தோஷம். பாஸ்டரும் அடிக்கடி வந்து எங்களை பார்த்தார். ஒரு இரண்டு வருஷத்துக்கு முன்னாடி பாஸ்டர் ரெபக்கா சிஸ்டரை கேட்டிருக்கார். 'நீங்களும் ரொம்ப நாளா வீட்டுக்கு வரணும்னு கேக்குறீங்க. என்னாலதான் வர முடியலை. ஊழியம் பெருகிப் போச்சு இல்லயா. இன்னிக்கு அந்த பக்கம் வேற ஒரு ஜோலியா வர்றேன். அப்படியே நம்ம வீட்டுக்கும் வர்றேன். சாயங்காலம் வீட்ல இருப்பீங்களா? பிரதரும் வீட்ல இருப்பாரான்னு கேட்டிருக்கார். இல்ல இன்னிக்கு தாயப்பன் ஐயா வீட்டுக்கு போகணும்னு ரெபக்கா சிஸ்டர் சொல்லியிருக்காங்க. என்ன விஷயம்? ஏதாவது விசேஷமா? என்று கேட்டிருக்கிறார்.

ஒரு நல்ல கிறிஸ்தவ ஐக்கியம் தேவை

விசேஷம் ஒண்ணும் இல்லை. இன்னிக்கு செவ்வாய்க்கிழமை.

அதுதான்னு சிஸ்டர் சொல்ல, செவ்வாய்க்கிழமைக்கும் தாயப்பன் ஐயாவுக்கும் என்ன சம்பந்தம்னு பாஸ்டர் கேட்க, நீங்கதானே சொன்னீங்க செவ்வாய்க்கிழமை ஐயா வீட்டுக்கு போகச் சொல்லி என்று சிஸ்டர் சொல்லியிருக்காங்க. பாஸ்டர் 12 வருஷத்துக்கு முன்னாடி சொன்னதை அவர் மறந்துவிட்டார். ஆனா அது தொடர்ந்து இன்னிக்கு வரை நடந்துக்கிட்டு வருது. இன்னிக்கு எங்களைப் பாக்காம அவங்களால இருக்க முடியாது. அவங்களைப் பாக்காம எங்களால இருக்க முடியாது. அந்த அளவுக்கு ஒரு ஐக்கியம், உறவு எங்களுக்குள்ளே ஏற்பட்டுப் போச்சு. நாங்க கிறிஸ்துவுக்குள்ள இவ்வளவு சீக்கிரம் பலப்பட்டதற்கு காரணம் நான் சென்ற சபையும், சபைப் பாஸ்டரும்தான்.

3, 4 வருஷத்துக்கு மேலே சபையில இருக்கக் கூடாது

என்னைக் கேட்டா சபையில ஒரு விசுவாசி 3, 4 வருஷத்துக்கு மேலே விசுவாசியா இருக்கக் கூடாது. அதுக்குப்பிறகு ஏதாவது ஒரு ஊழியம் கண்டிப்பாக செய்யணும். கிராம ஊழியம், இல்ல ஆஸ்பத்திரி ஊழியம், இல்ல கைப்பிரதி ஊழியம், இல்லை தனி ஒரு பிரேயர் செல்லாவது ஆரம்பிச்சாகணும். 3, 4 வருஷத்தில் ஒரு விசுவாசியை ஒரு ஊழியக்காரனா நாம மாத்த முடியாதா? மாத்தி ஆகணும். நம்ம வீட்டு குழந்தைளை கடைசி வரைக்கும் ஒண்ணாம் கிளாசிலேயே உட்காத்தி வச்சுக்கிட்டு இருக்கோமா? இல்லையே. வருஷா வருஷம் படிக்க வச்சு பாஸ் பண்ண வச்சு அடுத்த கிளாஸுக்கு அனுப்புறோமே. சபையிலே விசுவாசியை மட்டும் கடைசி வரைக்கும் விசுவாசியாவே வச்சிருக்கணுமா? சீஷத்துல ட்ரெயினிங், மிஷனரி ட்ரெயினிங் கொடுக்கணும். ஆண்டவர் எல்லாருக்கும் சில தாலந்துகளை கொடுத்திருக்கிறார். அதை நாம கண்டுபிடிச்சு, ஊக்குவிச்சு, பொறுப்புகளை கொடுத்து சபை வளர்ச்சிக்கு, சுவிசேஷம் பரவ, தேவ ராஜ்யம் கட்டப்பட எடுத்து பயன்படுத்தியாகணும். இதை ஒவ்வொரு சபையும் செய்யணும். புதுசா வர்ற புற ஜாதி மக்களை சபை மக்கள் தத்து எடுத்துக்கிடணும். **'பவுல் நட்டான், அப்பெல்லோ நீர் பாய்ச்சினான். கர்த்தரோ விளையச் செய்தார்'**னு வேதத்தில் பாக்கிறோம் புதுசா வந்தவங்களை நீர் பாய்ச்சி, கிறிஸ்துவுக்குள்ள அவங்களை நிலைநாட்டணும். பலப்படுத்தணும். **'நான் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்'**னு ஆண்டவர் சொல்லியிருக்கிறாரே. அதை நாம செய்யணும்.

சாட்சி சீடி வெளியிட ஆண்டவர் ஆளை அனுப்பினார்

லாப நோக்கம் இல்லாம நாம ஆண்டவரோட ஊழியத்தை செய்யுற சமயத்தில் தேவன் எதையெல்லாம் எப்படி செய்யணுமோ, அதை செய்து முடிக்க எல்லா உதவிகளையும், ஆட்களையும் நமக்கு தருவார். இதுவரை எந்த புத்தகமுமே எழுதாத என்னைக் கொண்டு இத்தனை புத்தகங்களையும் எழுத வச்சாரு. என்னோட சாட்சியை சீடியாவும் வெளிக் கொண்டு வரணும்னு நினைச்சாரு போல. எனக்கு அந்த நினைப்பே இல்லை. நான் திருச்சி ஏலிம் அசெம்பிளி (பாஸ்டர் பீட்டர் கிளமெண்ட்) சபையில மூணு நாள் கன்வென்ஷன் பேசிக்கிட்டு இருந்தேன். அப்போ அந்த கன்வென்ஷன் சம்பந்தமான வால் போஸ்டரைப் பார்த்துட்டு மதுரையில காஸ்பல் கார்டன்னு ஒரு ரிக்கார்டிங் ஸ்டுடியோ வச்சு முன்னாடி இந்து தெய்வங்களின் பாடல்களை எல்லாம் ரிக்கார்டு செஞ்சு வெளியிட்டுக் கொண்டிருந்த ஒரு தீவிரபக்தி வைராக்கியமுள்ளவராக இருந்த ரவீந்திரன் என்கிறவர் இயேசுவை ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவராக மாறியவர் என்னோட சாட்சி புக்கை எப்பவோ படிச்சிட்டு இதை சீடியா வெளியிட்டா ரொம்ப நல்லா இருக்குமேன்னு நினைச்சிருக்காரு. திருச்சிக்கு ஏதோ ஜோலியா வந்தவர் அந்த மீட்டிங்கிற்கு வந்தார். மீட்டிங் முடிஞ்சப பிறகு என்னை மேடையிலே சந்திச்சு அறிமுகப்படுத்திக் கொண்டு இந்த சீடி விஷயத்தையும் சொன்னார்.

பாராட்டுகளை இந்த காதில் வாங்கி அந்த காதில் விட்டுடுவேன்

நீங்க மதுரைக்கு வந்தீங்கன்னா நான் எல்லாத்தையுமே ஃபிரியா செஞ்சு தந்துடுறேன். உங்க சாட்சி ரொம்ப நல்லா இருக்கு. இது பலரைத் தொடும், வாங்கய்யா என்றார். நான் சரி ஒகேன்னு சொல்லிட்டு அதை அப்பவே மறந்திட்டேன். மீட்டிங் முடிச்சப் பிறகு இப்படி பல பேர் வந்து பாராட்டுவார்கள். அதை நான் பெருசா எடுத்துக்கிறது இல்லை. சொல்றவங்க மனசு புண்படக் கூடாதேங்கிறதுக்காக லேசா சிரிச்சுக்கிட்டே தலையை மட்டும் ஆட்டிவிட்டு அதை அப்பவே மறந்துடுவேன். நம்ம ஞானத்தினாலயோ, திறமையினாலேயோ, எதுவும் நடக்கிற தில்லையே. இந்த புகழ், பாராட்டுக்களுக்கெல்லாம் உரியவர் அவர் ஒருத்தர் மாத்திரம் தானே. அதனால பாராட்டை எல்லாம் இந்தக் காதிலே வாங்கி அந்தக் காது வழியா விட்டுடுவேன்.

எல்லாவற்றையும் இலவசமாகவே செய்து கொடுத்தார்

ஒரு ஆறு மாசம் கழிச்சு, மதுரை நாகமலை புதுக்கோட்டையில் ஏ.ஜி. சபை சர்ச் வச்சு ஊழியம் செய்து செய்து கொண்டிருக்கிற பாஸ்டர் அலெக்ஸ் என்னை மூன்று நாள் கன்வென்ஷனுக்கு கூப்பிட்டிருந்தார். அந்த வால் போஸ்டரையோ, நோட்டீசையோ பார்த்திட்டு மிஸ்டர் ரவீந்திரன் அங்கேயும் வந்திட்டார். வந்து ரொம்ப கம்ப்பெல் பண்ணினார். பாஸ்டர் அலெக்ஸ் மூலமாகவும் பிரஷர் கொடுத்தார். சரி ஒகே வர்றேன்னு அலெக்சையும் கூட்டிட்டு அவர் ஸ்டுடியோவுக்கு போனேன். ஒரே டேக்குல எல்லாத்தையும் ரிக்கார்டு பண்ணினார். பாஸ்டர் அலெக்ஸே அந்த சீடிக்காக ஜெபமும் செய்தார். எங்கிட்ட பைசா காசு வாங்காம, ஃபிரியாவே எல்லாத்தையும் பண்ணிக் கொடுத்திட்டாரு. அது மாத்திரமல்ல, அந்த சீடியை கன்னடம், மலையாளம், இந்தியிலேயும் அவரே ஃபிரியா அதை ஆட்களை வச்சு டப் பண்ணியும் கொடுத்திட்டாரு. தமிழ்ல மாத்திரம் இந்த சீடி இதுவரை 8,75,000 காப்பி போயிருக்கு. கன்னடத்தில் 50,000 சீடியும், இந்தியில் 1 லட்சத்துக்கு மேலேயும், மலையாளத்தில் 40,000க்கு மேலேயும் போயி இதன் மூலமா ஆண்டவரோட நாமம் மகிமைப்பட்டுக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்தவ பாடல் / செய்தி மாத்திரம் ரிக்கார்டு செய்யும் காஸ்பல் கார்டன்

இந்தியில் டப் பண்றதுக்கு வடநாட்டில் இருந்து வந்திருந்த முத்து என்கிற ஒரு சகோதரரை (சகோ. அகஸ்டியன் ஜெபக்குமாரின் ஜெம்ஸ் ஊழியத்தில் உள்ளவர்) மூன்று நாட்கள் அவர் ஸ்டூடியோவிலேயே வச்சிருந்து, சாப்பாடு எல்லாம் கொடுத்து கடைசியில அந்த பையன் கையில் ரூ.5000ம் கொடுத்து எனக்கு அதை ஃபிரியாவே செஞ்சு கொடுத்திட்டார். அவர் இயேசுவை ஏத்துக்கிட்ட பிறகு இந்து சாமி பாட்டை ரிக்கார்டு பண்ணி வெளியிட பெரிய பெரிய ஜாம்பவான்களெல்லாம் முட்டி மோதிப் பார்த்துட்டாங்க. சாரி, நோன்னு சொல்லி வைராக்கியமா கிறிஸ்தவப் பாடல்கள், செய்திகளை மாத்திரம் ரிக்கார்டிங் செய்து வருகிறார். கர்த்தர் அவரையும், அவர் குடும்பத்தையும் அபரிமிதமாக ஆசீர்வதிச்சிருக்கிறார். இன்னும் எனக்கு ஒரு நல்ல நண்பராக, சகோதரனாக இருக்கிறார்.

நிறைய நாடக அனுபவம்

நான் எனது வாலிப வயசுல இந்திய விமானப் படையில் டில்லியில் ரொம்ப நாள் இருந்தேன். முதல்ல 1961லிருந்து 1969

வரைக்கும், அப்புறம் 1976 லேர்ந்து 1983 வரைக்கும் இருந்தேன். அப்போ தட்சிண பாரத நாடக சபா (டிபிஎன்எஸ்) என்கிற ஒரு அமெச்சூர் நாடகக் குழுவில் மிகவும் ஒரு ஆக்டிவ் மெம்பராக நிறைய நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பு பெற்றேன். ஏர்ஃபோர்சிலும் பொங்கல், பாரதியார் விழா, தமிழர் திருநாள் போன்ற விசேஷ நாட்களில் நாடகம், பல்கலை நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறேன். அப்போது முருகனைக் குறித்து பல்வேறு இடங்களில் 'நவீன வள்ளி திருமணம்' என்னும் ஒரு கதாகாலட்சேபமும் செய்திருக்கிறேன். அது காமெடியாகவும், பக்தி நிறைந்ததுவுமாகவும் இருக்கும்.

டில்லிகணேசை அறிமுகப்படுத்தினேன்

இந்த கதாகாலட்சேபத்தில் தான் பிரபல சினிமா நடிகர் டில்லி கணேஷையும் முதன் முதலாக அறிமுகப்படுத்தினேன். அப்போ அவர் டில்லியில நான் இருந்த ரேஸ் கோர்ஸ் கேம்ப்புலயே இருந்தார். எப்பவுமே ரொம்ப கலகலப்பா எல்லாரோடையும் ஜாலியா பேசி ஜோக் அடிச்சு கலாட்டா பண்ணிக் கொண்டிருப்பார். அவரை சுத்தி எப்பவுமே ஏழு எட்டு பேர் இருப்பாங்க. அந்த மாதிரி ஒரு அட்ராக்டிவ் கேரக்டர். அவரிடம் இருந்த இந்த விசேஷித்த தாலந்தை, திறமையை யூஸ் பண்ணணும்கிறதுக்காகவே நான் முதல்ல கதாகாலட்சேபத்தில பங்கு பெற அவரை கூப்பிட்டேன். முதல்ல ரொம்ப தயங்கினார். கொஞ்சம் என்கரேஜ் பண்ணி கூப்பிட்டேன். வந்தார். சிலதுகளை சொல்லிக் கொடுத்தேன். கப்புன்னு புடிச்சுக்கிட்டார். பிளஸ் அவரோட, அவருக்குள்ள இருந்த இயல்பான திறமை ஆட்டோமெடிக்கா, வெளியிலே வந்தது. பிறகு பல நாடகங்களிலேயும் அவரை பயன்படுத்தினேன். அது அவரை பண்படுத்தியது.

நன்றி மறவா நல்ல கணேஷ்

ஏர்போர்சை விட்டு வெளியே வந்து முதலில் காத்தாடி ராமமூர்த்தியின் நாடகங்களில் நடிச்சார். அதுல 'பட்டிணப் பிரவேசம்'னு ஒரு நாடகம். அந்த நாடகம் கணேஷின் திறமையை வெளிக் கொண்டு வந்தது. அதை கே.பாலசந்தர் பார்த்திட்டு அந்த நாடகத்தையே படமாக எடுத்தார். இதில் கணேஷ் முக்கிய ரோலில் நடித்தார். அவரிடம் இயற்கையாகவே இருந்த திறமை அவரை ஒரு நல்ல காமெடி நடிகராகவும், குணச்சித்திர நடிகராகவும் உருவாக்கியது. எவ்வளவோ உயர்ந்த நிலைக்கு சென்றாலும் அவரை ஆரம்பத்தில் ஏற்றி விட்ட இந்த ஏணியை மறக்காமல் நிறைய இடங்களில் என்னைப் பற்றி நன்றியோடு கூறியதை பலர்

என்னிடமே கூறியிருக்கின்றனர். நன்றி மறவா நல்ல நண்பர், சகோதரர் அவர்.

இந்துக்கள் அறியாம ஆராதிக்கிறது இயேசுவையே

என்னுடைய ஊழியத்தில் சபைக்கும், சபை மக்களுக்கும் மிகவும் பயனுள்ள, பலப்படுத்துகிற பல தேவ வார்த்தைகளையே செய்தியாக் கொடுப்பேன். பாவம், பரிசுத்தம், ஜெபம், வேத வாசிப்பு, சாட்சியாக வாழ்தல், ஞானஸ்நானம், தசம பாகம், காணிக்கை, ஆண்டவரோட வருகைக்கு ஆயத்தமாகுதல், சபை ஒழுங்குக்கு கட்டுப்பட்டு நடத்தல், டயத்துக்கு வருதல், பயபக்தி, நல்நடக்கை, போதகரின் வார்த்தைக்கு கீழ்படிதல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசிங்கிப்பேன். இது அனைத்துக்கும் மேல புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை அறிவித்தலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, ஒவ்வொருவரும் கண்டிப்பாக ஆத்தும ஆதாயம் செய்யனும் என்று இன்சிஸ்ட் பண்ணுவேன். இந்துக்களுக்கு இந்துக்களைப் போல சொல்லி, இந்து மத வேதங்களில் சொல்லப்பட்டிருப்பது இயேசுவையே என்று ஆதாரபூர்வமா நிரூபிச்சு சொல்லச் சொல்லுவேன். இவங்க அறியாம ஆராதிச்சுக்கிட்டு இருக்கிறது இயேசுவையும், பிதாவையும், பரிசுத்த ஆவியையுமே. ஆனா வேற பேர்ல உருவகப்படுத்தி ஆராதிக்கிறாங்க. ஆனா அது டூப்ளிகேட்.

கதாகாலட்சேப சீடிக்கு டில்லிகணேசைக் கூப்பிட்டேன்

ஒரிஜினலைச் பிடிச்சாத்தான் பரலோகம் போக முடியும்னு சொல்லுறதை ஏன் ஒரு கதாகாலட்சேபமாக பண்ணப்பிடாதுன்னு நெனச்சு அதுக்கு ஒரு ஸ்கிரிப்ட் தயார் பண்ணினேன். அதுக்கு டில்லி கணேசைக் கூப்பிட்டேன். ஒரு தப்பு பண்ணிட்டேன். இந்த சப்ஜெக்ட்டையும், கான்செப்ட்டையும் அவர்கிட்டே சொல்லிட்டேன். எல்லாத்தையும் கேட்டுட்டு 'இதுல என்னை இன்வால்வ் பண்ணாதீங்க அண்ணா. வேற என்ன வேணும்னாலும் செய்யச் சொல்லுங்க. செய்யுறேன். ஆனா இது வேண்டாம். என்னை தப்பா எடுத்துக்காதீங்க' என்று ரொம்ப பொறுமையா சொன்னார். அவரின் நிலைமை எனக்குப் புரிந்தது. பிராமின் அசோசியேஷன் பிரசிடெண்ட், ஐயப்பன் கோவிலுக்கு மாலை போடுற குருசாமி. அவர் எப்படி இந்த சப்ஜெக்ட்டுல ஈடுபட முடியும்? புரிஞ்சுக்கிட்டேன். ஒகே நோ புராளம்னு சொல்லிட்டேன்.

டிவி ராஜா மூலம் பாம்பே கண்ணன்

புது ஆட்களை இதுக்கு ட்ரெயின் பண்றதுன்னா நாளாகும்.

எனக்கு டைமும் இல்லை. அதனால டிராமா அனுபவம் உள்ள, நடிக்கத் தெரிந்த இரண்டு பேர் கிடைச்சா ரொம்ப நல்லா இருக்கும். லேசா சொன்னாலே புரிஞ்சுக்கிட்டு செஞ்சுடுவாங்கன்னு என்னோட டிராமா குரூப்ல நடிச்ச டிவி ராஜா என்பவர்கிட்ட (இவர் ஏர்போர்ஸுக்குப் பிறகு சென்னை தூர்தர்ஷன்ல வொர்க் பண்ணினவர். நாடகம், சினிமா, டிவி என்று இந்த துறையில் இன்னும் தொடர்பு உள்ளவர்) நோ புராப்ளம் அண்ணேன்னு பாம்பே கண்ணனின் நம்பரைக் கொடுத்தார். அவரை போனிலும், நேரிலும் சந்தித்து சொன்னேன். சரின்னு சொல்லிட்டாரு. இதுக்கு ஊடால கோடம்பாக்கத்தில் டிஜிடல் ஸ்டுடியோ வச்சிருக்கக் கூடிய மிஸ்டர் எட்வர்டு ராஜுக்கு போன் பண்ணினேன். அவரும் ஒரு நடிகர். பிரஜாபதி என்கிற மிகப் பிரம்மாண்டமான நாடகத்தில் நடிப்பவர். என்னைப் பற்றி ஏற்கனவே அறிந்தவர். நான் இந்த புராஜக்ட்டை சொன்ன உடனேயே 'வாங்க சார். ரிக்கார்டு பண்ணித் தந்துடுறேன்'னு சொல்லிட்டாரு. பாம்பே கண்ணன் ஒரு சக நடிகரோடு கரெக்டா அந்த ஸ்டுடியோவுக்கு வந்துட்டாரு.

பாம்பே கண்ணன் மறுத்து விட்டார்

ரிக்கார்டிங்கிற்கு முன்னாடி நான் அவங்க கிட்டயிருந்து என்ன மாதிரியான ஒரு நடிப்பை எதிர்பார்க்கிறேன்னு சொல்லிடலாம்னு ஒரு ரிகர்சல் பார்த்துடலாமேன்னு ஸ்கிரிப்ட் முழுக்க ஒரு தடவை ரிகர்சல் பார்த்தோம். அவ்வளவுதான். கண்ணன் சொல்லிட்டாரு. சாரி சார். இது எனக்கு உடன்பாடு கிடையாது. நீங்க வேற யாரையாவது வச்சு பண்ணிக் கோங்கன்னு சொல்லிட்டு கிளம்பிட்டாரு. நான் ஃபெடப் ஆகிட்டேன். ரிக்கார்டு பண்றதுக்கு இப்படி ஒரு தடங்கலான்னு நொந்துட்டேன். ஆண்டவரே, நீர்தானப்பா இதை வாய்க்கப் பண்ணனும்னு ஜெபம் பண்ணினேன். எட்வர்ட் ராஜே சொன்னாரு. சார் நாளைக்கு ரிக்கார்டிங் வச்சுக்கிடலாம். நீங்க கவலைப்படாம போங்க. நான் ரெண்டு பேரை ரெடி பண்ணி வச்சிடுறேன். நாளைக்கு வந்திடுங்கன்னார். பிரதர், சப்ஜெக்ட் தெரிஞ்சவுடனேயே மாட்டேன்னு சொல்லுவாங்களேன்னு சொன்னேன். சப்ஜெக்ட்டை முழுசா சொன்னாத்தானே மாட்டேன்னு சொல்லுவாங்க. சொல்ல வேண்டாம். ஒவ்வொரு பக்கமா ஒரு தடவை வாசிச்சிட்டு ரிக்கார்டிங் பண்ணிடுவோம். கவலைப்படாதீங்க. சப்ஜெக்ட் ரொம்ப நல்லா இருக்கு. இது ஒரு பெரிய கலக்கலா இருக்கும். இதை எப்படியாவது நான் ரெக்கார்டு பண்ணித் தர்றேன். நாளைக்கு நீங்க ஜெபத்தோடு வாங்கன்னாரு.

சைவமும், வைஷ்ணவமும் கிறிஸ்தவமும் சீடி உருவானது

மறுநாள் காலையிலேயே நான் ஜெபத்தோடே போனேன். ரெண்டு பேரை ரெடி பண்ணி வச்சிருந்தாரு. அவர் சொன்ன மாதிரியே ஒவ்வொரு பக்கமா ஒரு தடவை படிச்சுட்டு உடனே ரிக்கார்டிங் பண்ணினோம். கிடுகிடுன்னு இரண்டு, மூணு மணி நேரத்தில ரிக்கார்டிங் முழுவதும் முடிஞ்சுடுச்சு. அவங்களும் பிராமின்ஸ்தான். ஆனா என்ன ரிக்கார்டு பண்றோம்னு அவங்க முழுமையா புரிஞ் சக்கிடறதுக்கு முன்னாடியே ரிக்கார்டிங் முடிஞ்சு போச்சு. அப்படி ரிக்கார்டிங் ஆனதைத்தான் **'சைவமும் வைணமும் கிறிஸ்தவமும்'** என்கிற அந்த கதாகாலட்சேப சீடி. ரொம்ப வித்தியாசமான ஒரு செய்தியை ஆதாரத்தோட ஒரு வித்தியாசமான முறையில் சொல்லப்பட்ட ஒரு சத்தியம் அது. முடிஞ்சப் பிறகு அந்த ரெண்டு பேருமே சொன்னாங்க. ரொம்ப வித்தியாசமான ஒரு செய்தியை நல்ல ஆதாரத்தோட சொல்லியிருக்கீங்க. நிறையப் பேருக்கு இது தெரியாது. ஆனா இது பலரின் கண்களைத் திறக்கும்னு மனதார பாராட்டினாங்க. இன்னிக்கு பல இடங்களில் அந்த சீடி ஒரு கலக்கு கலக்கிட்டு இருக்குது.

இந்த சீடியின் மூலமாக அநேகர் தொடப்படுகின்றனர்

முதல்ல அதுக்கு ≡ ! = + ங்கிற மாதிரி ஒரு கவர் டிசைன் போட்டிருந்தேன். அது சில கிறிஸ்தவங்களுக்குப் பிடிக்கலை. அதுனால அந்த டிசைனை மாத்தி இப்போ இருக்கிற டிசைனைப் போட்டேன். 3½ லட்சம் காப்பிக்கு மேலே போயிடுச்சு. வெறும் ஆடியோ சீடியாக இருந்த அந்த சீடியை லண்டன்ல இருக்கக் கூடிய சகோதரர் ராபர்ட்ஸ் என்பவர் அதுக்கு வீடியோ எஃபெக்ட் கொடுத்திட்டாரு. இந்த சீடியின் மூலமாக பலரின் கண்கள் திறக்கப்படுகின்றன. இந்துக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க இதுவும் ஒரு உகந்ததாக கருதப்படுகிறது. இதையும் 10 ரூபாய்க்கே விற்கிறேன். இந்த ஜிஎஸ்டிக்குப் பிறகு எல்லா விலையும் ஏறி காலி சீடி ரேட்டு, இதை பாம்பேயில ஸ்டாம்பரிங் பண்ண, பிறகு டிசைன் போட, பவுச் தயார் செய்ய, சீடியை பவுச்சுக்குள் போட என்று எல்லாமே ரேட் ஏறியதால் ஒரு சீடிக்கு 12 ரூபாய்க்கும் அதிகமாக ஆகிறது. இருந்தாலும் அதே பழைய ரேட்டான 10 ரூபாய்க்கே கொடுக்கிறேன். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது. அநேகர் இதன் மூலமாக இரட்சிக்கப்படுகின்றனர். அல்லேலூயா!

சகலத்தையும் இரட்டிப்பாக திரும்பத் தருவார் ஆண்டவர்

நம்ம ஆண்டவர் ஒருபோதும் கடனாளியாக இருக்க மாட்டாரு.

ஆண்டவருக்காக நாம என்ன செஞ்சாலும் அதை பன்மடங்கா திருப்பித் தராம இருக்கவே மாட்டாரு. ஆண்டவரோட ஊழியத்துக்குன்னு கொடுத்து யாருமே தரித்திரர் ஆனது கிடையாது. என்னோட புஸ்தகங்கள் எல்லாமே 120 பக்கங்களுக்கு குறைவாத்தான் இருக்கும். அதுக்கு அதிகமானா, அதை இரண்டு பாகமாக பிரித்து விடுவேன். ஒரிசா மொழியில் என்னுடைய சாட்சி புக்கை ஒருவர் மொழிபெயர்த்தார். 168 பக்கம் ஆயிடுச்சு. ஒடிசா புக்கு ஒடிசாவில் மட்டும்தான் போகும். வேற யாரும் அதை வாங்க மாட்டாங்க. அதுனால இனிஷியலா முதலில் ஒரு 2000 காப்பியைத்தான் போட்டேன்.

பிரிண்டர் சொன்னார்: 4 பக்க போட்டோவோட 168 பக்கம் 2000 காப்பி பிரிண்ட் பண்ண ஒரு புக்குக்கு ரூ.15.50 ஆகும். இங்கேருந்து கட்டக் அனுப்ப ரூ.2 ஆகும். ஆக 15.50 + 2 = 17.50 ரூபாய் ஆகும் என்றார். நன்கொடை ரூ.20/–ன்னு போட்டிடவான்னு பிரிண்டர் என்னிடம் கேட்டார். ‘நோ, 10 ரூபாய்ன்னு போடு’ன்னு சொன்னேன். அப்போ ஒரு புக்குக்கு நஷ்டம் ரூ.7.50 ஆகும். 2000 காப்பிக்கு ரூ.15,000 உங்களுக்கு நஷ்டம் ஆகும்னு சொன்னாரு. நஷ்டத்தைப் பத்தி நீங்க பேசாதீங்க. எல்லாம் ஆண்டவருக்கு தெரியும். அவர் என்ன கல்லா, மண்ணா தெரியாம இருக்க? 10 ரூபாய்னு போடுன்னு காலையிலதான் சொல்லி இருக்கேன். ஒருத்தர் சாயங்காலம் வந்து 20,000 ரூபாய்க்கு செக் கொடுக்கிறார். அடுத்த நாள் ஒருத்தர் வந்து 10,000 ரூபாய்க்கு செக் கொடுக்கிறார். எனக்கு நஷ்டம் ரூ.15,000. ஆண்டவர் 30,000 ரூபாயாகத் திருப்பிக் கொடுத்திட்டாரு.

ஆண்டவர் கடனாளியாக இருக்க மாட்டார்

அடுத்த தடவை அதே புக்கை நான் பிரிண்ட் பண்ணும்போது அதே செலவு ஆச்சு. அப்போ நான் நாகர்கோயில்ல 3 நாள் கன்வென்ஷன் பேசிக்கிட்டு இருக்கேன். என் செல்போனில் ஒரு எஸ்எம்எஸ் வருது. என்னோட அக்கௌண்டில் ரூ.20,000 கிரிடிட் ஆகி இருக்குன்னு. எனக்கு ஆச்சரியம். 20,000 ரூபாய் நம்ம அக்கௌண்ட்டில் கிரிடிட் பண்ற அளவுக்கு நமக்கு டிரான்சாக்ஷன் ஒண்ணும் இல்லையே. யார் போட்டான்னு என்னோட சன் கார்த்திக்கு போன் பண்ணி கேக்குறேன். நம்மோட ஊழியத்துக்குன்னு அண்ணா நகர்லேர்ந்து ஜோசப்னு ஒருத்தர் 20,000 ரூபாய் செக் போட்டிருக்கிறாருன்னு சொன்னான். அல்லேலூயா! ஆண்டவர் ஒரு நாளும் கடனாளியா இருக்கவே மாட்டாரு. ஆமென்.

இதுவரை இவ்வளவு கொடுங்கன்னு கேட்டதே இல்லை

இதுவரைக்கும் நான் போற சபைகள்ல எனக்கு இவ்வளவு காணிக்கை கொடுக்கணும், ஏ.சி. ரூம் போடுங்க. ஏசி கார் கொடுங்கன்னு கேட்டதே கிடையாது. நிறையப் பேரு தயங்கித் தயங்கி எவ்வளவு காணிக்கைன்னு கேட்டிருக்காங்க. நான் ஒப்பனா அவங்ககிட்டே சொல்லி யிருக்கேன். இதுவரைக்கும் நான் யார்கிட்டேயும் இவ்வளவு கொடுங்கன்னு கேட்டதும் கிடையாது. கேட்கப் போறதும் கிடையாது. நீங்க எவ்வளவு கொடுக்குறீங்களோ அது உங்களுக்கு ஆசீர்வாதம். ஏன்னா இது எல்லாமே ஊழியத்துக்குத்தான் போகுது. எனக்கு பென்ஷன் வருது. அது போதும் எனக்கு என்று கூறுவேன். ரொம்ப ரொம்ப அதிகமா கொடுக்கிறவங்களும் இருக்காங்க. கம்மியா கொடுக்கிறவங்களும் இருக்காங்க. அதிகமா கொடுத்திருக்காங்கன்னு சந்தோஷப்படவும் மாட்டேன். கொறைச்சலா கொடுத்திருக்காங்களேன்னு நான் வருத்தப்பட்டதும் கிடையாது. சில கிராமத்து சபைகளுக்குப் போயி நானே கொடுத்திட்டு வந்திருக்கேன். ஹோட்டல்ல கூட ரூம் போட வேண்டாம். உங்க வீட்லயோ அல்லது ஒரு விசுவாசி வீட்லயோ ஒரு ரூமை கொடுத்தீங்கன்னா போதும்னு சொல்லுவேன். கார் வேண்டாம். பைக்கிலயே கூட்டிட்டுப் போங்கன்னு சொல்லுவேன். சாப்பாடெல்லாம் ரொம்ப சிம்பிள்தான். சிக்கன், கறி, மீனுன்னு போடாதீங்கன்னு சொல்லுவேன். யாருக்கும் எந்த சிரமமும் கொடுக்க மாட்டேன்.

காணிக்கையைத் திருப்பிக் கொடுத்துட்டேன்

ஒரு டைம் ஒரு ஊர்ல ஒரு சிஎஸ்ஐ சபையில என்னை மூணு நாள் மீட்டிங்கிற்கு கூப்பிட்டிருந்தாங்க. நல்ல பெரிய சபை. 1500 – 1800 பேர் இருக்கிற சபை. 6 மீட்டிங் நடத்தினாங்க. ஆறு மீட்டிங்கிலயும் காணிக்கையை பை நிறைய எடுத்தாங்க. அங்க இருந்த கெஸ்ட் ஹவுஸிலேயே தங்கி இருந்தேன். ரொம்ப நல்லபடியாகவே கவனிச்சுக்கிட்டாங்க. கடைசியில காணிக்கை கொடுத்தாங்க. நான் வாங்கிட்டு ரூமுக்கு வந்து பார்த்தா அதுல 2000 ரூபாய் இருந்தது. எனக்கு பக்குனு எப்படியோ ஆயிடுச்சு. பெரிய சபை. 6 வேளையும் காணிக்கை எடுத்துட்டு 2000 ரூபாயை கொடுத்ததை பார்த்து எனக்கு எரிச்சல் வந்திடுச்சு. இதுமாதிரி எனக்கு எப்பவும் ஆனதே கிடையாது. ஃபீல் பண்ணினதும்

கிடையாது. கிளம்பி கார்ல திரும்பி போகும்போது கேட்டுக்கு பக்கத்திலயே ஐயரு வீடு இருந்தது. போனேன். ஐயரு கையில அந்த 2000 ரூபாயை திருப்பிக் கொடுத்தேன். சாரிய்யா... இதை என்னோட காணிக்கையா சபைக்கு வச்சுக்கோங்க. நான் சோத்துக்கு வழியில்லாம இந்த ஊழியத்துக்கு நான் வரலை. தயவு செய்து ஊழியக்காரங்களை இப்படி கேவலப்படுத்தாதீங்கன்னு சொல்லிட்டு விருட்டுன்னு வந்திட்டேன். பின்னாடியே அவர் வந்து ஐயா இது கமிட்டியோட தீர்மானம். இதுல நான் தலையிட முடியாதுன்னார். உங்க கமிட்டி ஆளுங்க கிட்டயே இதை திருப்பிக் கொடுத்திடுங்கன்னு சொல்லிட்டு நான் வந்துட்டேன்.

காணிக்கைக்காகவா ஊழியம் செய்யுறோம்?

இதுவரைக்கும் நான் இப்படி நடந்துக்கிட்டதே இல்லை. ஏன் செஞ்சேன்னு எனக்குப் புரியலை. நான் செஞ்சது ரைட்டா தப்பான்னு எனக்குப் புரியலை. ஆண்டவரோட ஊழியக்காரனான நம்மளை இப்படி கேவலப்படுத்திட்டாங்களேங்கிற ஒரு ஃபீலிங் மட்டும்தான் இருந்துச்சு. இதுவரை இல்லாத இந்த எண்ணத்தை சாத்தான் இப்ப கொண்டு வந்துட்டான். மத்த சில ஊழியக்காரங்க டிமாண்டு பண்றது போல இனி நாமும் டிமாண்ட் பண்ணலாமான்னு எனக்குள்ள ஒரு நினைப்பு. அப்படி கேக்கலாமா வேண்டாமா? இதுவரையும் நாம் கேட்டதில்லையே. நாம இந்த காணிக்கைக்காகவா ஊழியம் செய்யுறோம்? இல்லையே என்று எனக்குள்ளே ஒரே போராட்டம். ஆண்டவர்கிட்டே கேக்குறேன். ஆண்டவரே, இவ்வளவு நாளும் இல்லாத ஒரு ஃபீலிங் இப்போ எனக்கு வந்திருக்கு. எனக்கு ஒரே குழப்பமா இருக்கு. எனக்கு ஒரு நல்ல வழியை காட்டும்னு ஜெபிச்சேன்.

நீங்க நீங்களாகவே இருங்க

அன்னிக்கு சாயங்காலமே நான் பெரிதும் மதிக்கக் கூடிய ஒரு ஆவிக்குரிய தகப்பன் விக்டர் சுவாமிதாஸ் என் வீட்டுக்கு வந்தாரு. ஆண்டவரா பார்த்து அவரை அனுப்பிச்சிட்டாரு. அவர்கிட்டே என்னோட இந்த புராபளத்தை சொன்னேன். ரொம்ப பொறுமையா, எல்லாத்தையும் கேட்டாரு. எம்மேல ரொம்ப அதிகமான அன்பும், பாசமும், மதிப்பும் உள்ளவர் அவர். ‘உங்க ஃபீலிங் எனக்குப் புரியுது. நானே சில தடவை இது மாதிரி ஃபிலிங்கில மாட்டிக்கிட்டு நிம்மதி இழந்திருக்கேன். இது சாத்தான் கொண்டு வர்ற உணர்வு.

அதுக்கு சில ஊழியக்காரங்க விழுந்து போயிட்டு, டிமாண்ட் வைக்கிறாங்க, வேண்டாம். உங்களைக் குறிச்சு ஃபீல்டுல ரொம்ப நல்ல பேரு இருக்கு. லாப நோக்கம் இல்லாம புத்தகங்களையும் சீடிக்களையும் ரொம்ப மலிவு விலைக்கு கொடுக்கிறாரு. அவர் கிட்ட எந்த ஒரு டிமாண்டுமே கிடையாது. ரொம்ப சிம்பிள். இருக்கிற எடத்துல அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு ஊழியம் செய்வாரு. அப்படீன்னு உங்களை பத்தி நெறைய பேரு எங்கிட்டயே சொல்லி இருக்காங்க. உங்களுக்கு இந்த நல்ல பேரு இருக்கிறது சாத்தானுக்குப் பிடிக்கலை. அதுதான் இதுமாதிரி ஒரு எண்ணத்தை கொண்டு வந்திருக்கான். வேண்டாம். நீங்க நீங்களாகவே இருங்க. அப்படியே இருங்க. எந்த டிமாண்டும் வைக்காதீங்க. இதுமாதிரி ஃபீலிங்கும் வேண்டாம். எல்லாத்தையும் கர்த்தர் பார்த்துப்பார். உங்க தேவைகளையும் அவர் சந்திப்பார்'ன்னு சொல்லி அட்வைஸ் பண்ணி, ஜெபமும் பண்ணினார். அதுக்குப்புறம்தான் எனக்கு ஒரு அமைதி, நிம்மதியே வந்துச்சு. பிசாசு நம்ம நிம்மதியை எப்படி எல்லாம் கெடுக்கிறான்னு பார்த்தீங்களா? எமகாதகப் பய அவன்.

கைநிறைய காணிக்கை கொடுத்தார்

ஒரு சமயம் திருக்கழுக்குன்றத்தில் ஒரு சபையில என்னை கூப்பிட்டிருந்தாங்க. ஒரு சின்ன சபை. ஓலைக் குடிசைதான். கூரை மேல ஓட்டை தெரிகிறது. மழை பெஞ்சா உள்ளே தண்ணி நிக்கும். மண் தரை. ஒரு டாமரின் கூட இல்லை. ஆண்டவர் அழைச்சிட்டாரேன்னு இருந்த ஒரு பெர்மனென்ட் வேலையையும் விட்டுட்டு, மனைவி, ரெண்டு புள்ளைங்களோட அங்க வந்து ஒரு சபையை ஆரம்பிச்சிட்டாரு. ஒரு 40, 50 பேரு இருந்தாங்க. எல்லாம் சுத்துப்பட்டி கிராமத்தில உள்ளவங்க. படிக்காத பாமர மக்கள். ஆனா ரொம்ப ஆர்வமா வந்திருந்தாங்க. காணிக்கை எடுத்தாரு. எல்லாரும் 1 ரூபாய் 2 ரூபாய், 5 ரூபாய்ன்னு காசா டொக்கு டொக்குன்னு காணிக்கை பெட்டியில போடுறாங்க. ஒண்ணு ரெண்டு பேரு நோட்டா போட்டாங்க. மீட்டிங் முடிஞ்சது. பாஸ்டர் காணிக்கை பெட்டியைத் திறந்து அதுல இருந்த எல்லா காசையும் எண்ணாமல் அப்படியே வாரி என் கையில் கொடுத்தாரு. ஐயா என்னால முடிஞ்சது இவ்வளவுதான். தப்பா நெனச்சுக்காதீங்கன்னு கொடுத்தாரு. நான் 'ஐயா வேண்டாம். நீங்களே ஊழியத்துக்கு வச்சுக்கோங்க'ன்னு சொன்னேன். இல்லைங்கய்யா, கொடுத்தா

எனக்கு ஆசீர்வாதமய்யா. பிளீஸ் வாங்கிக்கோங்க என்று ரொம்ப கெஞ்சினார், கலங்கினார்.

கஞ்சி காய்ச்சி கொடுக்கக் கூட காசு இல்லைய்யா

சரி கொடுங்கன்னு கை நீட்டி வாங்கினேன். ஜெபிச்சேன். காணிக்கை பெட்டியில அதை அப்படியே கொண்டு போயி போட்டேன். என் பையில இருந்து ஒரு அமவுண்ட்டும் சேர்த்து பெட்டியில போட்டுட்டு, கொஞ்சம் புத்தகம், சீடிக்களையும் ஃபீரியா கொடுத்தேன். அவர் கண் கலங்கிடுச்சு. ஐயா ரொம்ப கஷ்டமய்யா. ரொம்ப தூரத்தில் இருந்தெல்லாம் வர்றாங்க. 7, 8 கிலோ மீட்டர் நடந்து வர்றாங்க. பஸ் வசதி கிடையாது. 9 மணி சர்வீசுக்கு காலையில ஒரு 6 மணிக்கு அவங்க கிளம்பினாத்தான் அவங்க இங்க 9 மணிக்குள்ள வர முடியும். அதுனால காலையில எதுவும் சாப்பிடாமலேயே வருவாங்க. 11.30க்கு சர்வீஸ் முடிஞ்சப் பிறகு மறுபடியும் 7, 8 கிலோ மீட்டர் நடந்து அவங்க ஊருக்கு போயி அப்புறமா சமைச்சு சாப்பிடணும். ஒரு 2, 3 கிலோ அரிசி இருந்தா கஞ்சி காய்ச்சியாவது இவங்களுக்கு ஊறுகாயோடு கொடுத்திடுவேன். அதுக்கு கூட வழி இல்லையா. ஒரு 80, 85 பேரு வந்துக்கிட்டு இருந்தாங்க. சிபிஎம் காரங்க பிரியாணி போடுறேன்னு சொல்லி 20பேரை கழட்டிட்டு போயிட்டாங்கன்னு சொல்லி கண்கலங்கினார்.

கிராம சபைகளை ஆதரிக்கணும்

டவுன்ல இருக்கிற சபைகள்ல கொஞ்சம் பேரு வந்தாலும் பரவாயில்லை. ஏதோ காணிக்கை, தசம பாகம்னு வந்திடும். ஆனா கிராமத்தில இருக்கிற சபைகள்ல கூட்டம் அதிகமா வந்தாலும் காணிக்கை அதிகம் வராது. எக்ஸ்ட்ராவா ஒரு 1/2 கிலோ கத்திரிக்கா, 4 முருங்கைக்காய், ஒரு சுரக்காய்ன்னு தோட்டத்தில் விளைஞ்சதை கொண்டு வந்து கொடுப்பாங்க. பாவம் ஏழை பாளைங்க. வேலை வெட்டி ஒண்ணும் கிடையாது. கொஞ்சம் வயல் வேலை, காட்டு வேலை, கூடை பின்னுதல் போன்ற ஒரு சில வேலைதான் இருக்கு. இண்டஸ்ட்ரி எதுவும் கிடையாது. கொஞ்ச பேரு டவுன்ல வேலை பாக்குறாங்க. அங்கேயே தங்கிடுறாங்க. எல்லா இண்டஸ்ட்ரியையும் சிட்டியில வச்சு தொலைச்சுடுறாங்க. கிராமப்புறங்கள்ல சுத்தமா வேலையில்லை. இவங்களுக்காக நாம எல்லாம் ரொம்ப ஜெபிக்கணும். கிராமப்புற சபைகளை நாம சப்போர்ட்

பண்ணனும். வட இந்தியாவுல கஷ்டப்படுற மெஷினரிகளை நாம சப்போர்ட் பண்ணனும்.

கல்வாரி ஜெபக்குழுவில் இணைப்பு

இந்த வயதான காலத்திலேயும் தேவன் என்னை பல மாநிலத்துக்கும் அனுப்புகிறார். கேரளா, ஆந்திரா, குஜராத், மகாராஷ்டிரா, கர்னாடகா என்று. கர்னாடகாவிலுள்ள 30 மாவட்டங்களுக்கும் என்னை பெங்களூரில் உள்ள கல்வாரி யுனைட்டெட் பிரேயர் ஃபெல்லோஷிப் கர்னாடகாவின் இரட்சிப்பிற்காகவும், அந்த மாவட்டத்தின் இரட்சிப்பிற்காகவும் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மூன்று நாட்கள் உபவாசம் நடத்தி வருகின்றனர். இதுவரை 15 மாவட்டங்களில் நடத்தி விட்டனர். செய்தி கொடுக்க என்னை அழைப்பார்கள். வொர்ஷிப், ஜெபம், எல்லாம் அவங்களோடது. செய்தி என்னோடது. ஒவ்வொரு டிஸ்ட்டிரிக்ட்லேயும் 10 ஜெப வீரர்களை எழுப்பி, காலையில தினமும் 5 மணி முதல் 6 மணி வரை ஜெபிக்க பிரேயர் பாயிண்டுகளையும் கொடுத்து காலை 4.30, 4.45க்கு டெலிபோன் செய்து எழுப்பி விட்டு விடுவார்கள். இப்படி 30 மாவட்டத்திலும் 10, 10 பேர், அப்போ 300 பேர் ஆகுது இவங்க எல்லாரும் ஆளுக்கு 3 பேரை காலை ஜெபத்துக்கு தயார் பண்ணி ஜெபிக்க வைக்கணும். அப்போ 3 x 300 = 900 பேர் ஆகுது. அப்புறம் அவங்க ஆளுக்கு மூணு பேர் என்று இப்படியே பலுகிப் பெருகி ஒரு ஜெப சேனையை உருவாக்க வேண்டும். இப்படி ஒவ்வொரு ஊர், தாலுகா, மாவட்டம், மாநிலம் முழுக்க என்று உருவானால் நம்ம மாநிலம் கர்த்தருக்கு சொந்தமாகாதா? இப்படியே ஒவ்வொரு ஸ்டேட்டிலேயும், நம்ம தமிழ் நாட்டிலேயும் செஞ்சா நம்ம தேசம் சந்திக்கப்படாதா? கண்டிப்பா ஒரு பெரிய எழுப்புதலை தேசத்தில் காண முடியும். அந்த தரிசனத்துடன் இந்த கல்வாரி ஜெபக்குழு செயல்பட்டு வருகிறது. இதில் தேவன் என்னையும் இணைத்திருக்கிறார்.

ஞானஸ்நானத்தில் நம்பிக்கை இல்லை

ஒருமுறை என்னை சேலத்தில் இருக்கும் ஊழியர் ஜான் வெஸ்லி என்னை மூன்று நாள் மீட்டிங்கிற்கு அழைத்திருந்தார். அதில் வாழப்பாடி என்கிற ஒரு ஊரிலும் பப்ளிக் மீட்டிங் பேச ஏற்பாடு செய்திருந்தார். அவர் வீட்டிலேயே மாடியில் என்னை

தங்க வைத்திருந்தார். எங்களை வாழப்பாடி அழைத்துச் செல்ல காரும் வந்து விட்டது. நாங்கள் கிளம்புற சமயத்தில் ஜான் வெஸ்லியின் சகோதரியும், அவரோடு கணவரும் வந்துட்டாங்க. அவங்களை எனக்கு அறிமுகப்படுத்தி விட்டுட்டு, இவங்களுக்கு ஒரு ஜெபம் பண்ணிடுங்கய்யான்னு சொல்லிட்டு அவர் கீழே போய் விட்டார். நான் அவர்களிடம் கேசுவலாக 'நீங்க கிறிஸ்துவுக்குள்ள இருக்கீங்களா?' என்றேன். ஆமாம் என்றார்கள். அடுத்து 'முழுக்கு ஞானஸ்நானம் எடுத்து விட்டீங்களா?' என்று கேட்டேன். அந்த சகோதரியின் கணவர் உடனே 'வி டோண்ட் பிலீவ் இன் இட்!' என்றார். பளார்னு என் கன்னத்தில் அறைஞ்ச மாதிரி இருந்தது.

சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் ஞானஸ்நானம் எடுக்கலையே

''எந்த சர்ச்சுக்குப் போறீங்க?'ன்னு கேட்டேன். 'ஏ.எல்.சி.' (ஆர்காட் லூத்தரன் சர்ச்) என்றார். நான் முழுக்கு ஞானஸ்நானத்தை குறித்த சில வசனங்களை அவருக்கு எடுத்து சொன்னேன். **'நீங்கள் ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் பரத்தை பெற்றுக் கொள்வீங்க'**ன்னு அப் 16:31 சொல்லுது. **'ஒருவன் ஆவியினாலும் ஜலத்தினாலும் பிறவா விட்டால், பரலோகத்தில் பிரகாசிப்பது இல்லை'** – யோ. 3:4. **'விசுவாசமுள்ளவர்களாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படுவான்'** – மாற்கு 16:16. இன்னும் கொலே.2:12, மத் 28:19,20 என்று பல வசனங்களை எடுத்துச் சொன்னேன். அவர் கவுண்ட்டர் ஆர்கியூமெண்ட் செய்தார். இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் ஞானஸ்நானம் எடுத்தானா? இல்லையே. அவன் பரதேஸ் செல்லவில்லையா? என்றார். நான் அந்த கள்ளன் சிலுவையில் அறையப்பட்டு விட்டான். சாவதற்கு முன் கடைசி நிமிடத்தில் அவன் இயேசுவை ஏற்றுக் கொண்டவன். அது ஒரு தனிப்பட்ட, எக்ஷப்னல் கேஸ். அதை ஜெனரலைஸ் பண்ணி ஞானஸ்நானம் தேவையில்லைன்னு சொல்லாதீங்கன்னு சொன்னேன். அவர் கேக்கற மாதிரி இல்லை.

இவங்களுக்காக நீ என்ன செய்யப் போறே?

அதுக்குள்ள கீழே இருந்து ஹார்ன் அடிக்க ஆரம்பிச்சுட்டாங்க. வாழப்பாடி மீட்டிங்கிற்கு லேட் ஆயிடுச்சு. அதுனால நான் 'சரி

ஆவியானவர் உங்களுக்கு வெளிப்படுத்துவார். அவர்கிட்டே கேளுங்க' என்று கூறிவிட்டு அவர்களுக்காக ஒரு சிறிய ஜெபம் செய்துவிட்டு, கீழே இறங்கி, காரில் ஏறிவிட்டேன். கார் பின் சீட்டில் அமர்ந்திருந்தேன். அப்போ ஆண்டவர் இடைப்பட்டார். 'நீ ஊரெல்லாம் போயி இந்துக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிச்சுக்கிட்டு இருக்கே. இவர் கிறிஸ்தவர். அவர் என்ன சொன்னார் பார்த்தியா? இவங்களுக்காக நீ என்ன பண்ணப் போறே? இவரே இப்படி இருக்கார்ன்னா, இவருக்கு போதிச்சவங்க எப்படி இருப்பாங்க'ன்னார். நான் அப்படியே ஆடிப் போயிட்டேன். 'நான் என்ன செய்யணும் ஆண்டவரே?'ன்னு கேட்டேன். எழுதுன்னார். நான் ஒரு பேப்பரை எடுத்து எழுத ஆரம்பிச்சேன். வாழப்பாடி போறதுக்குள்ளே கடகடன்னு ஒரு 60 கேள்விகளுக்கு மேலே எழுதிட்டேன். எந்த ஒரு உணர்வும் இல்லாம சும்மா அப்படியே யாரோ டிக்டேட் பண்ணினா எப்படி எழுதுவோமோ, அதுமாதிரி எழுதுறேன். திரும்பி வரும்போது மேலும் 40 கேள்வி எழுதினேன். எழுதி முடிச்சாப் பிறகு நான் அந்த 100 கேள்விகளையும் படிக்கிறேன். எனக்கு அப்படியே தலை சுத்துது! எல்லாம் கிறிஸ்தவங்களுக்கே உண்டான எடக்கு மடக்கான கேள்விகள். இதுவரைக்கும் நான் நெனச்சே பார்த்திராத கேள்விகளை எல்லாம் எழுதியிருக்கேன்.

இவங்களுக்கு பதிலை நீயே எழுது

ஊஹூம். நம்மால இதற்குப் பதில் எழுத முடியாது. 'ஆண்டவரே என்னை ஆளை விடும். இது என்னால ஆகிற காரியம் இல்ல. வேற யாரையாவது வச்சு இதுக்கு பதில் எழுத வையுங்க' என்றேன். 'இல்லை. நீதான் எழுதணும். எழுது என்றார். 'இல்லை ஆண்டவரே. என்னால் முடியாது. எனக்கு அவ்வளவு ஞானம் இல்லை. நீர் வேற ஆளைப் பாரும்' என்றேன். ஆவியானவர் திரும்பத் திரும்ப நான்தான் எழுதணும்னு சொன்னார். கடைசியில 'சரி' என்றேன். ஆனா என்ன எழுதணும்னு நீரே எனக்கு சொல்லும். அப்பத்தான் எழுதுவேன்'னு அழாத குறையாக சொன்னேன். ஒரு பேப்பரை எடுத்து எழுத ஆரம்பிச்சேன். இரண்டே நாள்ல அத்தனை கேள்விகளுக்கும் பதில் எழுதினேன். எப்படி எழுதினேன்னு எனக்கே புரியலை. எழுதி முடிச்சிட்டு ஒரு தடவை நான் அதை படிச்சுப் பார்த்தேன். எனக்கு தலைகீழா ஒரு பள்ளத்தாக்குள்ல போற மாதிரி இருக்கு. நான் எழுதியது எனக்கே சம்மதமில்லை.

நான் எழுதியதை அப்படியே கிடப்பில போட்டுட்டேன். டைப்பிங்கிற்கு கொடுக்கலை.

ஆண்டவர் இடைப்பட்டார். ஏன் அப்படியே வச்சுக்கிட்டு இருக்கே. டைப்பிங்கிற்கு கொடு' என்றார். வேற வழியில்லாம டைப்பிங்கிற்கு கொடுத்தேன். ரெண்டு தடவை ஸ்பெல்லிங் மிஸ்டேக்கும் பார்த்துட்டு ஃபைனல் பிரிண்ட் அவுட்டும் வாங்கிட்டேன். ஆனால் பிரிண்டிங்கிற்கு கொடுக்கலை. தயக்கம். நாம் எழுதியது ஏதாவது ஆண்டவரோட சத்தியத்துக்கு புறம்பா இருந்தா என்ன பண்றதுன்னு அப்படியே பிரிண்டிங்கிற்கு கொடுக்காம வச்சிருந்தேன். மறுபடியும் ஆண்டவர் பேசினார். 'ஏன் இன்னும் பிரிண்டிங்கிற்கு கொடுக்காம அப்படியே வச்சுக்கிட்டு இருக்கே? கொடு' என்றார். இருந்தும் என் உள்ளத்தில் பயங்கர தயக்கம். இப்போ நான் என்ன எழுதினாலும் அதை படிக்கிறதுக்கு ஒரு கூட்ட ஜனம் இருக்கு. அவர்களை நான் தவறாக வழி நடத்திடக் கூடாதுன்னு எனக்குள்ள ஒரு எச்சரிக்கை. அதுனால நான் தயங்கினேன். ஆவியானவர் ரெண்டு மூணு தடவை சொன்னதுனால, நான் எழுதினதை பைபிள் நாலெட்ஜ் உள்ள ஸ்காலர்ஸ் யார் கிட்டயாவது கொடுத்து அவங்க ஒப்பீனியன் வாங்கிட்டு பிறகு பிரிண்ட் பண்ணலாம்னு நினைத்தேன்.

பிரிண்டிங்கிற்கு கொடு

பிளஸி யூத் மிஷன் ஸ்டேன்லி பிரதருக்கு போன் பண்ணினேன். அவரோட வொய்ஃப் டாக்டர் லில்லியன் பேசினாங்க. விஷயத்தை சொன்னேன். அவங்க 'அவர் யூரோப் டூர் போயிருக்கிறார். திரும்பி வர 20 நாட்கள் ஆகும். வந்த பிறகு பிசியா இருப்பாங்க. தப்பா எடுத்துக்காதீங்க. வேற யாருகிட்டயாவது கொடுத்து வாங்குங்கன்னு ரொம்ப பணிவா சொல்லிட்டாங்க. ஸ்டேன்லியும், டாக்டர் லில்லியன், அவங்க மகள் டாக்டர் இவாஞ்ஜலின் எல்லாருமே எம்மேல நல்ல வாஞ்சை உள்ளவங்க. என்னோட நெறைய புத்தகங்களை வாங்கி மத்தவங்களுக்கு கொடுத்திருக்காங்க.

ஏ.ஜி. சர்ச் பாஸ்டர் ராஜாமணிக்கு போன் பண்ணினேன்

அடுத்து யாரை அப்ரோச் பண்ணலாம்னு யோசிக்கிற சமயத்தில ஏ.ஜி. சர்ச் சூப்பரின்டென்ட்டாக இருக்கிற சீனியர் பாஸ்டர் ராஜாமணி நினைவுக்கு வந்தார். உடனே அவருக்கு போன் பண்ணினேன். அவர் அப்போ குன்னூர்ல மூணு நாள்

கன்வென்ஷன்ல பேசிக்கிட்டு இருந்தார். விஷயத்தைச் சொன்னேன். 'நீங்க எதை வேணும்னாலும் மாத்தலாம், திருத்தலாம், அடிக்கலாம், கூட்டலாம், குறைக்கலாம். ஜனங்களுக்கு சரியான சத்தியம் சொல்லணும். எதுவும் தப்பா போயிடக் கூடாதுன்னு பாக்குறேன்'னு சொன்னேன். 'நீங்க ஒன்னும் கவலைப்படாதீங்கய்யா. அனுப்பி வையுங்க' என்றார். உடனே கொரியர்ல அனுப்பி வச்சேன். 4, 5 நாளிலே திருப்பி அனுப்பிட்டாரு. ஒரு வார்த்தையைக் கூட அவர் மாத்தலை, திருத்தலை. அப்படியே இருந்தது. ஒரு மதிப்புரையும் எழுதி அனுப்பியிருந்தார். 'ரொம்ப நல்லா எழுதியிருக்கீங்க. எதையும் மாத்த வேண்டாம். உங்க பாணியிலே சில விஷயங்களை கூடாலடியா எழுதியிருக்கீங்க. அப்படியே இருக்கட்டும். வேதத்துக்கு புறம்பா எதையும் நீங்க எழுதலைன்னு மனதாரப் பாராட்டியிருந்தார். அதோட ரூ.20,000க்கு ஒரு செக்கும் இருந்தது. இதுபோல அவர் 3 தடவை பணம் அனுப்பியிருக்கிறார். ரொம்ப நல்ல மனிதர். பண்பாளர். நல்ல பிரசங்கியார். சத்தியத்தை சத்தியமாக நல்ல நகைச்சுவையோடு பேசுபவர். ஒரு நல்ல எழுத்தாளர். என்னை நேசிப்பவர். பாஸ்டர்களின் மீட்டிங்களிலேயே 'தாயப்பனை கூப்பிடுங்கய்யா. எந்த டிமாண்டும் கிடையாது. சபைக்கு தேவையான பல நல்ல விஷயங்களை சொல்லுவாரு. சபைக்கு பிரயோஜனமா இருக்கும்' என்று சொன்னதாக சில பாஸ்டர்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். கிறிஸ்துவுக்குள்ளே நான் மதிக்கும் பெரிய மனிதர்களில் இவரும் ஒருவர். கர்த்தர் அவருக்கு நல்ல நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும் பெலத்தையும் கொடுக்கவேண்டும்.

உங்க அழைப்பு வேற, என்னோட அழைப்பு வேற

கத்தோலிக்க சகோதர சகோதரிகள் மீது எனக்கு அக்கறை உண்டு. அவங்களும் இரட்சிக்கப்படணும்ங்கிற ஒரு ஆதங்கம் எனக்கு உண்டு. அவர்களின் பக்திக்கு ஈடு இணையே கிடையாது. தங்களோட வாழ்க்கையையே ஆண்டவருக்காக அர்ப்பணம் பண்ணி, கல்யாணமே பண்ணாம கன்னியாஸ்திரியாக இருக்காங்க. பங்கு தந்தையாக இருக்காங்க. அவங்க மெயின்டைன் செய்யக் கூடிய ஸ்கூல்ஸ், காலேஜ்ஜஸ், அநாதை இல்லம், முதியோர் இல்லம், சமூக சேவை நிறுவனங்கள், தேவாலயம் எல்லாம் பார்த்தீங்கன்னா, அவ்வளவு அழகா, நீட்டா, கிளீனா, ஃபெர்பெக்ட்டா இருக்கும்.

மத்தவங்க யாரும் பக்கத்தில கூட போக முடியாது. ஆனா பாரம்பரியமா, வேதத்துக்கு புறம்பா, வேதத்தில இல்லாத பல விஷயங்களை செய்யுறோமேங்கிற அந்த உணர்வே கூட இல்லாம செய்துக்கிட்டு இருக்காங்க.

அதுனால அவர்களுக்காக '**கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு**'ன்னு ரெண்டு பார்ட்டாக எழுதினேன். அதை நான் தேவனால் நன்கு பயன்படுத்தப்படுகின்ற நான் நேசிக்கும் ஒரு தேவ மனிதருக்கு அனுப்பி வச்சேன். படிச்சுப் பார்த்துட்டு 'ரொம்ப நல்லா எழுதியிருக்கீங்க. ஒரு பாயிண்ட் கூட மிஸ் பண்ணலை. வாட்டிசம், கேட்டிசம், சர்குலர் நம்பர் எல்லாம் போட்டு ஆதாரப்பூர்வமா, அவங்க மனசு புண்படாத அளவு நல்லா எழுதியிருக்கீங்கன்னு அரை மணி நேரத்துக்கும் மேலாக தொலைபேசியில் பேசினார். ஆனால் மதிப்புரை எழுதித்தர தயக்கம். ரொம்ப பண்பா, பணிவா, 'சாரிய்யா தப்பா எடுத்துக்காதீங்க. நேரடியா இப்படி தவறுகளைச் சுட்டிக் காட்டி சொல்லுறது, எழுதுறது உங்க அழைப்பு. என்னோட அழைப்பு பணி வேற. பைபிளை நல்லா படியுங்க. சத்தியத்தை அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'னு சொல்லிடுவேன் என்றார். பைபிளை ஒழுங்கா, ஆழமா படிச்சாங்கள்னாலே, தான் செய்யுறது தப்பு தெரிஞ்சு போகுமேன்னு சொன்னார்.

யாரும் ரிஸ்க் எடுக்க விரும்பலை

அதேபோல '**கிறிஸ்துவை எதிர்ப்பதன் விளைவு**' என்ற ஒரு புத்தகமும், '**கிறிஸ்தவர்களை எதிர்ப்பதின் விளைவு**' என்று கிறிஸ்தவர்களை தொட்டா என்ன கதி ஆகும்னு ஒரு புத்தகமும் எழுதினேன். கிறிஸ்தவத்துக்கு எதிரா இப்போ நெறைய எதிர்ப்புகள், வன்முறை, தீவிரவாதம், சர்ச்சை அடித்து நொறுக்குதல், கிறிஸ்தவர்களை, போதகர்களை தாக்குதல் போன்ற பல வன்முறைகள் நடைபெறுகின்றன. கிறிஸ்துவை எதிர்த்தாலோ, கிறிஸ்தவர்களைத் தொட்டாலோ கிறிஸ்தவன் ஒண்ணும் செய்ய மாட்டான். ஆனால் நம்ம ஆண்டவர் சும்மா பார்த்துக்கிட்டு இருப்பாரா? 'உன்னைத் தொடுகிறவன் என் கண்ணின் மணியைத் தொடுகிறான்', '**பழிவாங்குகிறவதை என்னிடம் விட்டுவிடு. நீ ஒண்ணும் செய்யாதே. நீ அவங்களுக்காக ஜெபம் மட்டும் பண்ணு**'ன்னு ஆண்டவர் சொல்லியிருக்காரே. அப்படி எதிர்த்தவங்க என்ன கதி ஆனாங்கங்கிறதை பல இடங்கள்ல பல பேர்கிட்ட அவங்க

சொல்லக் கேட்டிருக்கேன். ஒண்ணு எதிர்த்தவங்க என்னை மாதிரி ஒரு ஊழியக்காரனாகவோ, ஒரு கிறிஸ்தவனாகவோ மாறுவான். இல்லை, அவனும் அவன் குடும்பமும் அப்படியே நாசமாய் போகும். ஒண்ணுமே இல்லாம ஆகிவிடும். எதிர்த்த நாடு, நகரம், மன்னர்கள், சக்கரவர்த்திகள் எல்லாம் அப்படியே தவிடு பொடியா மண்ணோடு மண்ணா ஆயிட்டாங்கன்னு ஆதாரப்பூர்வமா, சரித்திரப்பூர்வமா அறிவேன். இது எதிர்க்கிறவங்களுக்கு தெரிஞ்சாத்தான் அவர்களுக்கு அடி வயித்தில் ஒரு பயம் வரும்னு அதுக்காகவே இந்த ரெண்டு புத்தகங்களை எழுதும்படி கர்த்தர் கிருபை தந்தார். இதை ரெண்டு சீனியர் பாஸ்டர்களுக்கு அனுப்பி ஒரு அணிந்துரை எழுதித்தாங்கன்னு அனுப்பி வச்சேன். எழுதிக் கொடுக்காம நழுவிட்டாங்க. யாருமே ஒரு ரிஸ்க் எடுக்க விரும்பலை. ரொம்ப சேஃப்பா, பத்திரமா, பாதுகாப்பா, எந்த எதிர்ப்புக்கும் சான்சே இல்லாம ஊழியம் பண்ணப் பாக்குறாங்க. என்ன பண்ண? மனசுக்கு கொஞ்சம் கஷ்டமாத்தான் இருந்துச்சு. அப்புறம் இதுதான் உலகம்னு என்னை நானே தேற்றிக் கொண்டேன்.

இப்புத்தகங்கள் இந்தியில் வெளிவர வேண்டும்

இப்படி கிறிஸ்தவத்திற்கும், சபைக்கும், ஊழியத்துக்கும், சுவிசேஷம் அறிவிக்கவும், எதிர்ப்புகளை சமாளிப்பதற்கும், யார் என்ன கேள்வி கேட்டாலும் பதில் கூறும் விதமாக பல புத்தகங்களை எழுத தேவன் கிருபை பாராட்டினார். மதமாற்ற தடைச் சட்டம், சிலை வணக்கம் சின்னாபின்னமாக்கியதே, ராமஜென்ம பூமி, ஸ்ரீராமஜெயம், நாலு வேதங்களின் நாயகர், வேத இரகசியங்கள், கர்வாப்சி, இந்துக்களின் – இஸ்லாமியர்களின் கேள்விகளுக்கு பதில் – என்று இதுபோன்று பல புத்தகங்கள். ஆனால் இது எல்லாமே தமிழில் மாத்திரமே இருக்கு. ஒரு சிலவைகள் ஆங்கிலத்திலும் வெளிவந்திருக்கிறது. ஆனால் இவைகள் இந்தியிலும் மற்ற மொழிகளிலேயும் வெளிவர வேண்டும். வட மாநிலங்களில்தான் கிறிஸ்தவத்திற்கு எதிராக பயங்கர எதிர்ப்பு இருக்கு. இவைகள் இந்தியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தால் வட மாநிலங்கள் இரட்சிக்கப்படும். தேசமும் சந்திக்கப்படும். அதற்காக ஆத்தும பாரம் உள்ளவர்கள், தேசம் சந்திக்கப்பட வேண்டும் என்கிற ஆதங்கம் உள்ளவர்கள் ஜெபியுங்கள். உதவுங்கள். கர்த்தர் உங்களை அபரிமிதமாக ஆசீர்வதிப்பார். எனது காலத்துக்குப்

பிறகும் இப்புத்தக ஊழியம் தொடர வேண்டும். அதற்காகவும் ஜெபம் பண்ணுங்கள். அல்லேலூயா! ஆமென்!

'எழவு'ன்னா அதுக்கு என்ன அர்த்தம்?

ஒருமுறை நான் மலேசியாவில் ஒரு சபையில் செய்தி கொடுத்து முடித்தவுடன் ஒரு சகோதரி வந்தாங்க. ஐயா நான் ஒரு கேள்வி கேட்டால் தப்பா எடுத்துக்க மாட்டீங்கள்ல என்றார். இல்லைம்மா, கேளுங்க என்றேன். 'எழவு'ன்னா என்ன அர்த்தம்? என்று கேட்டார்கள். அந்த சபையின் சீனியர் பாஸ்டரும் அங்கு இருந்தார். நான் எழவுன்னா தெரியாதா? எழவுன்னா செத்ததுன்னு அர்த்தம் என்றேன். 'சனியன்'ன்னா என்ன அர்த்தம் என்று கேட்டார்கள். 'சனியன்னா பிசாசுன்னு அர்த்தம். ஆமா எதுக்கு கேக்குறீங்கன்னு கேட்டேன். உங்க செய்தியில இந்த ரெண்டு வார்த்தைகளையும் நீங்க யூஸ் பண்ணினீங்க. அதான் கேட்டேன் என்றார்கள். அப்படியா? எனக்கு இதை விட இன்னும் மோசமான வார்த்தைகளை பலி பீடத்தில் இருந்து சொல்ல முடியலைம்மா. நீங்க இரட்சிக்கப்பட்டு எத்தனை வருஷம்மா ஆச்சு? 15 வருஷத்துக்கு மேலே ஆச்சு. பைபிளை எத்தனை தடவை ஃபுல்லா வாசிச்சு இருக்கீங்க? என்றேன். தலையை குனிந்து கொண்டார்கள். ஒரு தடவை கூட ஃபுல்லா வாசிக்கலை. நான் சபையிலே இதே கேள்வியை கேக்கும்போது ஒரு 10 – 15 பேர் தான் கையைத் தூக்கினாங்க. மத்தவங்கள்ல அப்படியே கம்முன்னு உட்கார்ந்துக்கிட்டு இருந்தாங்க.

பைபிளை படிக்கலைன்னா நீங்க செத்த கிறிஸ்தவங்க

அதாவது ஒரு தடவை கூட ஃபுல்லா பைபிளை படிக்கலை. அதுல நீங்களும் ஒருத்தர். உங்களை என்னென்னு சொல்றது? உங்களை நான் கொஞ்சவா முடியும்? உங்களை கொல்ல வேண்டாமா? நீங்க எல்லாம் செத்த கிறிஸ்தவங்க. எழவு எடுத்த கிறிஸ்தவங்க! பேர் கிறிஸ்தவங்க. சண்டே கிறிஸ்தவங்க. அப்படித்தானே! ஏம்மா உங்களுக்கு திங்க நேரம் இருக்கு, தூங்க நேரம் இருக்கு, மற்ற எல்லா விஷயத்துக்கும் நேரம் இருக்கு. பைபிள் படிக்க மட்டும் உங்களுக்கு நேரம் இல்லை. அப்படித்தானே. கலெக்டர் உத்தியோகமா பாக்குறீங்க? என்று கேட்டேன். உங்க தோலை உரிக்க வேண்டாமா? நான் உங்க பாஸ்டர் கிடையாது. அவரு இப்படி திட்ட மாட்டாரு. ஏன்னா அவர் மறுபடியும் உங்க மூஞ்

சியில முழிச்சாகணும். எனக்கு என்ன கொள்ளை? கேக்குறதை நச்சுன்னு கேட்டுடுவேன் என்றேன். நான் மத்த ஊழியக்காரங்க மாதிரி இல்லைம்மா. நான் மிலிட்டரிக்காரன். ஏ.கே. 47னோடதான் பேசுவேன். ஜாக்கிரதை என்றேன்.

சனியன்னா என்ன அர்த்தம்?

சனியன்னா என்னன்னு கேட்டீங்க இல்லையா? நாம எல்லாருமே முன்னாடி இந்து மார்க்கத்தில் இருந்தவங்கதாம்மா. அந்த மார்க்கத்தில் இருக்கும்போது ஜாதி எல்லாம் பார்த்துக்கிட்டு மனு தர்மத்துக்கும், வர்ணாஸ்மிர்தத்துக்கும் அடிமைப்பட்டுக் கிடந்தோம். கிறிஸ்துவுக்குள்ள வந்தபிறகும் மறுபடியும் நாம ஜாதி பார்த்துக்கிட்டு இருக்கோமே. இவங்க எங்க ஆளுங்க, எங்க ஜாதி. எங்க தேவமாரு. எங்க நாடாக்கமாரு. எங்க கோனாக்கமாரு என்று சொந்தம் கொண்டாடுறோம். நம்ம புள்ளைகளுக்கு நம்ம ஜாதியிலேயே வரன் பாக்குறோம். சபைக்குள்ள, கிறிஸ்துவுக்குள்ள வந்தப் பிறகு என்ன 'விளக்குமாறு' வேண்டிக் கிடக்கு! ஆண்டவர் எதை மன்னிச்சாலும் மன்னிப்பாரு. அவர் சிருஷ்டிப்பையே கேள்விக்குறியாக்குனீங்கன்னா மன்னிப்பே கிடையாது. இன்னும் ஜாதி பாக்குறவங்களை இப்படித்தான் 'சனியன் பிடிச்ச கிறிஸ்தவங்க' அதாவது 'பிசாசு பிடிச்ச கிறிஸ்தவங்க'ன்னு நான் சொல்றேன். இப்போ புரியுதாம்மா. இவங்களை ஏன் என்னால் வேற மாதிரி பெயர் சொல்லிக் கூப்பிட முடியலைன்னு புரிகிறதா?

சர்ச்சுக்கு எதுக்கு வர்றீங்க?

பிறகு நான் கேட்டேன். ஏம்மா நான் 2 மணி நேரம் பிரசங்கம் செஞ்சுருக்கேன். 100 வசனத்துக்கு மேலே சொல்லியிருக்கேன். நான் சொன்ன வசனங்களை எழுதி வச்சு இருக்கீங்களா? ஒண்ணு கூட எழுதலை. ஆனா நான் சொன்ன இந்த ரெண்டு வார்த்தைகள் மட்டும் உங்க மனசுல அப்படியே பதிஞ்சு இருக்கு இல்லையா? அப்போ எதுக்கும்மா நீங்க இம்பார்ட்டென்ட் கொடுத்து இருக்கீங்க? நான் சொன்ன வேற எதுவும் உங்களுக்கு ஞாபகம் இல்லை. நினைவுக்கு வரலை. இந்த ரெண்டு வார்த்தை மட்டும் அப்படியே உங்க மனசுல தங்கி இருக்குது இல்லையா? பிரசங்கியார் எங்கடா தப்பு பண்ணுவார்ன்னு செக் பண்றதுக்காக, எனக்கு மார்க்கு போடுறதுக்காக சர்ச்சுக்கு வந்தீங்களா? என்று

கேட்டேன். பாஸ்டரும் பக்கத்துலயேதான் இருந்தாரு. அவர் ஒரு வார்த்தையும் சொல்லலை.

கண்டித்து உணர்த்தத்தான் ஆண்டவர் வசனம்

போங்கம்மா, போங்க. பரலோகம் போறதுக்கு உண்டான வழியை பிடிச்சுக்கோங்க. உங்களை திட்டுறதுனால எனக்கு என்னம்மா கிடைக்கப் போகுது? கோழி மிதிச்சா குஞ்சு முடம் ஆகிடாது. நீங்க ஒரு பரலோக பிரஜையா மாறணுமேங்கிறதுக்காகவே இப்படியெல்லாம் நான் திட்டுறேன். ஆண்டவரோட வசனம் உங்களை கண்டிச்சு திருத்தத்தான். தப்பா எடுத்துக்காதீங்க. என்னோட வயசுக்கு நீங்க எனக்கு ஒரு மகள் மாதிரி. சபையில இருக்குற எல்லாருமே எனக்கு புள்ளைங்க மாதிரிதான். அதுனாலதான் அந்த உரிமையில திட்டுறேன். நீங்க எல்லாரும் நல்லா இருக்கணுமேங்கிற ஆதங்கத்துல திட்டறேன். வேற எதுக்கும் இல்லைம்மா என்றேன். ‘சாரிய்யா. என்னை மன்னிச்சிடுங்க. தெரியாம கேட்டுட்டேன்’ என்று உண்மையான மனவருத்தத்துடன் மன்னிப்பு கேட்டு விட்டு சென்றார்கள். அதன் பின்பு அந்த பாஸ்டர் என்னிடம் சொன்னார். இந்த லேடி இப்படித்தான் சபையில, ஏதாவது எடக்கு மடக்கா கேட்டு கலாட்டா பண்ணும். எனக்கு ஒண்ணு ரெண்டு தடவை கம்ப்ளைண்ட் வந்திருக்கு. இன்னிக்கு உங்கக்கிட்ட வசமா மாட்டிக்கிட்டாங்க. அவங்களுக்கு என்ன சொல்லி புரிய வைக்கணுமோ அதை ஆண்டவர் உங்க மூலமா அவங்களோட தெளிவா பேசிட்டாரு’’என்று மிகவும் சந்தோஷமாக கூறினார்.

40 ஆண்டு குடிபழக்கம் என்னை விட்டுப் போச்சு

கிறிஸ்துவுக்குள்ள வர்றதுக்கு முன்னாடி நான் ஏர்போர்சில் ஒரு அதிகாரியாக 26 ஆண்டுகள் பணியாற்றியவன். அப்போ அங்கே பார்ட்டியில் கொஞ்சம் டிரங்ஸ்க் சாப்பிட்டுக்கிட்டு இருந்தது, பிறகு அதுவே டெய்லி பழக்கமாகவும் ஆயிடுச்சு. டெய்லி ரெண்டு பெக் அடிச்சாகணும். அப்பத்தான் எனக்கு தூக்கம் வரும். 40 வருஷ குடிப்பழக்கம். லிமிட்டாத்தான் எப்பவுமே குடிப்பேன். ஆனாலும் அதுவே ஒரு பழக்கமாக ஆயிடுச்சு. நான் கிறிஸ்துவுக்குள்ள வந்தவுடனே ஆண்டவர் ஒரே நாளில் எனக்கு இந்த குடிப் பழக்கம், சிகரெட் பழக்கத்திலிருந்து விடுதலையை கொடுத்தார். நான் ஏர்போர்சை விட்டு வெளியே வந்தாப் பிறகும் மாதா மாதம் மிலிட்டரி காண்டீனிலே மிகக் குறைஞ்ச விலைக்கு எங்களுக்கு

பாட்டில்கள் வாங்க அனுமதி உண்டு. பாட்டில் தேவைப்படுகிறவர்கள் எத்தனையோ பேர் வெளியில இருக்காங்க. அதுனால குடிக்காதவங்க அவர்களுடைய கோட்டாவான பாட்டில்களை வாங்கி லாபத்துக்கு மற்றவர்களுக்கு விற்று விடுவார்கள். நானும் அப்படியே செய்து கொண்டு இருந்தேன். அதை ஒருத்தர் என் வீட்டிலேயே வந்து வாங்கிக் கொள்வார். எக்ஸ்ட்ராவாக கிடைக்கும் அந்த தொகையில் கேண்டீன் சாமான்களை வாங்கிக் கொள்வேன்.

அந்த பாவம் நமக்கு வேண்டாமே

அப்படி ஒரு நாள் பாட்டில்கள் வாங்கிக் கொண்டு கேண்டீனை விட்டு நான் வெளியே வந்தேன். அப்பொழுது முன்பு ஏர்போர்சில் இருந்து இப்போ வெளியிலே வந்து கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்து கொண்டிருக்கும் ஒரு சகோதரர் என்னைக் கண்டார். என் கையில் இருந்த பாட்டில்களையும் பார்த்தார். 'என்ன பிரதர் இது?' என்றார் முகம் சுளித்தபடி. 'ஐயோ நான் குடிக்கிறதுக்கு இல்லை. யாராவது வந்து எக்ஸ்ட்ரா அமௌண்ட்டிற்கு வாங்கிட்டு போயிடுவாங்க. அதில் கேண்டீன் அயிட்டங்கள் வாங்கிப்பேன்' என்றேன். 'வேண்டாமே பிரதர். இந்த பாப காரியம் நமக்கு எதுக்கு?' என்றார். குடிக்கிறவன் எங்கிட்ட வாங்கலைன்னாலும் வேற யார் கிட்டயாவது வாங்கி குடிக்கத்தானே போறான். அதுவுமில்லாம நான் எனக்குண்டான கோட்டாவைத்தானே வாங்குகிறேன்' என்றேன். 'வேண்டாம் பிரதர். குடிக்கிறவன் எப்படியோ குடிச்சுட்டுப் போறான். அது அவனோட ஆரோக்கியத்தையும், குடும்பத்தையும், குடும்பத்தின் சந்தோஷம், சமாதானம், பொருளாதாரம் எல்லாத்தையும் கெடுக்குதே. அது நம்ம மூலமா ஏன் நடக்கணும்? வேண்டாம். இதுனால ஒரு 1000 ரூபாய் நமக்கு எக்ஸ்ட்ராவாக கிடைச்சாலும் அது வேண்டாம்' என்றார். அப்பத்தான் நானும் என்னோட மிஸ்டேக்கை உணர்ந்தேன்.

பாட்டில் வாங்குகிறதை விட்டேன்

அன்னிக்கே பாட்டில் வாங்கி விக்கிறதை விட்டுவிட்டேன். இதுவரை தெரியாம செஞ்சதுக்கு ஆண்டவர் கிட்டே மன்னிப்புக் கேட்டேன். இதுனால எனக்கு கொஞ்சம் பைனான்சியல் லாஸ்தான் என்றாலும் அதுக்குப் பிறகு எனக்கு கிடைச்ச அந்த நிம்மதி, சந்தோஷம், சமாதானத்திற்கு ஈடு இணையேயில்லை. என்

தேவைகளையும், ஆண்டவர் நினைச்சுக் கூட பார்க்க முடியாத அளவு சந்தித்திருக்கிறார். நாம் தவறு செய்யும்போது ஆண்டவர் இப்படி யார் மூலமாவது நம்மை திருத்துவார். இந்த பாவப் பழக்கத்திலிருந்து நான் வெளிவர எனக்கு உணர்த்திய அந்த அன்பு சகோதரரை இன்றும் நான் நன்றியோடு நினைக்கிறேன். அல்லேலூயா!

என் புத்தகங்களை படித்துவிட்டு, என் பிரசங்கத்தை கேட்டுவிட்டு, தினமும் பலர் அவர்கள் சந்திக்கிற பிரச்சினைகள், கஷ்டங்கள், சந்தேகங்கள், நீங்குவதற்காக ஜெபிக்க எனக்கு போன் செய்வார்கள். சிலர் நேரிலும் வந்து விடுவார்கள். அப்பொழுது ரொம்ப ஞானமாக அவர்களுக்கு ஆறுதலோ, அறிவுரையோ கூற வேண்டி வரும். அதற்காக ஆண்டவரிடம் கேட்பேன். அப்பேர்ப்பட்ட ஒரு ஞானத்தை எனக்குக் கொடுங்கப்பா. தவறான அறிவுரைகளை நான் ஒருபோதும் கூறிவிடக் கூடாது என்று ஜெபிப்பேன். அதேபோல ஆண்டவர் என்னை அவருடைய கிருபையால் நல்லபடியாக கவுன்சலிங் செய்து பலருக்கு அறிவுரை வழங்க பயன்படுத்தி வருகிறார். நான் சந்தித்த நபர், கேட்ட சந்தேகம், சூழ்நிலை பற்றி எல்லாம் எழுத வேண்டும் என்றால் அதுவே ஒரு தனிப் புத்தகமாக ஆகிவிடும். சம்பிளுக்கு ஒன்று ரெண்டை மாத்திரம் எழுதுகிறேன்.

நான் சீக்ரெட் கிறிஸ்டியன்

மதுரையிலிருந்து ஒரு சகோதரி எனக்கு போன் பண்ணினார். நான் ஒரு சீக்ரெட் கிறிஸ்டியன். மனதார கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இதை இன்னும் வெளிப்படையாக இன்னும் யாருக்கும் சொல்லவில்லை. எனக்கு திருமணம் ஆயிடுச்சு. என் கணவர் வீட்டில் இருந்து யாரும் இரட்சிக்கப்படவில்லை. கூட்டுக் குடித்தனத்தில்தான் இருக்கிறேன். தினமும் விளக்கேற்றச் சொல்கிறார்கள். கோலம் போடணும். சாமி படங்களுக்கு பூ, பொட்டு வைக்கணும். துளசி மாடத்துக்கு தீபாராதனை காட்டணும். இப்படி இந்துக்களின் பல பாரம்பரிய கலாச்சாரங்களை செய்யச் சொல்லுகின்றனர். எனக்கு செய்யாமல் இருக்க முடியவில்லை. அதே சமயம் இவைகளை செய்ய இஷ்டமும் இல்லை. இருதலைக் கொள்ளி எறும்பாக தவிக்கிறேன் என்றார்கள். ஒரு பாஸ்டர் நம்பர் எனக்கு கிடைச்சு, அவருக்கு போன் பண்ணி விஷயத்தை சொன்னேன். அதையெல்லாம் செய்யக் கூடாது. தேவனுக்கு

பிடிக்காது. ஆண்டவர் வாந்தி பண்ணிப்போடுவார் என்று கூறிவிட்டார். எனக்கு இன்னும் பயம் அதிகமாயிடுச்சு. இப்ப என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியலைன்னாங்க.

ஞானமாய் செயல்படுங்க

நான் கேட்டேன். 'உங்க கணவர் உங்க பக்கம் ஸ்டிராங்கா இருக்காரா? அப்படி இருந்தா வேற யாரைப் பற்றியும் நீங்க கவலைப்பட வேண்டாம். தெளிவா சொல்லிடுங்க. எனக்கு இதைச் செய்ய இஷ்டமில்லைன்னு. என்னை கம்பல் பண்ணாதீங்கன்னு சொல்லிடுங்க. கணவர் உங்க பக்கம் உறுதியா நிக்கலைன்னா, ஒரு வார்த்தை மறுப்பு சொல்லாம கம்முன்னு வாயைப் பொத்திக்கிட்டு செய்யுங்க. அது என்ன? ஒரு சாதாரண பேப்பர்ல பிரிண்ட் பண்ணப்பட்ட ஒரு படத்தை பிரேம் போட்டு இருக்கு. உங்க உள்ளத்தில் நிறைஞ்சு இருக்கிறவரு இயேசு கிறிஸ்து. பின்ன என்ன? சின்னப் புள்ளைங்க, கையில கிடைக்கிற சில பேப்பர்களிலே இருக்கிற படங்களுக்கு பொட்டு, பூ, தாடி, மீசை, எல்லாம் வேடிக்கையாக வரைவாங்க. சின்னப் புள்ளையா இருக்கும் போது நானே அப்படி செஞ்சிருக்கேன். அதுபோல அந்த படத்துக்கு பொட்டு வையுங்க. அலங்காரம் பண்ணுங்க. மனசுக்குள்ள நம்ம ஆண்டவரை நினைச்சு ஜெபம் பண்ணுங்க. இது தப்பே கிடையாது. **'மனுஷன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ உன் இருதயத்தைப் பார்க்கிறார்'**ன்னு வேதம் சொல்லுதே. செய்ய மாட்டேன்னு சொல்லி உங்க திருமண வாழ்க்கை எவ்விதத்திலும் கெடுத்துக்காதீங்க. ஞானமா செயல்படுங்க.

குத்து விளக்கேற்றுவது குற்றமில்லை

குடும்பத்திலுள்ள எல்லாரும் இரட்சிக்கப்படணும்னு நீங்க மனசுக்குள்ளேயே ஜெபம் பண்ணுங்க. உங்க சூழ்நிலையில நீங்க முழங்கால் போட்டுத்தான் ஜெபிக்கணும்கிறது இல்லை. நடக்கும்போது, வேலை செய்யும்போது, குளிக்கும்போது என்று எல்லா நேரத்திலேயும் ஜெபம் பண்ணுங்க. ஏற்ற வேளையில, அவங்க எல்லாரும் இரட்சிக்கப்படுவாங்க. குத்துவிளக்கு ஏத்துங்க. தப்பில்ல. **'ஏழு குத்துவிளக்குகளின் மத்தியில் உலா வருகிறவர்'** நம்ம ஆண்டவர். இருளில் வாழும் ஒரு கூட்ட மக்களை வெளிச்சத்துக்கு கொண்டு வர்றதுக்காக **'இந்த உலகிற்கு ஒளியாக வந்தவர்'** நம் இயேசு. அதை நெனச்சுக்கிட்டு விளக்கேத்துங்க. ஒண்ணும் தப்பு

இல்லை என்று கூறினேன். அதுக்கப்புறம்தான் அந்த சகோதரி கொஞ்சம் நிம்மதி பெருமூச்சு விட்டாங்க.

நான் தற்கொலை செய்யப் போறேன்

எனக்கு ஒரு தடவை ஒரு கிறிஸ்தவ சகோதரர் போன் பண்ணினார். 'ஐயா நான் தற்கொலை பண்ணிக்கப் போறேன். அதுக்கு முன்னாடி உங்களுக்கு போன் பண்ணனும்னு தோணிச்சு' என்றார். 'தற்கொலை ஒரு பிரச்சனைக்கு தீர்வு இல்லை. பிரச்சனையை விட்டுட்டு அப்படியே நீங்க தப்புறீங்க. பிரச்சனை அப்படியேதான் இருக்கும். என்ன பிரச்சனை சொல்லுங்க'. 'ஐயா என் பெண்டாட்டி சரியில்லை'ன்னாரு. 'சரியில்லைன்னா?' வேற ஒருத்தன் கூட தொடர்பு வச்சிருக்கா. 'வாயைக் கழுவுங்க. மனைவியை சந்தேகப்படாதீங்க. அது தப்பு. உங்க நிம்மதியே போய்விடும்' என்றேன். 'இல்லைய்யா, அவளே இதை எங்கிட்டே ஒத்துக்கிட்டா' என்றார். 'அதுக்கும் நீங்கதான் காரணம். அவங்களை எல்லாவிதத்திலும் நீங்க திருப்தி படுத்தியிருந்தா, அவங்க இப்படி நடந்திருக்க மாட்டாங்க. ஒண்ணு புரிஞ்சுக்கோங்க. கற்புல ஆண்களை விட பெண்கள் ரொம்ப ஸ்டிராங்க். லேசுல அவங்க அதுல தவறிட மாட்டாங்க. குடும்ப சூழ்நிலை, தனிமை, விரக்தி, கணவனின் அன்பு கிடைக்காமை போன்ற சமயங்களிலும், வேலை ஸ்தலத்தில் ஆண்களோடு நெருங்கிப் பழகுகின்ற சமயத்திலும் சில பலவீனமான நேரத்தில அவங்க சற்று வழி விலகிப் போக வாய்ப்புகள் உண்டு. அவங்க விரும்பி போறது இல்லை. இப்படிப்பட்ட சில இக்கட்டான சூழ்நிலைகளில் தன்னை இழந்துவிடுகிறார்கள். இது ஒரு ஆக்ஸிடெண்ட். விபத்துன்னுதான் நான் சொல்லுவேன்.

மன்னிச்சு மறந்திடுங்க

இதை பெரிசா எடுத்துக்காதீங்க. இதைக் குறிச்சு நீங்க அவங்களை பாடாய்ப்படுத்தி, திட்டி, அடிச்சு துன்புறுத்துகிற சமயத்தில அவங்க சில சமயம் அதிக வைராக்கியம் கொண்டு விடுவாங்க. அதுதான் உங்க கேசுல நடந்திருக்கு. மன்னிச்சு மறந்திடுங்க என்றேன். 'எப்படி சார் நான் மன்னிக்கிறது? இது மன்னிக்கக் கூடிய ஒரு குற்றமா? சொல்லுங்க. இது துரோகம் சார். மனசு அப்படியே கொதிக்குது. இவ்வளவு நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லாம போயிடுச்சே' என்று போனிலேயே

அழுதார். 'ஸ்.. ரொம்ப பெரிய வார்த்தைகளை எல்லாம் போட்டு பேசாதீங்க. ரோட்டில் போறீங்க. தெரியாம ஒரு அசிங்கத்தை மிச்சுடுறீங்க. உடனே காலை வெட்டிடுறீங்களா? காலை கழுவிட்டு வீட்டுக்குள்ள வர்றதில்லையா? அதுமாதிரி இதை உங்க உள்ளத்தில் இருந்து துடைச்சு எடுத்துப் போட்டுடுங்க. அப்பத்தான் உங்க வேதனை, வலி நீங்கும் என்றேன். 'முடியலையே சார்' என்று அழுதார்.

மன்னிக்கிறது ஒண்ணுதான் தீர்வு

அப்போ என்ன பண்ணப் போறீங்க? டைவர்ஸ் பண்ணப் போறீங்களா? இல்லை வீட்டை விட்டு விரட்டப் போறீங்களா? இல்லை தினமும் இதையே நினைச்சு அவங்களை அடிச்சு காயப்படுத்தப் போறீங்களா? அப்படி செஞ்சீங்கன்னா, இப்போ உங்க ரெண்டு பேருக்குள்ளே இருக்கிற இந்த விஷயம் உங்க பிள்ளைகளுக்கும் தெரிய வரும். அப்புறம் அக்கம் பக்கம், உற்றார் உறவினர் எல்லாருக்கும் தெரிய வரும். அது உங்களுக்கு நிம்மதியையா தரும்? மன்னிக்கிறது ஒண்ணு தான் தீர்வு' என்றேன். 'நான் மன்னிக்கத் தயார். ஆனா அவ கேக்கணுமே' என்று ஏக்கத்தோடு கேட்டார். 'சரி அதை நான் பார்த்துக்கிறேன். அவங்க எங்க வேலை பார்க்குறாங்க. அந்த ஆளு எங்கே இருக்கார்' என்றேன். 'ஒரு ஸ்கூல்ல இவ வொர்க் பண்றா. அவரும் அந்த ஸ்கூல்லதான் வொர்க் பண்றாரு. என் மனைவிக்கு உங்களை நல்லாத் தெரியும்யா. உங்களோட மூணு நாள் மீட்டிங்கும் அட்டெண்ட் பண்ணியிருக்காங்க. உங்க புஸ்தகமும் எங்க வீட்ல இருக்குன்னு சொன்னார்.

'சரி ரொம்ப நல்லது. எத்தனை மணிக்கு வீட்டுக்கு வருவாங்க?' 5 மணிக்கெல்லாம் வந்திடுவாள் என்றார். 'சரி நீங்க 4 மணிக்கே வெளியில போயிட்டு 7 மணிக்குப் பிறகு வாங்க. நான் அதுக்குள்ளே அவங்ககிட்டே பேசுறேன். இதே நம்பர்தானே?' 'ஆமாம்' என்றார்.

ஒரு ராங்கால் கரெக்ட் பெர்சனுக்கு

கரெக்ட்டா 5,15க்கு போன் செய்தேன். அந்த சகோதரிதான் போனை எடுத்தாங்க. நான் என் பெயரை சொல்லிட்டு, பாஸ்டர் கிறிஸ்டோபர் இருக்காரா? என்று கேட்டேன். அவங்க என் பெயரைக் கேட்டவுடனேயே 'ஐயா நீங்க 'என் அழுகையும்

ஆனந்த புதுவாழ்வும்' புத்தகம் எழுதின தாயப்பனா? ஸ்தோத்திரம் ஐயா! எப்படி இருக்குறீங்க? ஐயோ. உங்க மெசேஜ் இன்னும் என் காதிலே ஒலிக்குதுய்யா. நான் உங்க மீட்டிங்கை 3 நாளும் அட்டெண்ட் பண்ணினேன் அய்யா. உங்க குரலைக் கேட்டது எனக்கு ரொம்ப சந்தோஷம்யா. நல்லா இருக்கீங்களா? உங்க பையன் கார்த்திக் எப்படி இருக்காங்க' என்று விசாரித்தாங்க. 'ரொம்ப சந்தோஷம், உங்க பெயர் என்னம்மா? எங்கே என்னோட செய்தியை கேட்டீங்க?' என்றேன். ஐயா எங்க சர்ச்சுக்கு ஒரு தடவை வந்தீங்கன்னு, அவங்க சர்ச் பேரையும் ஊர் பெயரையும் சொன்னாங்க. 'அப்படியா வெரிகுட். நீங்க என்ன செய்யுறீங்க? கல்யாணம் ஆயிடுச்சா? எத்தனை குழந்தைகள்? என்றேன். எல்லாம் சொன்னாங்க. ஆமா பாஸ்டர் கிறிஸ்டோபர் இல்லையா? என்று கேட்டேன். இது பாஸ்டர் நம்பர் இல்லைங்க. நீங்க போட்ட கால் தப்பா என் நம்பருக்கு வந்திருக்கு. நான் லக்கி. அதுனாலதான் எனக்கு வந்திருக்கு என்று சந்தோஷமாக சொன்னார்கள்.

ஒரு சின்ன பொய் அவங்க தப்பை உணர வைத்தது

சரிம்மா. எனக்கும் சந்தோஷம்தான். நல்லா இருக்கீங்களா? ஒரு சின்ன ஜெபம் பண்ணிடுறேன்னு ஜெபம் பண்ண ஆரம்பிச்சேன். பாதியிலேயே நிறுத்திட்டு, 'ஏனோ தெரியலைம்மா.. ஆவியானவர் இடைப்படுகிறார். எதையோ உங்க கிட்ட சொல்லச் சொல்றாரு. ஏன் எதுக்கு, என்ன விஷயம்னு எனக்கு ஒண்ணும் புரியலை என்றேன். 'என்ன சொல்லுங்கய்யா' என்றார்கள். குடும்பத்தில் ஏதோ ஒரு பிரச்சனை. கர்த்தரின் பாதையில. ஏதோ ஒரு தப்பு. தேவனுடைய விருப்பத்துக்கு மாறாக, அவருக்கு பிடிக்காத ஒண்ணு நடக்குது. அதை விட்டு உடனே வெளியே வாங்கன்னு சொல்றாரு. இது கடைசி எச்சரிக்கைன்னு வேற சொல்றாரு.' என்றேன். எனக்கு ஒண்ணும் புரியலைம்மா என்றேன். அவங்க போன்லயே 'ஓ'ன்னு அழ ஆரம்பிச்சிட்டாங்க. கொஞ்ச நேரம் அழட்டும்னு விட்டுட்டேன். பிறகு கேட்டேன். எல்லாத்தையும் சொல்லிட்டாங்க.

மனம் கசந்து அழுதா ஆண்டவர் மன்னிப்பார்

பிறகு நான் ஆறுதல்படுத்தினேன். ஆண்டவர் கிட்டயும், உங்க வீட்டுக்காரர் கிட்டயும் மனசார மன்னிப்புக் கேளுங்க. குடும்பம், கணவர், புள்ளைகள் இதுதான் உங்களுக்கு முக்கியம். அழகு, பாதுகாப்பு, தேவனுக்கு பிரீதமானது. அந்த அமைப்பை விட்டு

தப்பித் தவறிக் கூட வெளியே வராதீங்க. அது நல்லதில்லை. நடந்ததை ஒரு கெட்ட கனவா மறந்திடுங்க. மீண்டும் அந்த பாவத்தை செய்ய வேண்டாம். மனம் கசந்து அழுதீங்கன்னா, ஆண்டவரும் மன்னிச்சிடுவார்' என்று ஆறுதல் கூறி ஜெபித்து சமாதானம் கூறினேன். 7 மணிக்குப் பிறகு கணவர் வந்தவுடன் இந்த சகோதரி அவர் காலில் விழுந்து கதறி மன்னிப்பு கேட்டிருக்காங்க. என்னை கொன்னுடுங்கன்னு அழுதிருக்காங்க. இதை அவர் எதிர்பார்க்கவே இல்லை. 'அழாதே... அழாதே' என்று இவர் அப்புறம் சமாதானப்படுத்தி இருக்கிறார்.

என் வேதனை இப்போ போயிடுச்சு

மறுநாள் காலையில எனக்கு போன் பண்ணினார். 'அவகிட்ட என்னய்யா சொன்னீங்க? அப்படியே கால்ல விழுந்து கதறி மன்னிப்பு கேட்டா. நானும் மன்னிச்சுட்டேன். இப்போ என் உள்ளத்தில் இருந்த அந்த வேதனை என்னை விட்டுப் போயிடுச்சு. நன்றிய்யா' என்றார். நான் அவரிடம் 'இனி இந்த விஷயத்தை அப்படியே குழி தோண்டி புதைச்சிடுங்க. எந்த சமயத்திலும் இதைப்பற்றி இனி ஒரு வார்த்தை கேக்கக் கூடாது. பேசப்பிடாது' என்று கூறினேன். அப்புறம் நான் ஆண்டவர் சமூகத்தில் முழங்கால் படியிட்டு மன்னிப்பு கேட்டேன். 'ஆண்டவரே உம்மோட பெயரை நான் யூஸ் பண்ணிட்டேன். ஒரு குடும்பம் பிரிஞ்சுடக் கூடாதேங்கிறதுக்காக யூஸ் பண்ணினேன். என்னை மன்னிச்சிடுங்க. அந்த குடும்பத்தை ஆசீர்வதிங்க' என்று வேண்டிக் கொண்டேன். இப்படி எத்தனையோ கவுன்சிலிங். பல குடும்பங்களில் பிரச்சனைகளை தீர்க்க, இரட்சிப்பின் பாதையில் வழிகாட்டி நடந்திட கர்த்தர் இந்த அடிமையை எடுத்துப் பயன்படுத்துகிறார், அல்லேலூயா!

அமாவாசை – ஒரு சுவிசேஷ படம்

சில ஆண்டுகளுக்கு முன்பு ஜெ.ரமேஷ் எழுதி, இயக்கி இருந்த கமலஹாசனுடைய அண்ணன் சாருஹாசனை வைத்து எடுத்திருந்த '**சத்தியத்தைத் தேடி**' என்கிற ஒரு டெலிஃபிலிமை காண அந்தப் பிலிமை புரொடியூஸ் பண்ணியிருந்த சுசீலா ரகுநாதன் என்னை அழைத்திருந்தார். மிக அருமையான சுவிசேஷ படம். அந்தப் படத்தைப் பற்றிய விமர்சனத்தை என்னுடைய புத்தகம் ஒன்றில் கூட எழுதியிருக்கிறேன். இயேசுவை அறியாத புற ஜாதி மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க டெலிஃபிலிம் ஒரு நல்ல மீடியா என்று

நினைத்து, டைரக்டர் ரமேஷ் மூலம் '**அமாவாசை**' என்கிற ஒரு படத்தை எடுக்க மாம்சீகத்தில் நான் முடிவெடுத்து விட்டேன். நாடகம், டி.வி, சினிமா, சீரியல் என்று கலைத்துறையில் எனக்கு கொஞ்சம் ஈடுபாடு இருந்ததால் அதனால் ஈர்க்கப்பட்டு எடுத்தேன். மார்க்கட்டிங் பற்றி நான் பயந்து தயங்கியபோது, 'ஒண்ணும் கவலைப்படாதீங்க அண்ணே.' என்னுடைய அசிஸ்டெண்ட் டைரக்டர் சஞ்ஜை எல்லாத்தையும் பார்த்துப்பார். உங்களுக்கு நீங்க செலவழிச்ச பணம் வந்துவிடும்' என்று ப்ராமிஸ் பண்ணினார். நானும் அதை நம்பி அதிக ஆர்வத்தில் என் சுய புத்தியில் டிசைட் செய்து ரூபாய் 7.5 லட்சம் செலவழித்து படத்தை எடுத்தேன். இதுக்காக நான் தேவ சமூகத்தில் காத்திருந்து, இது தேவ சித்தமா என்று அறியாமல் நானாக எடுத்த ஒரு முடிவு இது. படம் ரொம்ப நன்றாகவே இருந்தது. சுவிசேஷம் அறிவிக்க ஏதுவான ஒரு படம்.

ஆழம் தெரியாமல் காலை விட்டேன்

ஆனால், மார்க்கெட்டிங் டோட்டல் ஃபிளாப். படம் ரிலீசாகி 2 வருஷத்துக்கு மேல ஆகியும். 1.50 லட்சம் கூட கலெக்ஷன் ஆகவில்லை. கேட்டா, 'கடைகளுக்கு கொடுத்த இடத்தில் இருந்து இன்னும் பணம் வரவில்லை அங்கிள்' என்று சஞ்ஜை சொல்வார். ரொம்ப நெருக்கி கேட்டால் 5,000, 10,000 ஆயிரம் வரும். அதுவும் ஒரு 30 - 40 தடவை போன் பண்ணிய பிறகு. இப்படியே 2 வருஷம் ஆகிவிட்டது. எனக்கு பொறுமை எல்லாம் போய் விட்டது. உண்மையிலேயே பணம் வரவில்லையா? இல்லை நான் ஏமாற்றப்படுகிறேனா? என்று எதுவும் புரியவில்லை. டைரக்டர் ரமேஷ் படம் எடுத்துக் கொடுத்ததோட அவர் வேலை முடிந்து விட்டதாக அவர் ஒதுங்கி விட்டார். பலபேர் என்கிட்டே சொல்லிட்டாங்க, அமாவாசை டிவிடி கடையில கிடைக்க மாட்டேங்குது என்று. இவருகிட்டே கேட்டா, விற்கவில்லை. இன்னும் அவர்கள் பணம் கொடுக்கவில்லை என்கிறார். கிறிஸ்துவுக்குள்ள வருகிறதுக்கு முன்னாடி அல்மோஸ்ட் நான் ஒரு படித்த ரவுடி. ஒரு முரடன். என் காரியம் முடிய நான் எந்த லெவலுக்கும் போவேன். அப்படிப்பட்ட ஒரு கேரக்டர்தான் நான்.

என் கிறிஸ்தவப் பண்புகளை இழந்தேன்!

கிறிஸ்தவத்தில் நான் நெறைய மாறியிருந்தாலும், அந்த பழைய வாசனை என்னை விட்டு இன்னும் போகவில்லை போல்

இருக்கிறது. ஏதாவது செய்து பணத்தை கறக்கணும் என்கிற ஒரு வெறியே எனக்குள் வந்துவிட்டது. இரவும் பகலும் எனக்கு இதே நினைப்பு. இதுனால என் நிம்மதி, பொறுமை, சந்தோஷம், சமாதானம் எல்லாமே போயிடுச்சு. இது என்னோட ஜெப வாழ்க்கையையும் பாதிச்சது. இப்போ பண்பட்ட என்னுடைய கிறிஸ்டியன் குவாலிட்டீசும் என்னை விட்டுப் போயிடுச்சு. எல்லாம் எதுனால? எல்லாம் இந்த பணத்துனால! லாபம் சம்பாதிக்கணும் என்றோ வியாபார நோக்கத்தோடோ இந்தப் படத்தை எடுக்கவில்லை. பாதித் தொகை கிடைத்தாலும் அந்த சிடி ரேட்டை பாதியாகவோ அப்புறம் முக்கால்வாசியாகவோ குறைக்கணும் என்று எனக்கு எண்ணம். ஆனால் டோட்டல் லாஸ் 6 லட்சம். ஆண்டவர் சமூகத்தில நான் ஒருநாள் கண்ணீர் விட்டேன். என்னால் ஜெபிக்க முடியவில்லை. எப்போதும் இதே பழி வாங்குகிற நினைப்பு. நிம்மதி போச்சு. அமைதி போயிடுச்சு. என்னை இதிலிருந்து விடுவியுங்கள் ஆண்டவரே என்று அழுதேன். பிறகு ஆண்டவர் உணர்த்தினார்.

மன்னித்தேன், மறந்தேன், இழந்ததைப் பெற்றேன்!

முதல்ல, உள்ளத்தில் இருக்கிற வெறுப்பு, பழிவாங்குகிற நெனப்பு, கோபம், எல்லாத்தையும் எடுத்து எறி. உன்னை ஏமாத்திட்டாங்கன்னு நீ நினைச்சியானால் அதை மன்னிச்சிடு. அவங்க ஏமாத்தினாங்கன்னா அதுக்குண்டான பலன் அவங்களுக்குக் கிடைக்கும். நீ பழிவாங்க துடியாச்சியானா அது உன்னைப் பாதிக்கும் என்றார். அப்பதான் என் மிஸ்டேக்கை நான் உணர்ந்தேன். முதல்ல நான் செஞ்ச தப்பு தேவ சித்தத்தை அறியாம மாம்சத்தில் முடிவெடுத்தது. ரெண்டாவது மனுசங்களை நம்பினது. மூணாவது கோபம், எரிச்சல், பழிவாங்குகிற நெனப்பு. ஒன்றுக்கும் இரண்டாவதுக்கும் ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்டேன். மூன்றாவதை என் உள்ளத்தில் இருந்து தூக்கி எடுத்துப் போட்டேன். அவங்க ரெண்டு பேருக்கும் உடனே ஒரு லெட்டரை எழுதினேன். இனி நான் இது விஷயமாக போன் செய்ய மாட்டேன். இஷ்டம் இருந்தா பணம் கொடுங்க. இல்லையா... நான் மீண்டும் கேட்க மாட்டேன்னு என்னுடைய சைடுல ஃபைலை மூடி விட்டேன். அதுக்கப்புறம்தான் நான் இழந்த அந்த நிம்மதி, அமைதி எனக்கு கிடைச்சு என்னால ஜெபமும் பண்ண முடிஞ்சது. 6 லட்சம் நஷ்டத்துல எனக்கு புத்தி கொள்முதல், ஒரு

பாடம்! அல்லேலூயா! கிறிஸ்துவுக்குள்ள இருந்தாலும் ஊழியம் செய்தாலும் சில சமயம் சில தப்பு பண்ணிடுறோம். அதுக்குண்டான பலனையும் அனுபவிச்சிடுறோம்.

பாஸ்டர் கூடுகையில் பேச வைத்தார்

தகுதி இல்லாத என்னையும் தேவன் தகுதிப்படுத்தி அதிகமான திருச்சபைகளில் மாத்திரமல்ல, அநேக பப்ளிக் மீட்டிங்குகளிலும், பைபிள் காலேஜ்களிலும், டி.வி., ரேடியோ, கேபிள் டி.வி. மட்டுமில்லாமல், பல பாஸ்டர்ஸ் மீட்டிங்குகளிலேயும் இந்த அடிமையை பேச வைத்துள்ளார். நல்ல சமாரியன் சர்ச் அமைப்பின் சீனியர் பாஸ்டர் ஜோசப் பாலச்சந்திரன் அவர்கள் சவுத்திலே இருக்கக் கூடிய ஊழியர்களின் ஐக்கியத்தில் மதுரையில் பேசுவதற்கு அழைத்தார். பிறகு சென்னையில ஓசன்னா டவர்ல வட தமிழகம் மற்றும் வட இந்தியாவின் ஐக்கியத்தில் உள்ள பாஸ்டர்களுக்காக மூன்று நாள் கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார். முதல் நாள் சீனியர் பாஸ்டர் பிரதாப் சிங், இரண்டாம் நாள் ஆவடி ஏசிஏ சீனியர் பாஸ்டர் தாமஸ்ராஜ் அவர்களையும், மூன்றாம் நாள் என்னையும் பேசும்படி ஏற்பாடு செய்திருந்தார். நான் அவரிடம் 'ஐயா பாஸ்டர் பிரதாப்சிங் எங்கே, மாஸ்டர் தாமஸ்ராஜ் எங்கே, நான் எங்கேய்யா என்று கேட்டேன். அவர் 'ஐயா அவங்க சொல்றது ஒரு பாணி! உங்களோட பாணி வேறு ஒரு மாதிரி! நீங்க தடாலடி மன்னன். சபையின் வளர்ச்சிக்கு என்ன தேவையோ, அதை நீங்க தயவு தாட்சண்யம் இல்லாம, நச்சுன்னு பிராக்டிக்கலா எடுத்து சொல்லுவீங்க. அதுனாலதான் உங்களைப் போட்டேன். வாங்க' என்றார். அவரு சொல்லிட்டாரு இருந்தாலும் எனக்குள்ள ஒரே தயக்கம்தான். ஜெபத்தோட பேசினேன். ஒரு 300 போதகர்களுக்கு மேலேயே இருந்தாங்க. நான் 26 வருஷம் ஏர்போர்ட்ஸ்ல இருந்தேன். அப்போ கவுண்ட்டர் இன்டெலிஜென்ஸ் ட்ரெயினிங் எடுத்து அந்த டிபார்ட்மெண்ட்டிலே 6 வருஷம் வொர்க் பண்ணினேன். அது ஒரு சிஐடி வேலை மாதிரி. யாரையுமே நம்பக் கூடாது. எல்லாத்தையும் சந்தேகத்தோடதான் பாக்கணும். எதையும் அலசி ஆராய்ந்து பார்த்துதான் நம்பணும். அப்படீன்னு எனக்கு பயிற்சி கொடுத்திருந்தார்கள். அதுனால என் கண்ணுலேர்ந்து எதுவுமே தப்பாது.

ஆண்டவர் என்னை ரொம்ப பெரிய சபை, சின்ன சபை என்று எல்லாத்திலேயும் பயன்படுத்தி இருக்காரு. அப்போ நான் பாக்குறேன். சில சபைகள் சில வருஷங்கள்ல நல்லா வளர்ந்திருக்கு. அதிகமான விசுவாசிகள் அங்கே இருக்காங்க. சில சபைகள்ல 8–10 வருஷம் ஆனாலும் போதுமான வளர்ச்சி இல்லை. ஏன்? காரணங்களை அலசிப் பார்த்தேன். பல விஷயங்கள் எனக்கு தெளிவா புரிஞ்சது. வளர்ந்த சபையின் வளர்ச்சிக்கு காரணம் அவங்க கீழ்கண்டவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தாங்க. மற்றவங்க இதுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கலை. அதுதான் காரணம்னு தெரிஞ்சது. அதையே எடுத்து மீட்டிங்கில சொன்னேன்.

1. எந்த சபையில் அதிகாலை ஜெபம் வைக்கிறாங்களோ அந்த சபை வளருது.
2. எந்த சபையில் ஆராதனைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாங்களோ அந்த சபை வளருது.
3. எந்த சபையில் கொயர் ஃபார்ம் பண்ணியிருக்காங்களோ அந்த சபை வளருது.
4. எந்த சபையில் நிறைய வாத்தியக் கருவிகள் பயன்படுத்து றாங்களோ அந்த சபை வளருது.
5. எந்த சபையில் சபை பாஸ்டர் நல்லா பாடுகிறாரோ அந்த சபை வளருது.
6. எந்த சபையில் வாலிபர்களுக்கு, வாலிப பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாங்களோ அந்த சபை வளருது.
7. எந்த சபையில் சீஷத்துவ பயிற்சி கொடுக்கிறாங்களோ அந்த சபை வளருது.
8. எந்த சபையில் விசுவாசிகள் ஊழியம் செய்யறதை ஊக்குவிக்காங்களோ அந்த சபை வளருது.
9. எந்த சபையில் மிஷனரிகளை உருவாக்கி அனுப்புறாங்களோ அந்த சபை வளருது.
10. எந்த சபையில் மிஷனரிகளை சப்போர்ட் பண்றாங்களோ அந்த சபை வளருது.

11. எந்த சபையில் விசுவாசிகளின் திறமைகளைக் கண்டறிந்து பயன்படுத்துகிறார்களோ அந்த சபை வளருது.

12. எந்த சபையில் கிராம ஊழியம், ஆஸ்பத்திரி ஊழியம், டிராக்ஸ் ஊழியம் செய்யுறாங்களோ அந்த சபை வளருது.

13. எந்த சபையில் 5 வகை ஊழியமும் இருக்குதோ அந்த சபை வளருது.

14. எந்த சபையில் வீட்டுக் கூட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாங்களோ அந்த சபை வளருது.

15. எந்த சபையில் 24 மணி நேரமும் சங்கிலித் தொடர் ஜெபம் நடக்குதோ அந்த சபை வளருது.

16. எந்த சபையில் வருஷத்துக்கு குறைந்தது 4, 5 உபவாச ஜெபம் (15 நாள், 21, 30, 40 நாள்) நடக்குதோ அந்த சபை வளருது.

17. எந்த சபையில் பைபிள் ஸ்டடி, பைபிள் குயிஸ் வைக்கிறாங்களோ அந்த சபை வளருது.

18. எந்த சபையில், சபையில் நடந்த அற்புதங்களை சாட்சி புத்தகமா, விசிடியா வெளியிடுறாங்களோ அந்த சபை வளருது.

19. எந்த சபையில் சமூக சேவைகள் செய்யுறாங்களோ அந்த சபை வளருது.

20. எந்த சபையில் ஸ்கூல் நடத்துறாங்களோ, பெண்களுக்கு தையல், மற்றும் கைத்தொழில்கள் கற்றுக் கொடுக்கிறாங்களோ அந்த சபை வளருது.

21. எந்த சபையில் வருஷத்துக்கு 2, 3 நற்செய்திக் கூட்டம், புறஜாதி மக்களுக்காக நடத்துறாங்களோ அந்த சபை வளருது.

22. எந்த சபையில் சபை பாஸ்டர்கள், ஜெப வீரராக, பாஸ்டரம்மா ஜெப வீராங்கனைகளாக இருக்கிறாங்களோ அந்த சபை வளருது.

23. எந்த சபையில் சபை பாஸ்டர் வரம் பெற்றவராக, பிசாசுகளை விரட்டுறவராக இருக்காங்களோ அந்த சபை வளருது.

24. எந்த சபையில் காணிக்கையில டிரான்ஸ்பெரன்டா இருக்காங் களோ அந்த சபை வளருது.

25. எந்த சபையில் பாஸ்டரின் பிள்ளைகள் ஊழியத்தில் உறுதுணையா இருக்காங்களோ அந்த சபை வளருது.

26. எந்த சபையில் வெளிப்படையான பாராட்டு, தனியாக உரியவரிடம் குறைகளை சுட்டுக்காட்டுதல் இருக்கோ அந்த சபை வளருது.

27. எந்த சபை சொந்த கட்டிடத்தில் இருக்குதோ அந்த சபை வளருது.

28. எந்த சபையில் நல்ல போக்குவரத்துக்கு ஏதுவான இடமாக இருக்குதோ அந்த சபை வளருது.

29. எந்த சபையில் கார், டூவீலர் பார்க்கிங்கிற்கு வசதியா இடம் இருக்கோ அந்த சபை வளருது.

30. எந்த சபையில் எஸ்சி, எஸ்டி காலனிக்குள்ளேயோ அல்லது அதன் வழியா வர்றதோ, போறதோ இல்லாதிருக்கிறதோ அந்த சபை வளருது.

31. எந்த சபையின் அருகில் நல்ல இன்டஸ்ட்ரி, அப்பார்ட்மெண்ட் இருக்கிறதோ அந்த சபை வளருறது.

சபைகள் என்ன செய்யணும்?

இப்பொழுது என்னை நற்செய்தி அறிவிக்க அழைக்கும் சபைகளில் எல்லாம் நல்ல அறுவடையை தேவன் கட்டளையிடுகிறார். ஒவ்வொரு சபைகளிலும் புதிய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு சேர்க்கப்படுகின்றனர். அதற்கு காரணம் சில வழிமுறைகளை நான் பின்பற்ற வைக்கிறேன். கன்வென்ஷனுக்கு ஒரு 40 நாட்களுக்கு முன்பாகவே சபை விசுவாசிகள் அனைவரிடமும் ஒரு பேப்பரை (ஏ4 சைஸ் பேப்பரை நான்காக கிழித்து) கொடுத்து, முதலில் அவர்களின் பெயர், செல் நம்பர் எழுதணும். பிறகு யார் யார் இரட்சிக்கப்படணும்னு நினைக்குறாங்களோ, அவங்க பெயர், அவங்க என்ன உறவு (எதிர் வீடு, பக்கத்து வீடு, நண்பர்கள், உறவினர்கள், உடன் பிறந்தவர்கள், உடன் வேலை பார்ப்பவர்கள்) எனக் குறித்து ஒரு10 பேர் பெயரை ஒரு ஞாயிறு ஆராதனையில் அத்தனை பேரிடமும் கண்டிப்பா எழுதி வாங்கிடணும்.

1. அந்த லிஸ்ட்டை அப்படியே ஜெராக்ஸ் எடுத்து, ஒரிஜினலை அவங்க பைபிள்ல வச்சுக்க கொடுத்து ஃபேமிலி பிரேயர்ல அந்த லிஸ்ட் மேல குடும்பத்தில் இருக்கிற எல்லாரும் கையை வச்சு ஜெபம் பண்ணணும்.

2. ஒரு மாடல் நோட்டீஸ் நான் தருவேன். அதுல என்ன மாற்றங்கள் செய்யணுமோ அதை செய்துக்கிடலாம். 'முக்திக்கு வழி – உண்மையான கடவுள் யார்? – மனுஷ வாழ்க்கையிலே ஏன் இத்தனை துன்பம், துயரம், நோய் பிரச்சனைகள்? – இதுக்கு என்ன காரணம்? – இதைப் போக்க என்ன வழி? – இந்த பூலோக வாழ்க்கை கொஞ்ச நாளைக்குத்தான். அதுக்குப் பிறகு ஒரு நித்ய வாழ்க்கை இருக்கு. அதை எங்கே கழிக்கப் போகிறோம்? சொர்க்கத்திலா? அல்லது நரகத்திலா? – சொர்க்கம், நரகம் குறிச்சு நம்ம இந்திய வேதங்கள் என்ன சொல்கிறது? – சொர்க்கம் போக என்ன செய்யணும்? – இந்த கேள்விகளுக்கு விடை காண இந்து மத வேதங்களை நன்கு கற்றுக் தேர்ந்த சுவி. டாக்டர் எஸ்.தாயப்பனின் சாட்சி, செய்தியகள் மூலமாக விளக்கம் பெற உங்கள் நண்பர்கள், உறவினர்களுடன் கண்டிப்பாக வாருங்கள் – இடம், தேதி, நேரம், தொடர்புக்கு: பாஸ்டர் பெயர், கைபேசி எண்.

3. சபையில் 21 நாள், 30 நாள், 40 நாள் உபவாசம் அல்லது மீட்டிங் தேதி வரை உபவாசம் வைக்கணும்.

4. சபையில் இப்போ 100 பேரு இருக்காங்கன்னா, அவங்களை ஏ, பி, சி என குரூப்பா பிரிக்கணும். ஒரு குரூப்புல 10 பேர் இருக்கட்டும்.

5. ஒவ்வொரு குரூப்புகிட்டயும் ஒரு 10 லிஸ்ட்டைக் கொடுக்கணும்.

6. குரூப்புல இருக்கிற ஒவ்வொருத்தரும் தனித்தனியா இந்த லிஸ்ட்ல இருக்கிறவங்க பேரை சொல்லி சொல்லி ஜெபிக்கணும்.

7. ஆண்டவரே, நாங்க கார் கேக்கலை, பங்களா கேக்கலை, இந்த ஆத்துமா எங்களுக்கு வேணும். நாங்க போயி மீட்டிங்கிற்கு கூப்பிடும்போது மாட்டேன்னு அவங்க சொல்லக் கூடாதுன்னு ஜெபிக்கணும்.

8. சபையில இருக்கிற 100 பேரும் ஆளுக்கு 10 பேர் எழுதிக் குடுத்திருந்தாங்கன்னா 1000 பேர் ஆச்சு. 1200 இன்விடேஷன் பிரிண்ட் பண்ணுங்க. 10பேர் எழுதிக் கொடுத்தியா, இந்தா 10 கார்டு + 2 கார்டு வச்சுக்கோங்க. இதை உன்னோட பெண்ணுக்கு, பையனுக்கு கல்யாணம்னா எப்படி கூப்பிடுவ, அதுமாதிரி இந்த இன்விடேஷனை ஒரு தாம்பளத்தில் வச்சு, வெற்றிலை, பாக்கு, ஒரு சீப்பு பழம் வச்சு, ஃபேமிலியோட போயி கூப்பிடு. 6 மணிக்கு மீட்டிங். 5.30 மணிக்கு ரெடியாய் இரு. நான் வந்து கூட்டிட்டு வாரேன்னு ஒரு ஆட்டோவோ, டாக்சியோ எடுத்திட்டுப் போ. கிறிஸ்தவர்களுக்கும் வெற்றிலை பாக்குக்கும் என்ன சம்பந்தம்னு கேக்கக் கூடாது. நாம கூப்பிடுறது யாரு? நம்ம பேரன்புக்கு உரிய இந்து சகோதர, சகோதரிகள். சும்மா அப்படியே அசந்து போகணும். என்னோட சொந்தபந்தம் கூட கல்யாணத்துக்கு இப்படி வந்து கனம் பண்ணி கூப்பிடலப்பா என்று அவன் சொல்லணும். நினைக்கணும். வரமாட்டேன்னு எந்த ஒரு ஜால்சாப்பும் சொல்லக் கூடாது. அப்படிக் கூப்பிடு.

9. 1200 கார்டு டிஸ்டிரிபியூட் பண்றதுல ஒரு 200, 100பேர் வரட்டுமய்யா. அவங்க கண்டிப்பா தொடப்படுவார்கள். ஏன்னா நான் நீங்க மதம் மாற வேண்டாம். கடவுளை எதுக்கு ஒரு மதத்துக்குள்ள பாக்குறீங்க? இயேசு ஒரு மதத் தலைவர் அல்ல. ஒரு மதத்தை ஸ்தாபிக்க அவர் பூலோகம் வரலை. கிறிஸ்தவம் ஒரு மதமே அல்ல. ஒரு மார்க்கம். நம்மை எல்லாம் படைச்ச அந்த பரமேஸ்வரனோட இருந்த உறவை நம்மோட பாவத்தினால இழந்து போயிட்டோம். அதை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டக் கூடிய ஒரு மார்க்கம்தான் கிறிஸ்தவம். நீங்க இந்துவா இருந்தா அப்படியே இருங்க. முஸ்லீமா இருந்தா அப்படியே இருங்க. மதம்மாற வேண்டாம். (எங்கே மதமாற்றமம் செய்யறமோன்னு பயப்படுகிறார்கள்) உன்னோட சகல துன்பத்துக்கும் காரணம் பாவம். இதை யாராலயும், எதாலயும் போக்க முடியாது. இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லைன்னு இந்து மத வேதங்களே சொல்லுது. எந்த தெய்வமும் இரத்தம் சிந்தலை. இரத்தம் சிந்தின ஒரே தெய்வம் இயேசு கிறிஸ்து மாத்திரமே. அவரால் மட்டும்தான் நம்ம பாவங்களைப் போக்க முடியும். வேற யாராலேயும் இல்லை. உன்துன்பம் தீர எங்கே எங்கேயோ போனீங்க இல்லையா? இங்க வந்து பாருங்க. 10 வாரம் வாங்க. உங்க பிரச்சனை தீருதா இல்லையான்னு பாருங்க.

தீர்ந்தா தொடர்ந்து வாங்க. தீரலைன்னா வரவேண்டாம். இப்படி நைசா கொக்கி போட்டு கிறிஸ்துவுக்குள்ள இழுப்போம். இங்க இருக்கிறவங்கள்ளாம் யாருன்னு பாரு. டாக்டர்ஸ், இன்ஜினியர்ஸ், வக்கீல்கள், ஐடி புரொஃபஷனல்ஸ், எல்லா படிப்பும் படிச்சவங்களும் இருக்காங்க. எல்லாருமே இந்து மார்க்கத்தில் இருந்து வந்தவங்க. என் வந்தீங்க? ஆண்டவர் அப்ப்டி என்ன அற்புதம் செய்தார்னு அவங்கிட்ட கேளுங்க. அவங்க சொல்லுவாங்க. அதுக்கப்புறம் முடிவு எடுங்க. இந்த இயேசு உங்களுக்கு வேணுமா, வேண்டாமான்னு சொல்லுவேன். 10 வாரம் தொடர்ந்து சபைக்கு அவன் வந்தாலே, சத்தியம் உள்ளே போயிடும். அப்புறம் அவன் வெளியே போக மாட்டான். இந்த 10 வாரத்துக்குள்ள அவனை கிறிஸ்துவுக்குள்ள எப்படி பலப்படுத்தணும்னு என்னையும், என் குடும்பத்தை எப்படி பலப்படுத்தினாங்கன்னு முன்னாடி எழுதியிருக்கேன். அப்படி பலப்படுத்துங்க. சபை கண்டிப்பாக வளரும்.

10. மூணு நாள் கன்வென்ஷன்ல தினமும்'ஆல்ட்டர் கால்' கொடுப்பேன். அவங்க பேர், விலாசம், டெலிபோன் நம்பர், யார் மூலமாக சபைக்கு வந்தாங்க. (யாரும் அவங்களா சபைக்கு வரமாட்டாங்க. நம்ம சபை விசுவாசிதான் கூட்டிட்டு வரணும்). அவங்க ஜெபக் குறிப்புகளை எழுதி வாங்கிடணும். அந்த குறிப்புகளுக்காக ஜெபிக்க மறுபடியும் ஒரு தேதி கொடுத்து அவங்களை கூப்பிடணும். அதுக்குண்டான பிளான் எல்லாம் தெளிவா பாஸ்டர்களுக்கு சொல்லுவேன். இப்படியாக ஒவ்வொரு சபையிலேயும் நல்ல ஆத்தும அறுவடையை தேவன் தருகிறார்.

11. திருவேற்காடு ஏஜி சர்ச்சுல 325 பேர் புதுசா இரட்சிக்கப்பட்டாங்க. பெரம்பூர் ஏ.சி.ஏ.யில 400 பேரு, உளுந்தூர்பேட்டை ஏஜியில 103 பேரு. சிதம்பரம், தஞ்சாவூர், நெய்வேலி என்று இப்படி ஒவ்வொரு ஊரிலேயும் பல சபைகளிலேயும் தேவன் நிறைய ஆத்துமாக்களை தந்து சபையை பலப்படுத்தி வருகிறார்.

இன்னும் நெறைய விஷயங்களையும் எடுத்துச் சொன்னேன். எல்லாம் நான் பிராக்டிக்கலா செஞ்சு சக்ஸஸ் ஆன ஃபார்முலாக்கள்.

12. பப்ளிக் மீட்டிங் வைக்காதீங்க. செலவு ஜாஸ்தி. ரிசல்ட் கம்மி. மேலும் இப்போ இருக்கிற அரசியல் சூழ்நிலை நம்ம கிறிஸ்தவத்துக்கு எதிரா இருக்கு. தேவையில்லாத பல

பிரச்சனைகள் வர வாய்ப்பிருக்கு. அதனால சபைக்குள்ளேயே மீட்டிங் வையுங்கள். செலவு கம்மி. ரிசல்ட்டும் அதிகம். 100% கான்சென்ட்ரேஷன் இருக்கும். பிரச்சனை இல்லாம இருக்கும் என கூறுவேன். ஒரு கன்வென்ஷன் நடத்தினா, குறைஞ்சது ஒரு. 50 புதிய ஆத்துமாக்களாவது சபையிலே சேரணும். அப்படி செய்ய முடியும்னா, கன்வென்ஷன் வையுங்க. இல்லைன்னா கன்வென்ஷனே வைக்காதீங்கன்னு அழுத்தம் திருத்தமா சொல்லுவேன் கூறினேன்.

13. இது அத்தனைக்கும் உங்களோட ஜெபம் – இடைவிடாத உபவாச ஜெபம். முயற்சி, நீங்க நடந்துக்கிற விதம் எல்லாமும் சபையின் வளர்ச்சிக்கு மிக மிக முக்கியம். ஊழியர்களுக்கு பரிசுத்தம், நல்ல நடக்கை எல்லாமும் ரொம்ப முக்கியம். அடுத்தவர்களுக்கு போதிக்கிற நாம், முதல்ல நாம ஒரு சாட்சியாக வாழ வேண்டாமா? நான் 100% பெர்ஃபெக்ட்னு சொல்லலை. என் கிட்டவும் சில குறைகள் இருக்கு. கோபம் தாபம், எரிச்சல், வம்பு, வீம்பு, வைராக்கியம், கொஞ்ச தடித்த வார்த்தைகள் எல்லாமும் இருக்கு. ஆனா ஆண்டவர்கிட்டே கண்ணீரோட ஜெபிக்கிறேன். என்னை தகுதிப்படுத்தும்னு முழுமையா ஒப்புக் கொடுக்கிறேன். அப்படி ஒப்புக் கொடுக்கணும் எல்லாரும். அனுதினமும் நம்மை சுத்திகரிக்கணும். தேவன் எதிர்பார்க்கின்ற ஒரு லெவலுக்கு நம்மைத் தகுதிப்படுத்த நாம் தினமும் முயற்சி செய்யணும்.

14. 12 சீஷர்களை மட்டுமே கொண்டு எந்தவித வசதி வாய்பபும், தகவல் தொடர்பு வசதிகளும் இல்லாத சமயத்தில் நம்ம ஆண்டவர் இந்த உலகத்தையே ஒரு கலக்கு கலக்கலையா? இப்போ இங்க எல்லா வசதி வாய்ப்பும் இருக்கு. பைபிள் காலேஜ், மிஷனரி நிறுவனங்கள், தெருவுக்கு நாலு சபை, எல்லா மொழிகளிலேயும் பைபிள், போக்குவரத்து வசதி எல்லாமும் இருக்கு. ஆனா சுவிசேஷம் முழுமையாக பரவலை. காரணம் என்ன? மந்தை பெருக மகத்தான மாற்றங்கள் தேவை. பல வளர்ந்த சபையை உதாரணமா எடுத்துக் கூறினேன்.

சல்லி வேர் பலப்பட்டால் ஆணி வேர் பலப்படும்

வீட்டு கூட்டங்கள் பிரேயர் செல்லுக்கு முக்கியத்துவம் கொடுங்க. சல்லி வேர் பலப்பட்டால், ஆணி வேர் தானாகப் பலப்படும் என்று இப்படி பல பிராக்டிக்கலான ஆலோசனைகளை, அந்த பாஸ்டர்ஸ் மீட்டிங்குல தரும்படியா தேவன் இந்த அடிமையை

பயன்படுத்தினார். அநேக ஊழியக்காரர்கள், மிக நல்ல அட்வைஸ் கொடுத்திருக்கீங்க என்றனர். பாஸ்டர் ஜோசப் பாலச்சந்திரனுக்கும் மிகுந்த சந்தோஷம். அவர் கொடுத்த காணிக்கையை பார்த்து நானே அசந்து போயிட்டேன். ஊழியக்காரர்களை நன்கு கனம் பண்ணுகிற ஒரு தேவ மனிதர். தற்போது சற்று பலகீனமாக, உடல் நலம் சரியில்லாமல் இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். கண்ணீரோடு அவருக்காக ஜெபம் செய்தேன். நீங்களும் அவருக்காக, தேவராஜ்ஜியம் கட்டப்பட ஓடிக் கொண்டிருக்கும் தேவ ஊழியர்களுக்காக ஜெபம் செய்ய வேண்டுகிறேன்.

தேசத்தின் நன்மைக்காக ஜெபிப்போம்

இந்த புத்தகத்தை நான் எழுதிக் கொண்டிருக்கும் இந்த நாளில் கூட (30.4.2018) நான் கர்னாடகாவிலுள்ள மாண்டியா நகரத்திலிருந்துதான் எழுதிக் கொண்டு இருக்கிறேன். இந்த ஆத்தும பாரம், கரிசனை, கர்ப்ப வேதனை ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்குமே இருக்க வேணடும். அதற்காக நாம் அனைவருமே பாரத்தோடு ஜெபம் செய்வோம். விக்கிரஹ ஆராதனையினால் நமது தேசம் தற்போது அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. தேசத்திலே வறுமை, வன்முறை, தீவிரவாதம், அமைதியின்மை, நிர்வாகச் சீர்கேடுகள், பாலியல் கொடுமைகள், கொலை, கொள்ளை என சாத்தானின் கிரியைகள் தலைவிரித்து ஆடுகிறது. லட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் சபை பாகுபாடு இன்றி இதற்காக அதிகாலையில் ஜெபம் கொடுத்தால் மாத்திரமே இந்த அவல நிலையை மாற்ற முடியும். நாம் அனைவரும் முழங்கால் படியிட்டு ஜெபிப்போமா?

ஜெபம் செய்வோம்

பிதாவே..! எங்கள் தேசத்தை சந்தியுங்கள் தகப்பனே. மாநிலங் களுக்கு மத்தியில் ஒரு ஒற்றுமையை கட்டளையிடுங்கள் அப்பா. எல்லா மாநிலங்களிலும் உள்ள விவசாயிகளின் பிரச்சினைகளை சுமூகமாக தீருங்கள் தகப்பனே. தேசத்தின் எல்லா ஆறுகளையும், நதிகளையும் இணையுங்களப்பா. நீர் அருளிய யற்கை வளங்களை மாசுப்படுத்தாம, அவைவளை நாங்கள் பாதுகாக்க நல்ல புத்தியை எங்களுக்குத் தாருங்கள். நிர்வாகச் சீர்கேடுகள், லஞ்ச லாவண்யங்களைக் களைந்து அரசுகளை ஜனங்களின் அனைத்துத் தேவைகளும் சந்திக்கும்படியாக

செயல்பட ஆசீர்வதியுங்கள். வறுமையை நீக்குங்கள். இயற்கைச் சீற்றங்களை தடுத்து நிறுத்துங்கள். பெண்களுக்கும், குழந்தை களுக்கும் உரிய பாதுகாப்பை தந்தருளுங்கள் தகப்பனே. என் தேசத்திலுள்ள வாலிப தம்பி, தங்கைகளை பிசாசின் கிரியைகள், அந்தகார சக்தியின் வல்லமைகள், பொல்லாத ஆவியின் துரைத்தனங்களுக்கு, போதை, புகைப் பழக்க வழக்கத்திற்கு, சுயநல அரசியல்வாதிகளின் வஞ்சக வலைக்கு விலக்கி பாதுகாப்பு அருளுங்கள் தேவனே. எல்லா ஊர்களிலும், கிராமங்களிலும் பல தொழிற்சாலைகளை நிறுவ, படித்தவர்களுக்கு அங்கேயே வேலைகள் கிடைக்க உதவுங்களப்பா. எங்கள் தேசத்தில் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அமைதியையும், செழிப்பையும் கட்டளையிடுங்களப்பா. இயேசு கிறிஸ்துவினுடைய மாறாத இன்ப நாமத்தில் ஜெபிக்கிறோம், ஜீவனுள்ள எங்கள் நல்ல பரலோக பிதாவே! ஆமென்! அல்லேலூயா!

அன்புடன்,

உங்களுக்காக முழங்கால்களில் நிற்கும்

உங்கள் அன்பு சகோதரன்

எஸ்.தாயப்பன்

சென்னை
தேதி: 15.5.2018